# மனிதன் மா மனிதனாக...

எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார்



மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா ஆசிரியர் - [illegible]

அன்பு ஜே. எஸ். [illegible]க்கு

இம் நூல் [illegible]...

இவண்

பதிப்பாசிரியர்

20-06-05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன்

# மாமனிதனாக...


கலைச்சுடர் - லியாவுல் ஃபன்னான்

**எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார்**

பதிப்பாசிரியர் : **ஏ.எச்.எம். அஸ்வர்**



**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 24342926

தொலைநகல் : 0091-44-24346082

மின் அஞ்சல் : manimekalai@eth.net

WebSite : www.manimekalaiprasuram.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | * | **மனிதன் மாமனிதனாக...** |
| ஆசிரியர் | * | எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் |
| மொழி | * | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | * | 2005 |
| பதிப்பு விவரம் | * | முதல் பதிப்பு |
| உரிமை | * | பதிப்பாசிரியருக்கு |
| தாளின் தன்மை | * | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | * | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | * | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | * | xiv + 162 = 176 |
| விலை | * | **ரூ. 45.00** |
| அட்டைப்பட ஓவியம் | * | ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | * | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 26.<br>✆ 23725639 |
| அச்சிட்டோர் | * | ஸ்கிரிப்ட் ஆஃப்செட்<br>சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | * | தையல் |
| வெளியிட்டோர் | * | Free Lanka Newspapers (Pvt) Ltd.<br>(Publishers of "Navamani" newspapers)<br>156, Hospital Road, Dehiwela,<br>Srilanka. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனைவி

சித்தி செய்னப்

மற்றும்

குடும்பத்தினருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. மனிதன் ........ 1
2. ஆசை ........ 11
3. நிலையும் நினைப்பும் ........ 21
4. வெற்றி அதிர்ஷ்டம் ........ 27
5. நிம்மதி ........ 31
6. நம்பிக்கை ........ 35
7. பணம் ........ 41
8. முடியாட்சி அரசியல் ........ 44
9. குடியாட்சி ........ 52
10. ஜனநாயக அரசியல் ........ 60
11. சட்டம் ........ 68
12. போர் ........ 77
13. ஆட்சி ........ 85
14. தலைமை ........ 92
15. சமாதானம் ........ 101
16. உறவு ........ 108
17. சுதந்திரம் ........ 115
18. நாடு ........ 123
19. தொழிலாளி ........ 133
20. முதலாளி ........ 143
21. அதிகாரம் ........ 153


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி...

இலங்கையின் புத்தள மாவட்டத்தில் கற்பிட்டி எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.ஐ.எம். அப்துல் ஜப்பார் சிறு வயது முதலே கலைத் துறையில் தீராத ஆர்வம் கொண்டவர். வெற்றிவேந்தன், வல்லவன் ஆகிய பெயர்களில் எழுதியும், நடித்தும் வந்த இவர், இலங்கையில் ஒரு பிரபல எழுத்தாளரும், நாடக நடிகரும், வசனகர்த்தாவும், பாடலாசிரியரும், கவிஞருமாவார்.

தனது இருபத்து மூன்றாவது வயதில் 'கடமை' என்ற தலைப்பில் இவர் எழுதிய முதல் நாடகம், கொழும்பில் 'லயனல் வெண்ட்' அரங்கில் 1.1.1958-இல் மேடையேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுமார் இரண்டு தசாப்தங்களாக பல மேடை நாடகங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதிய முக்கிய பாத்திரங்களில் நடித்தும் உள்ளார். இவர் சொந்தமாக எழுதி, தயாரித்த மேடை நாடகங்களில் - மரணப் பரிசு, விந்தியத்தின் விளிம்பிலே, கறை படிந்த... நீதி தேவன் தீர்ப்பு, மானம் பெரிதென்பான் தமிழன், எழுச்சி வீரன் என்பன குறிப்பிடத்தக்கவை. பிற நாடக மன்றங்களுக்காக இவர் கதை, வசனமெழுதிய நாடகங்களில் சிங்க முழக்கம், தங்கத்தாய், வெற்றி யாருக்கு, விந்திய வீரன், மாண்டவன் மீண்டும் - என்பன மிகப் பிரபலமடைந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை நாடகங்களுக்குப் புறம்பாக வானொலியிலும் இவரது பங்களிப்பு கணிசமான அளவில் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். இவர் எழுதி, குரல் கொடுத்து நடித்த, வானொலியில் ஒலிபரப்பான முதல் நாடகம் 'இலட்சியவாதி' ஆகும். இந்நாடகம் 1960-இல் ஒலிபரப்பானது. இதிலிருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு வானொலி நிகழ்ச்சிகளில் இவரின் பங்களிப்பு இடம்பெற்றுள்ளது. முதல் முதலில் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிகளில் துப்பறியும் நாடகங்களை அறிமுகப்படுத்திய பெருமையும் இவரைச் சாரும்.

இவர் மொத்தமாக 241 வானொலி நாடகங்களையும், 16 இசைச் சித்திரங்களையும், 26 'ஊடுருவல்' என்ற தலைப்பிலான நிகழ்ச்சிகளையும் பிரதியாக்கம் செய்துள்ளார். மேலும் வானொலியில் இவரின் நூற்றுக்கும் மேற்பட்ட பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

பத்திரிகைகளிலும் இவரது விசாலமான பங்களிப்பைக் காணமுடியும். 1948இல் 'ஜிஹாத்' எனும் சஞ்சிகையில் 'தாய்க்குலத்தை இகழாதே' என்ற தலைப்பில் இவரது முதல் கட்டுரை பிரசுரமானது. அதிலிருந்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட இவரது கட்டுரைகள், கவிதைகள் -தினபதி, சிந்தாமணி, தினகரன், நம்நாடு, நவமணி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. அத்துடன் சில மெல்லிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

கலைத்துறையிலும், இலக்கியத் துறையிலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ள இவர் தனது இறுதிக் காலங்களில் 'நவமணி' தேசிய பத்திரிகையில் மாத்திரம் எழுதி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நவமணி'யில் 231 வாரங்களாக இடம்பெற்ற 'மனிதன்' தத்துவக் கட்டுரைத் தொடர் வாசகர்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்றது. (அந்தத் தொடரில் இடம்பெற்ற கட்டுரைகளின் ஒரு பகுதிதான் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது).

இவரால் வரகவி செய்கு அலாவுதீனின் வாழ்க்கைச் சரிதையை ஆதாரமாகக் கொண்ட முஸ்லிம் இலக்கிய நாடக நூலொன்று 'கல்பொலி கொண்ட கவி' எனும் தலைப்பில் புத்தளம் இளம் பட்டதாரிகள் சங்கத்தினால் 1997 நவம்பரில் வெளியிடப்பட்டது.

காவல் துறை அதிகாரியாக, ஆசிரியராக, தோட்ட சுப்ரிண்டண்டனாக பல்வேறு தொழில்களைப் புரிந்துள்ள இவர், அரசியலிலும் ஈடுபட்டு 1981ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் புத்தளத் தொகுதி மக்களால் அபிவிருத்தி சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது சேவைகளை கௌரவித்து புத்தளம் பட்டதாரிகள் சங்கம் 'கலைஞர் திலகம்' எனும் பட்டமளித்து கௌரவித்துள்ளது. 1992ஆம் ஆண்டில் முஸ்லிம் சமய கலாச்சார விவகார திணைக்களம் நடத்திய 'வாழ்வோரை வாழ்த்துவோம்' கலைஞர் கௌரவிப்பு விழாவில் அமைச்சர் கௌரவ ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களினால் 'லியாஉல் ஃபன்னான்' (கலைச்சுடர்) பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் இலங்கை அரசு கலைஞர்களுக்கு வழங்கும் அதி உயர் விருதான 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கலை, இலக்கியத் துறை ஈடுபாட்டுக்குக் காரணமாக இருந்தவர்கள் என்ற அடிப்படையில் முன்னாள் பாடசாலை அதிபர் ஏ.ஆர்.எம்.ஏ. காதர் அவர்களையும் மற்றும் தமிழ் ஆசிரியர் எஸ். கணபதிபிள்ளை அவர்களையும், வானொலியில் முஸ்லிம் சேவை பணிப்பாளராகக் கடமையாற்றிய எம்.எச். குத்தூஸ் அவர்களையும் நினைவு கூர்ந்து வந்த அதே நேரம் 1950களில் திராவிட முன்னேற்றக் கழக நூல்களும், சஞ்சிகைகளும், அறிஞர் அண்ணாவின் சிந்தனைகளும் தனது சிந்தனைகளைத் தட்டி எழுப்பின எனப் பெருமைப்பட்டு வந்தார். திடீர் சுகயீனம் காரணமாக அன்னார் 20.06.2004 ஆம் திகதி இறையடி எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயவுரை



'மனிதன்' தந்த பேனா மன்னனுக்கு மகுடம் சூட்டுவோம்!

எல்லாம் வல்ல அல்லாஹ் படைத்த ஜீவராசிகள் அனைத்திலும் உன்னதமான படைப்பே மனிதன் என்பவன். பகுத்தறிவை ஆறாவது அறிவுப் பரிசாகப் பெற்றுள்ள மனிதனின் சிறப்புகளைச் சீராட்டுவதென்றால், பேரேடு கொள்ளாத பெருமைகள் குவிந்து கிடக்கின்றன. குவிந்த பெருமைகளின் உச்சத்தில் எழுந்து நிற்கும் மனிதனைச் சுற்றியே கதைகள் பிறந்துள்ளன; காவியங்கள் மலர்ந்துள்ளன; ஆட்சிகள் அமைந்துள்ளன; போர்கள் எழுந்துள்ளன. சமயங்களும் - சாத்திரங்களும் - சூத்திரங்களும்கூட அந்த மனிதனுக்காகவே தோன்றியுள்ளன என்பதை மனித வரலாறு மறக்காமல் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

இத்தகைய சீரும் சிறப்புமிக்க மனிதனைப் பற்றித்தான், ஒரு பேனா மன்னன் இலங்கையில் 'நவமணி' வாராந்தரியில் வாராந்தம் சலிக்காமலும், சளைக்காமலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு உப தலைப்புகளில் பல அத்தியாயங்கள் எழுதி வந்தான். கவிஞர் உமர்கையாம் பாடிய வரிகளைப் போன்று 'விதியின் கைதான் ஓய்ந்ததே' தவிர, அந்தப் பேனா மன்னன் எழுதிய கை ஓயவேயில்லை. ஆம்... மனிதனைப் பற்றி தொடராக்கம் படைத்த அந்தப் பேனா மன்னன் வபாஃத்தாகும் (இறக்கும்) வரை எழுதிக் கொண்டேயிருந்தான். அந்தப் பேனா மன்னன் யார் தெரியுமா?

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சராக நான் பணியாற்றிய காலத்தில், சமூக நலனுக்காக கலை - இலக்கிய பங்களிப்புச் செய்தோரை - அவர்கள் வாழும் காலத்திலேயே வாழ்த்தும் வாய்ப்புக் கிட்டியது. இந்த 'வாழ்வோரை வாழ்த்தும்' வரிசையில் என்னால் 'கலைச்சுடர்' (ஸியாவுல் ஃபன்னான்) எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட, புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் அவர்களே, மேலே குறிப்பிட்ட பேனா மன்னராவார். அது மட்டுமல்ல, அவருடன் இணைந்து இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் பல நாடகங்களில் உரை இசை நிகழ்ச்சிகளின் '60-வது களில் நானும் பங்கு பற்றிய நினைவுகள் பசுமையுடன் இன்னும் என் மனதில் பளிச்சிடுகின்றது.

'கலைச்சுடர்' ஜப்பார் அவர்கள் பல்கலைக் கழகத்தில் பயின்ற பட்டதாரியோ, பேராசிரியரோ அல்ல. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அன்றைய 'ரேடியோ சிலோன்' முஸ்லிம் நிகழ்ச்சியின் இஸ்லாமிய வானொலி நாடகங்களில் பங்கேற்ற - ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த - வானொலி நேயர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட பிரபல கலைஞன் மேடையில் ஏறிவிட்டாலோ... தமிழ்நாட்டு திராவிட இயக்கத்தின் தலைவர்களைப் போன்று அழகு தமிழிலும், அடுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலும் துடுக்காகப் பேசி, சபையைத் தன்பால் ஈர்க்கவல்ல பேச்சாளன் இந்தக் 'கலைச்சுடர்' ஜப்பார் என்பதை அந்த நாள் ஞாபகங்களை அசைபோடுவோர் அறிவர்.

ஒரு வானொலிக் கலைஞன் என்று மட்டுமே பெரும்பாலும் ஊருலகம் அறிந்து வைத்திருந்த அந்தக் 'கலைச்சுடர்' ஜப்பாரின் உள்ளத்துள், ஒரு எழுத்தாளன் இவ்வளவு காலமும் ஒளிந்துகொண்டு, எவருக்கும் தெரியாவண்ணம் மறைந்தவாறு இருந்திருக்கிறான். அந்த எழுத்தாளனை வெளிக் கொணர்ந்து, வெளிச்சமிட்டுக் காட்டிய 'நவமணி'க்கு இவ்வேளை நன்றி சொல்ல வேண்டும்.

எழுதுகோல் ஏந்தி எழுதுபவன் எல்லாம் எழுத்தாளனாகி விட முடியாது. எழுத்தை ஆள்பவன் - அதிலே மன்னனாக மின்னுபவனே பேனா மன்னனாவான். நம் 'கலைச்சுடர்' ஜப்பார் எழுதியுள்ள 'மனிதன்' என்ற தொடராக்கத்தை ஒரு தரம் வாசித்தால் புரிந்து கொள்வோம். சாட்சாத் இந்த கற்பிட்டி மண்ணின் மைந்தன் 'கலைச்சுடர்' ஜப்பார், ஒரு பேனா மன்னனேதான் என்பதில் தெளிவாவோம்.

ஆஹா...! ஒவ்வொரு அத்தியாயத்திலும் எவ்வளவு விஷயங்கள்; எத்தனை தகவல்கள்... பேச்சைப் போலவே எழுத்திலும் அழகு தமிழில் அடுக்கடுக்காய் வார்த்தைகள் வந்து விழும் சொற்கோலம்... வாசிப்போரை வசப்படுத்தி விடுகிறது... இவ்வளவு விஷயங்களை மனிதன் எங்கிருந்து பெற்றான் என்ற ஆச்சரியம்... ஒவ்வொரு அத்தியாயத்திலும் மலைக்கச் செய்கிறது. புத்தகம் - புதினத்தாள்கள் வாசிப்பதிலும், வானொலி - தொலைக்காட்சி கேட்பதிலும், பார்ப்பதிலும் இந்த 'மன்னன்' எவ்வளவு விஷயங்களை உள்வாங்கி வைத்திருப்பான் என்பதை வாசகர்கள் எளிதில் உணர்ந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாதாரண பொலிஸ் உத்தியோகத்தராக ஆரம்பத்தில் முகம் காட்டிய இந்தக் கலைஞன், மனித உணர்வுகளை - உத்வேக எண்ணங்களை - மகோன்னத மனங்களை - கோலோச்சும் குணங்களை எவ்வளவு லாவகமாகவும், லாவண்யமாகவும் தனது 'மனிதன்' தொடராக்கத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஆச்சரியப்படும்போது, நம்மையறியாமலே மனம் இந்த பேனா மன்னனை மனசுக்குள் பாராட்டுகிறது.

இறைவன் தன்னை வெளிப்படுத்துவதற்காகவே மனிதனைப் படைத்தான் என்பது ஆன்மிக சிந்தனை. அதற்கேற்ப அல்லாஹ் தன்னுடைய சில குணநலன்களை மனிதனுக்கும் தந்தேயிருக்கின்றான். உதாரணத்துக்கு, இறைவன் தன் அடியார்களுக்கு வாரி வழங்கும் வள்ளல். இப்படிக் கொடுக்கும் குணத்தை தன் பிரதிநிதியாகிய மனிதனுக்கும் தந்திருக்கின்றான் அல்லவா?

அத்தகைய மனித விழுமியங்களை வெளிச்சமிட்டுக் காட்டி, அவற்றுக்கு வார்த்தை வடிவம் தருவதிலேயே இந்தக் கலைச்சுடர் ஜப்பார் பெரு வெற்றி பெற்றிருக்கின்றார் என்பதை, இந்தத் தொடராக்கத்தின் ஒவ்வொரு வரியும் வக்கனையாய்ச் சொல்கிறது.

அழகான உதாரணங்கள்; அருமையான உவமானங்கள்; பழகு தமிழ்ச் சொற்கள் ஒருபுறம்; பரிச்சயமில்லாத பதங்கள் மறுபுறம்; எதுகை - மோனையுடன் எழுந்து நிற்கும் வசனங்கள்... படிப்பவர் எந்த வயதினரானாலும், ஆக்கத்தோடு ஒன்றைச் செய்துவிடும் உத்தியை இந்தக் 'கலைச்சுடர்' மன்னன் எங்கே கற்றாரோ?

இவ்வளவு காலமும் இந்த மன்னன் எழுதாமல் இருந்ததேன்? எழுத்துலகு அறிந்து பயன்படுத்தாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதேன்? என்ற இரு வினாக்களுக்கும் விடை தெரியவில்லை. என்றாலும், இந்த ஒரு 'மனிதன்' நூலே இந்த ஜப்பாருக்கு விரியுலகில் விலாசம் தந்துவிடும். எழுதியவர் என்றோ மறைந்துவிட்டார். ஆனால், அவர் எழுதிய எழுத்துக்கள் நிகழ்காலத்திலும் - எதிர்காலத்திலும் 'கலைச்சுடர்' ஜப்பாரை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். காலமெல்லாம் வாழப்போகும் 'மனிதன்' தந்த இந்த பேனா மன்னனுக்கு எந்நாளும் மகுடம் சூட்டுவோம். இக்கட்டுரைகளை நூலாக்கம் செய்ய விருப்போடு அனுமதி தந்த 'நவமணி' பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர் அவர்களுக்கு எனது உளம் நிறை நன்றிகள். அச்சுலகில் கோலோச்சும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கு முக்கியமாக அன்பின் தம்பி ரவி தமிழ்வாணனுக்கு ஓர் அபூர்வ 'குழந்தையை'ப் பிரசவித்ததற்கு என் வாழ்த்துக்கள்!

- அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர்

*பாராளுமன்ற விவகாரத்துறை முன்னாள் அமைச்சர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி



நவமணி தேசிய பத்திரிகையின் ஆசிரியர் ஜனாப் எம்.பி.எம். அஸ்ஹர் அவர்களுக்கும்,

இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு ஆரம்பத்திலிருந்தே ஆர்வமும் உற்சாகமும் காட்டிய கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுக்கும்,

பிழை திருத்தத்திலும், மற்றும் பின்னட்டை குறிப்பை வழங்கிய ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியரின் மிக நெருங்கிய நண்பரும், கலை, இலக்கிய ஆர்வளருமான கற்பிட்டி ஏ.எம்.ஏ. வஹாப் அவர்களுக்கும்,

புத்தளம் இளம் பட்டதாரிகள் சங்க உறுப்பினர்களுக்கும் மற்றும் கற்பிட்டி வரலாற்று தொகுப்புக் குழு உறுப்பினர்களுக்கும்,

நவமணியில் வெளியான 'மனிதன்' தொடரை தொடர்ந்து 231 வாரங்களுக்கு எழுத ஆதரவும், ஆக்கபூர்வமான விமர்சனங்களும் தந்துதவிய அத்தனை வாசக நெஞ்சங்களுக்கும்,

பல வகையில் இப்புத்தகத்தை வெளிக்கொணர உதவிய அத்தனை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியும், வாழ்த்துக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மாமனிதனாக...

## மனிதன்



உலகத்தைப் படைத்த இறைவன் பல உயிர்களையும் படைத்தான். உயிரினங்களைப் படைத்த இறைவன் மனிதர்களையும் படைத்தான்.

தன் படைப்புகளில் மனிதன்தான் மகத்தான சக்தி உள்ளவன் என்றும் இறைவன் இயம்பிவிட்டான்.

இப்படி இயம்பி விட்டதால், அந்த இறைவன் தலையிலேயே கை வைத்து விடலாம் என்று நம்பிவிட்டான் மனிதன்.

எடுப்பார் கைப்பிள்ளைதான் இறைவன் என்ற எண்ணத்தில், தான் கேட்டது கிடைக்க வேண்டும் என எண்ணுகிறான். என் கேள்வியிலேயே மடக்குவேன் என்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் சாப்பிட வேண்டிய குழந்தைக்கு பாதாம் அல்வா கொடுக்கமாட்டார்கள்.

மண்வீடு கட்டும் பருவத்தில் மாளிகை கட்டிய குழந்தை உலகத்தில் இல்லை. நேசரியில் படிக்க வேண்டிய வயதில் ஜீ.சீ.ஈ. எழுதியதாக எந்தச் சரித்திரத்திலும் இல்லை.

கடலில் ஓடவேண்டிய கப்பல் தரையில் ஓடாது.

தரையில் ஓட வேண்டிய 'கார்' கடலில் ஓடாது.

பால் தரும் பசுவை பட்டாளத்தில் சேர்த்து துப்பாக்கி தூக்க வைக்க நினைத்தால் அது தப்பான நினைப்பு.

பசு பால் தரும்! பக்க வாத்தியமா வாசிக்கும்?

இப்படியான தப்பான நினைப்புகள் மனிதனைத் தப்பான வழியில் தள்ளி விடுகின்றன.

தகுதிக்கு ஏற்றபடிதான் இறைவன் கொடுக்கிறான்.

அப்பனுக்குத் தெரியும் பிள்ளை எப்படிப்பட்டவன் என்று!

ஆண்டவனுக்குத் தெரியாதா? அவன் படைத்தவன் எப்படி இருப்பான் என்பது!

அப்படி இருக்க இறைவன் எப்படிக் கொடுப்பான்?

கொடுக்கவில்லை என்பதற்காக இறைவனைத் தூற்றுகிறான். கிடைத்தால் மறந்துவிடுகிறான்.

தூற்றுகிறானே என்பதற்காகக் கொடுத்தாலும் போற்றக் கூடிய விதத்தில் நடந்து கொள்வதில்லை.

இதைத் தெரிந்துதான் தரத்திற்கு ஏற்ற விதத்தில் கூலி கொடுக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்திற்கு ஏற்ற பதவி கொடுக்கிறான்.

ஆண்டவனிடம் சிபாரிசுக்கு இடமில்லை.

ஆண்டவனே இப்படிச் செய்யும்போது அரசு கூட சிபாரிசுக் கடிதம் இல்லாமல் தகுதிக்கு ஏற்ற விதத்தில் பதவி கொடுக்கிறது.

கடவுள் வகுத்த சட்டம் இருக்கிறதே அதைப் பார்த்துத்தான் ஒரு நாடும் சட்டங்களை உருவாக்குகிறது.

நாட்டின் சட்டம் காலத்திற்கு ஏற்ற விதத்தில் மாறும்! கடவுள் வகுத்த சட்டம் மாற்ற முடியாது. வகுத்தவன் மாற்றுவதும் இல்லை.

ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை உருவாக்கி விட்டு என்னைத் தோற்கடிக்க எவன் இருக்கிறான் என்கிறான் ஒருவன்.

அடுத்த ஒலிம்பிக்கில் அவனைத் தோற்கடித்து விட்டு ஆர்ப்பரிக்கிறான் மற்றொருவன்.

தோற்றவன் கடவுளே என்கிறான். வென்றவன் நான் என்கிறான்.

உடல் உறுதியாக இருக்கும் வரையில் நான் என்னும் மனிதன், ஒரு நரம்பு சுளுக்கும்போது நாதனே என்கிறான்.

இறைவன் கொடுத்த ஆறாம் அறிவை தேறா அறிவாக ஆக்கிக் கொண்டான். அறுத்துக் கெடுக்கும் அறிவான ஏழாம் அறிவு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டான்.

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் முன்னேற்றப் பாதையின் முழு அடி என நினைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அடி ஒவ்வொன்றும் எத்தனை பேர் இதயத்தில் இடியாக விழுகிறது என்பதை எண்ணுவதே இல்லை.

அவன் எண்ணுவதெல்லாம் பணத்தை!

பணத்தை எண்ணுகிறவனுக்கு வதைப்போர் துன்பத்தை எண்ண முடியாது. வர்த்தகத்தில் நாணயம் வேண்டும் என்று வள்ளல் முகம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பண நாணயத்தை சேர்க்க இவன் சுய நாணயத்தை தூக்கில் தொங்க விடுகிறான்.

சுயநாணயத்தை தூக்கில் தொங்க விட்டதாலோ என்னவோ, சிலருக்குத் தூக்கு மேடையையே சொந்தமாக்கி விடுகிறான் இறைவன்.

அடுத்துக் கெடுக்கும் அறிவால் மனிதனை ஏமாற்றுகிறான்.

கண்ணில் படும் அரசை ஏமாற்றும்போது கண்ணில் படாத கடவுளை ஏமாற்ற முடியாதா? என்கிறான்.

நகைக் கடை வியாபாரியும் கடவுளே என்றுதான் கடையைத் திறக்கிறான். சவப்பெட்டி விற்பவனும் கடவுளே என்றுதான் கடையைத் திறக்கிறான். அவன் மணம் நடக்க வேண்டும் என எண்ணிக் கடையைத் திறக்கிறான். இவன் பிணம் விழ வேண்டும் என எண்ணிக் கடையைத் திறக்கிறான். இருவர் எண்ணமும் ஈடேறும் விதத்தில் இறைவன் நடந்து கொள்கிறான். மனிதன் அழிவை மட்டும் பார்க்கிறான். தான் அழியக்கூடாது. மற்றவன் அழிய வேண்டுமென்று எண்ணுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் விற்பனைக்கு வைத்திருக்கும் நகை சுத்தமான தங்கமோ என்னவோ அவன் எண்ணம் சுத்தமாக இருக்கிறது.

சவப்பெட்டி விற்பவன் எண்ணம் மற்றவன் மரணத்தை விரும்புகிறது. அதனால் அவன் எண்ணம் தெளிவாகத் தெரிகிறது.

சில்லறைக்கடை வியாபாரியின் எண்ணம் நமக்குத் தெளிவாகத் தெரிவதில்லை. வாங்கி உண்பவனுக்கு, வாந்திபேதி வரும், வயிற்றுவலி வரும், வாழ்வு முடிந்தாலும் உணவுப் பொருளில் கலப்படம் செய்தவனுக்கு உறுத்தாது. காரணம், கலப்படம் பண்ணுகிறவன் தன் வயிற்றைத்தான் பார்க்கிறான். பணத்தைப் பார்க்கும் கண்ணுக்குப் பசித்தவன் வயிறு தெரியாது.

பிணத்தைப் பார்த்தால் கூட பேதலிக்க மாட்டான். அவன் குணம் அப்படி.

ஊதுபத்தி பெட்டியில் மணத்தைப் பூசிவிட்டு, குச்சியில் பூசாதவனுக்கு பக்தி இருக்காது. குறுகிய புத்தி இருக்கும்.

பக்தி இருப்பதுபோல் பாவனைக் காட்டுவான் - குறுகிய புத்தி இருப்பதை மறைக்க.

தரமான பொருளை ஒருவன் தயாரிக்கிறான். அதற்குப் போட்டியாக அதே பொருளை மற்றவனும் தயாரிக்கிறான்.

முன்னவன் பொருளில் தரம் இருக்கும். பின்னவன் பொருளில் தரம் இருக்காது.

பார்வைக்கு ஒரே மாதிரி இருக்கும். ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் ஒரே விலை. எடுப்பவனுக்கோ தடுமாற்றம் இல்லாத நிலை. போட்டிருக்கும் எழுத்து, பொறித்திருக்கும் முத்திரை, அமைந்திருக்கும் வண்ணம் ஒரே மாதிரி இருக்கும்.

தடுமாற்றம் இல்லை வாங்குபவனிடம் என்பதை விற்பவன் உணர்கிறான். வாங்க வந்தவன் தலையில் வகையாகக் கட்டுகிறான். குளிர்பானம் ஒன்றைக் கொடுத்து ஆளைக் 'கூல்' பண்ணுகிறான். தரத்தைப் பற்றிக் கேட்க இவனுக்கு தைரியமே வராது. ஐவுளிக் கடையில் இருந்து சாராய போத்தல் வரை, 'டுப்லிகட்' நிறைந்து விட்டது.

அரசு முத்திரை குத்தப்பட்டால் அது தரமான பொருள் என்று விளம்பரப் படுத்துகிறார்கள்.

டுப்லிகட் முத்திரையை இவன் குத்தி விட்டு விற்று விடுகிறான். இத்தனைக்கும் காரணம் மனிதன் மனிதனாக இல்லை. மனிதன் இரண்டு சாட்சிகட்குப் பயப்பட வேண்டும். ஒன்று இறைசாட்சி - மற்றது மனச்சாட்சி. இறைவன் சாட்சி சொல்ல எழுந்து வர மாட்டான். மனச்சாட்சியைக் கொன்று விட்டான். இறைசாட்சி தன்னைத் தாக்கும் என்பதை மறந்து விட்டான். தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற துணிவை துணையாக வைத்துக் கொண்டான்.

அதிகாரியைக் கூட கையில் போட்டு விடலாம் என்ற எண்ணத்தை பணத்தை வைத்தே வளர்த்துக் கொண்டான்.

இதை எல்லாம் பார்த்து, "யாரடா மனிதன் இங்கே, அழைத்து வா அவனை இங்கே" என்று கவியரசன் கதறுகிறான்.

எந்த நோக்கத்தில் இறைவன் மனிதனைப் படைத்தானோ அந்த மனிதன் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் இருக்கின்றானா என மனிதன் கேட்கிறான். மனிதன் இருக்கின்றானா என இறைவன் கேட்கிறான். இறைவனால் கூட மனிதனை அடையாளம் காட்ட முடியுமா என்று சந்தேகம் எழுகிறது.

மனிதன் மனிதனாக இல்லை. அப்படியாவது கண்ணில்பட்டாலும் அவன் புனிதனாக இல்லை.

குடும்பத்துக்குள்ளேயே குத்து வெட்டுகள். அப்பன் வழியில் பிள்ளை செல்வதில்லை. பிள்ளை செய்யும் தப்புக்கு பெற்றவன் தட்டிக் கொடுக்கிறான். அப்பன் பிள்ளையை தப்பு பண்ணத் தூண்டுகிறான். சில இடங்களில் அப்பன் சொல்வதை பிள்ளை கேட்பதில்லை. தலைவன் சரியான வழியில் செல்வது தொண்டனுக்குத் துன்பமாக உள்ளது.

தலைவன் தவறு செய்ய வேண்டும் என்று தொண்டன் விரும்புகிறான். திருத்த வேண்டியவன் தீவிரவாதி ஆகிறான். திருந்த வேண்டியவன் திசை மாறிப் போகிறான். நல்லவற்றை நடைமுறைப் படுத்தினால் கெட்டவை என்று கெடுமதியோடு பேசுகிறான்.

பகுத்தறிவுக்குப் பாதை அமைக்க வேண்டியவன் போகாத ஊருக்குப் பாதை போடுகிறான்.

உதயத்தை நோக்கி ஓடவேண்டியவன் அஸ்தமனத்தை நோக்கி அதிவேகமாகச் செல்கிறான்.

நேசக்கரம் நீட்ட வேண்டியவன் மோசக்கரம் நீட்டுகிறான். பாசத்தோடு பார்ப்பவனைப் பாசாங்கு பண்ணுவதாகச் சொல்கிறான். முன்னுரை எழுத வேண்டியவன் முடிவுரை எழுத முன்னணியில் நிற்கிறான். தோளில் கையைப் போட்டால் பையில் பணத்தைத் தேடுகிறானோ எனப் பயம் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் என்று சொல்பவன் கையில் கோட்சேயிடம் 'இருந்தது' இருக்குமோ என்ற பயம் ஏற்படுகிறது.

பையில் எடுத்துச் செல்வது நலம் தரும் உணவா? நானூறு பேரை அழிக்கும் குண்டா என்ற அச்சம் ஏற்படுகிறது.

மனிதன் சிரித்தால் அன்புக்காகச் சிரிப்பா? அழிக்கும் சிரிப்பா? என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

புனிதம் கொஞ்ச வேண்டிய கண்களில் புலிப்பார்வை தெரிகிறது. கனிவு சுரக்க வேண்டிய நெஞ்சில் கயமைத்தனம் ஊற்றெடுக்கிறது. தாயின் பாதத்தில் சுவர்க்கம் இருக்கிறது என்பான். அந்தத் தாயை தன் பாதத்தால் உதைப்பான்.

தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை என்பான். அந்தக் கோயிலைப் பற்றி கவலைப்படமாட்டான்.

தாயில்லாமல் நான் இல்லை என்பான். நீ இருப்பதே எனக்குத் தொல்லை என்பான்.

கொம்புகள் உடையும் வரை சண்டை போடும் மாடுகள், பின்பு ஒன்று சேர்ந்து மேயத் தொடங்கிவிடும்.

இவன் வம்புத்தனத்தை வாரியே அணைத்துக் கொள்கிறான். பிரச்சினைகளை விடுவதில்லை. விலை கொடுத்து வாங்கி விடுகிறான்.

எண்ணற்ற துன்பங்களை எதிர்த்து வெல்ல வேண்டியவன், கணக்கற்ற கொடுமைகளை கணக்குப் பார்க்காமலே செய்கிறான்.

நாணயத்தை சேர்க்கும் எண்ணத்தில் இவன் நாணயம் நாற்றம் அடித்தாலும் கவலைப்படமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மயிர் விழுந்தால் உயிர் வாழாது கவரிமான். மானம் இழந்தாலும் இவன் வாழ விரும்புகிறான். மிருகத்திடம் இருப்பது மிருகத்தனம். இவனிடம் எப்படி வந்தது? மிருகத்திடம் இருந்தே பறித்து எடுத்துக் கொண்டான். மானத்தை விற்றான். மரியாதையை விற்றான். கொள்கையை விற்றான். மனம் போன போக்கில் மனிதன் போகிறான். நல்ல மனிதன் போன பாதையை மறந்து போகிறான். அமைதி என்பது அணு அளவும் இவனிடம் இல்லை. எதிலும் வேகத்தை விரும்புகிறான். நின்று நிதானித்து அளந்து ஆழமாக அடி எடுத்து வைக்க வேண்டியதை மறந்து விட்டான்.

பணம் சேர்ப்பதில் கூட படு வேகம் காட்டுகிறான். படிப்படியாக உயராமல் பறந்து உயர நினைக்கிறான். ஒரு நிமிடத்தில் ஒரு லட்சம் சேர்க்க நினைக்கிறான். அதற்காக எதையும் செய்கிறான். நன்மை தீமைகளை நினைப்பதில்லை. நீதி - நியாயம் இவனுக்குத் தேவையில்லாத ஒன்று. சட்டம் ஒழுங்கைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. வஞ்சகத்தை வலிய அழைத்துக் கொள்கிறான். ஏமாற்று ஒன்றையே மூலதனமாக வைத்து எதை எதையோ செய்கிறான். அரசை ஏமாற்றுவதும் அடுத்துக் கெடுப்பதிலும் ஆகக்கூடிய சுகம் காண்கிறான்.

கடத்தல் கைவந்த கலையாகிவிட்டது. மயக்கும் பொருளில் மனதைப் பறிகொடுத்து அதுவே சுவர்க்கம் என்கிறான். உலகத்தைப் பற்றி சிந்திப்பதில்லை.

உலகம் அழிந்தாலும் தான் வாழ வேண்டும் என எண்ணுகிறான். போரில் தான் புதுமை உண்டு என்ற சிலரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகள், பலரை திசை திருப்பியதால் ஊரே திண்டாடுகிறது.

இந்தத் திண்டாட்டம் சிலருக்குக் கொண்டாட்டமாக இருக்கிறது.

பாடப் புத்தகங்களைத் தூக்கி எறிந்துவிட்ட மாணவர்கட்கு என்ன செய்கிறோம் என்றே தெரிவதில்லை.

உல்லாசபுரி ஒன்றை உருவாக்கிக் கொண்டவர்கள் சல்லாபம் தலைக்கு மேல் போகிறது.

லட்சாதிபதிகள் தான் ஏமாற்றுகிறார்கள் என்றால் இந்த பிச்சாதிபதிகளும் ஏமாற்றுகிறார்கள்.

அம்மா தாயே என்று பிச்சை எடுத்தவன் ஹலோ சார் என்று அழகாக ஏமாற்றுகிறான்.

இந்த நிலையில் மனிதனைப் பார்க்க முடியவில்லை.

ஏன் இந்த நிலை? மனிதன் என்ன ஆனான்? மனிதனைப் பார்க்க முடியவில்லையே ஏன்?

இதயம் இருக்க வேண்டிய இடத்தில் வேறு என்னவோ இருக்கிறது. மூளை இருக்க வேண்டிய இடம் காலியாகி விட்டதா? இல்லை, ஆனால் மூளை வேறு விதமாக வேலை செய்கிறது. என்ன செய்யலாம் இவனை என்று இறைவனை சிந்திக்கவைத்துவிட்டான். அதனால் மனிதன் எங்கே என்று இறைவன் கேட்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசை

தந்தை தவறு செய்ய தாயும் துணையிருக்க வந்து பிறக்கிறான் மனிதன்.

இருவர் ஆசையில் பிறந்த மனிதனுக்கு ஆசை இருக்காதா என்ன? மனிதன் பிறக்கும்போது ஆசையும் பிறந்து விடுகிறது. ஆசையும் மனிதனும் ரெட்டைக் குழந்தைகள். ஆனால், ஆசை இல்லாத மனிதன் அகிலத்தில் இல்லை.

அளவில்லாமல் அளக்கக் கூடியதும், படியில்லாமல் நிறுக்கக்கூடியதும் ஆசை. அதனால்தான் வரம்பில்லாமலே ஆசையை வளர்த்து விடுகிறான் மனிதன்.

போதும் என்ற மனம் இல்லாதவரையில் எவ்வளவுதான் கிடைத்தாலும் போதாது என்கிறான் மனிதன். அதனால், ஆசை அவனை ஆட்டிப் படைக்கிறது.

மானம் - ரோசம் - சூடு - சொரணை எதுவும் ஆசை நிறைந்த உள்ளத்தை அண்ட முடியாது.

அதனால்தான், 'அழுக்குப் போகக் குளித்தவனும் இல்லை. ஆசை போகச் சேர்ந்தவனும் இல்லை' என்று கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனானப்பட்ட விஸ்வாமித்திரனையே பெண்ணாசை பேதலிக்க வைத்தது. வென்று விடலாம் என்ற ஆசையில்தான் பாஞ்சாலியைப் பணயம் வைத்தான் தர்மன்.

பாண்டவரை அவமானப்படுத்தும் ஆசையில்தான் பாஞ்சாலியின் சேலையை உரிந்தான் துரியோதனன்.

வானளாவ வாழவேண்டும் என்பது வண்டிக்காரன் ஆசை!

பொன்னும் மணியும் வான் முட்டக் குவித்து கண்ணைக் கவரும் கட்டிளங் கன்னியர் அவன் கட்டிலறையில் கட்டியங் கூறி நின்றாலும் இன்னும் கிடைக்காதா என்ற எண்ணம் இதயத்தில் எழத்தான் செய்கிறது.

மான் புள்ளிச் சேலையும் மயில் கழுத்து ஜக்கட்டும் மேனியை மறைக்க தங்கமும் வைரமும் தங்க நிகர் மேனியை தகதகக்க வைத்தாலும் சின்னி விரலுக்கு ஒரு சின்ன மோதிரம் அணிந்தால், கரத்தின் அழகு கச்சிதமாய் இருக்கும் என மங்கை ஒருத்தி எண்ணினால் அதற்குப் பெயர் ஆசை!

ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்க தாய்க்கு ஆசை!

அப்பனைப் போல பிள்ளை தப்பாமல் பிறக்க வேண்டும் என்பது தந்தையின் ஆசை.

பகற் கொள்ளை அடித்தாவது பணத்தைக் குவிக்க வேண்டும் என்பது பணக்காரன் ஆசை!

ஏனைய கடைகளைவிட தன் கடையில் வியாபாரம் நடக்கவேண்டும் என்பது கடைக்காரன் ஆசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றைத் தாண்டியவனுக்குக் குளத்தைத் தாண்ட ஆசை!

குளத்தைத் தாண்டியவனுக்கு கடலைத் தாண்ட ஆசை!

குப்பை மேடாகக் கூடாது என்பது கோபுரத்தின் ஆசை!

கோபுரம் ஆகவேண்டும் என்பது குப்பை மேட்டின் ஆசை!

அகிலமே தன் குரலை மதிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் ஆசை!

அந்த அமெரிக்காவையே அழிக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட நாடுகளின் ஆசை!

அறிவைப் பெறவேண்டும் என்பது ஆசிரியரின் ஆசை!

ஆட்டிப் படைக்க வேண்டும் என்பது அற்பர்கள் ஆசை!

மண்மூடிப் போகட்டும் மக்கள் - பொன் தேட வேண்டும் என்பது புல்லர்களின் ஆசை!

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது அரசின் ஆசை!

மட்டம் தட்ட வேண்டும் என்பது சில மண்டுகங்களின் ஆசை!

மேலே ஏற ஏணிக்கு ஆசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் ஓட தோணிக்கு ஆசை!

ஈயாணியை வைத்து என்னென்னமோ பண்ணும் மனிதனுக்கு பிரியாணி உண்ண ஆசை!

புல்லாங்குழல் போல் புதுப்புது ராகம் எழுப்ப மத்தளத்திற்கு ஆசை!

மத்தளம் போல் பேரிகை எழுப்ப வேண்டும் என்பது புல்லாங்குழலின் ஆசை!

இடியாப்பம் சாப்பிட்டு பழக்கப்பட்டவன் எல்லாம் சிக்கலைப் பிரிக்க ஆசைப்படுகிறான்.

விதிபோட்ட முடிச்சை மதியால் அவிழ்ப்பேன் என்று மத்தளம் அடிக்கிறான் ஒருவன்.

நிலத்தை வாங்கியவன் நீர்மூழ்கி வாங்க ஆசைப்படுகிறான். நீர்மூழ்கி வாங்கியவன் நீர்புவியை வாங்குவேன் என்கிறான். பேனா பிடிப்பவன் எல்லாம் எழுத்தாளன் என்றால், எழுத்தாளனுக்கு என்ன பெயர் வைப்பது என்று தடம் மாறும் உலகத்தில், ஆசைக்கு அளவு இல்லாமலே போய்விட்டது. பாசி படிந்த தரையில் பக்குவமாய் நடக்க பழக்கமில்லாதவன், ஊசிக் காதுக்குள் ஒட்டகத்தை நுழைக்கலாம் என்று ஆசைப்படுகிறான்.

பணத்தாசை வேசிக்கு மட்டும் இல்லை! இறைவனைத் தூசிப்பவனுக்கும் உண்டு. பூசிப்பவனுக்கும் உண்டு. மண்ணாசை - பொன்னாசை - பெண்ணாசை - புகழாசை என்று பல இருந்தாலும், ஆபத்து அதிகம் உள்ள ஆசைதான் நாற்காலி ஆசை. நாலுகால் உள்ளது என்றாலும் நாற்காலிகளில் பல ரகம் உண்டு. பெரிது சிறிது என்று பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை இருந்தாலும், அழகு அந்தஸ்து என்று பலவகை உண்டு.

உயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்து இருப்பவனைப் பார்க்க தாழ்ந்த நாற்காலிக்கு சகிக்காது.

நான் இருக்க வேண்டிய இடத்தில் அவனா? என அங்கலாய்ப்பான். நாற்காலி ஆசை வந்துவிட்ட மனிதனின் நர்த்தனத்தை அடக்க முடியாது. அவனே அடங்கும் வரை ஆடிக் கொண்டே இருப்பான்.

ஆட்டத்திற்கு ஏற்ற விதத்தில் பக்க வாத்தியம் வாசிக்க பலர் இருப்பார்கள்.

பக்க வாத்தியக்காரர்கள் கூட அவன் பக்கத்தில் தனக்கொரு நாற்காலி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் வாசிப்பார்கள்.

அருகதை இருக்கிறதோ இல்லையோ நாற்காலி தேவை என்ற ஆசை மட்டும் ஆக்கிரமித்து விடுகிறது மனிதனை.

இந்த ஆசை அதிகமாகும்போது எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்து விடுகிறான்.

அரக்கத்தனம் ஆட்கொண்டு விடும். அக்கிரமத்தை அனாயாசமாகச் செய்வான்.

வாழ்வு கொடுத்தவனாக இருந்தாலும் அவன் காலை வாருவதில் கச்சிதமாக ஈடுபடுவான்.

செய்நன்றி கொல்வது இவனுக்கு சிகரெட் புகைப்பது போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாம் அல்வா சாப்பிடுவது போல் பக்குவமாய் பொய் சொல்வான். பண்பு என்பது அவனிடம் மருந்துக்குக் கூட கிடைக்காது. பாசத்தை அடகு வைத்துவிட்டு மோசத்தனத்தை முழுமையாக வாங்கிவிடுவான்.

போகாத ஊருக்கு என்றாலும் பாதையைப் பக்குவமாய் அமைப்பான். நாயாக மாறினால் நன்றி உணர்வு வந்துவிடும் என்பதற்காகப் பேயாகவே மாறிவிடுவான்.

எருமைக்கு இருக்கும் உணர்வு கூட இவனுக்கு இருக்காது.

இது தேவையா?

தேவை என்கிறான் மனிதன்.

தேவை என்கிற மனிதன், ஆசைக்கு அளவு வைக்க மறந்து விட்டான்.

பல உறுப்புகளை வெளியே வைத்துப் படைத்த இறைவன், சில உறுப்புகளை மறைவில் வைத்திருக்கிறான்.

நாக்கு வாய்க்குள் இருக்கிறது.

உள்ளே இருக்கும் நாக்கே உபத்திரவத்தைத் தரும்போது, அதுவே வெளியே இருந்தால் உலகத்தையே அழித்துவிடும்.

தாறுமாறாக வளைந்து பலருக்குத் தலையிடியைத் தந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு நாக்கைப் பாதுகாக்க 32 பற்களை நிறுத்தி வைத்திருக்கிறான் இறைவன்.

இந்த 32 பற்களுக்கு மத்தியில் உள்ள ஆசை நிறைந்தவனின் நாக்கு அஞ்சுவதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தை இறைவன் இருட்டில் வைத்திருக்கிறான். அதனால் ஆசையை அதில் அடுக்கி வைத்திருக்கிறான் மனிதன். இதயம், இருட்டில் இருப்பதாலோ என்னவோ சிலரின் ஆசை வெளியே தெரிவதில்லை.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று பழமொழி உண்டு.

அகத்தின் அழகுதான் முகத்தில் தெரியுமே தவிர அசிங்கம் தெரிவதில்லை.

சிலரது முகத்தில் அகத்தின் அழகும் தெரிவதில்லை. காரணம், அகத்தின் அழகு முகத்தில் தெரியாமல் ஆசை மறைத்துவிடுகிறது.

சாதாரணமாக ஓடினால் ஆறு!

ஆறு ஆறாகிப் பெருகினால் வெள்ளம். நதியில் நீராடி கொடியில் தலை சீவி வரும்போது அதற்குப் பெயர் தென்றல்.

கொடியைத் தூளாக்கி மரத்தைப் பெயர்த்தெறிந்து வந்தால் அது புயல்.

வாகனம் ஓடியது பூமியில்!

பூமியே ஓடினால் பூகம்பம்!

ஆசையும் அப்படித்தான்!

சாதாரணமாக இருக்கும் வரை ஆசை!

அதுவே சண்டமாருதமாக மாறினால் பேராசை.

ஆறு ஓடினால் காடும் செழிக்கும். நாடும் செழிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ஆறாகப் பெருகினால் நாடே அழியும்.

ஆசைகளை மனிதன் அடக்கி வாழும்போது வள்ளலாகிறான். அதை அலைய விடும்போதே வஞ்சகன் ஆகிறான்.

பேராசை பெருக்கெடுக்கும் போது, இரக்கம் எங்கேயோ போய் விடுகிறது.

அழிவு அவனுக்கு ஆரத்தி எடுக்கிறது.

கொடுமை அவனுக்குக் குடை பிடிக்கிறது.

இதயத்தில் இடம் இல்லாததால் பண்பு பறந்து விடுகிறது.

அடுத்தவன் பேச்சுக்கு அங்கே இடம் இருக்காது. ஒரு சதம் அவன் கைவிட்டுப் போவதை விரும்ப மாட்டான். தான் செய்யும் தொழிலை மற்றவன் செய்ய மனம் இடம் தராது. வம்புத் தனத்திற்கு வாரி இறைப்பான். வருமானவரி கட்டமாட்டான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள லட்சம் வேண்டுமானாலும் தருவான். தர்மத்திற்கு செப்புக் காசு கொடுக்க மாட்டான். பணம் பெறுவதற்கு எத்தனை வழி உண்டோ அத்தனையும் ஏக காலத்தில் போக எத்தனிப்பான்.

சட்டத்தை வளைக்க எத்தனை திட்டம் வேண்டுமானாலும் போடுவான். ஆலயத்திற்குள் அடுத்தடுத்துப் போவான். இறை வணக்கத்தில் இதயம் ஈடுபடாது. ஆனால், கடலில் வரும் தங்கம் கைக்கு வர கடவுளே, நீயே உதவ வேண்டும் என்பான்.

ஆண்டவன் கூட அவன் ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற ஆசை அவனுக்கிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆணைப்படிதான் ஆண்டவன் இருக்கிறான் என்று எண்ணும் விதத்தில் அவன் நினைத்ததெல்லாம் நடக்கும்.

இறைவன் என் பக்கம்தான் என எக்காளமிடுவான்.

இவன் போகிற போக்கைப் பார்த்தால் என்னையே ஏலத்தில் விட்டு விடுவான் என இறைவன் நினைக்கும்போது,

மூச்சுத் திணறும் லேசாக அடி விழுவது போல் ஒரு தோல்வி வரும்.

ஏறிச் சென்ற படி உடையும், கால் சறுக்கும். சறுக்கலுக்குக் காரணம் என்ன என்று இவன் நினைப்பான். இறைவன் சிரிப்பான்.

எதிலோ மோதியது போல தலை வலிக்கும்.

தலைவலிக்குக் காரணம் தேட முற்படுவான். மார்பு வலிக்கும்! பழம் பாலில் விழுந்து அது வாயில் விழுந்து வயிற்றுக்குள் போவதற்கு முன்பு வாந்தி வந்ததைப்போல், நெருங்கி வந்தது வழுக்கி விடும். சேர்ந்து கால் வழுக்கியும் விடும். கட்டான் தரை வழுக்குப் பாறையாகிவிடும். இத்தனை காலம் வெட்டிய கத்தி இப்போது வெட்டாது.

தோல்வி தொடரும்.

பறந்து பறந்து தேடிய பணம், பறந்து கொண்டே இருக்கும்.

கைகட்டி வாய்பொத்தி நின்றவர்கள் கையை அசைத்து டாட்டா என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லிக்காய் மூட்டை சிதறியதுபோல் இவனை நேசித்தவர்கள் சிதறுவார்கள்.

கண்கள் கண்ணீரைக் கக்கும்!

ஏளனம் இறுக்கமாக இவனைப் பற்றிப் பிடிக்கும்.

அவமானம் ஆலிங்கனம் செய்யும்!

அப்போதுதான் 'கடவுளே' எனக் கதறுவான்.

இவன் அழைத்தால் ஓடிவர ஆட்களே இல்லாதபோது, ஆண்டவனா வருவான்?

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலையும் நினைப்பும்

மனிதன் பிறக்கிறான் இறக்கிறான்! இறப்பதற்கு முன் உள்ள இடைக்காலத்தில் நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என நினைக்கிறான். இந்த நினைப்பு - நிலையாவதும் உண்டு. நிலைக்காமல் போனதும் உண்டு.

நினைக்க மட்டும்தான் மனிதனுக்கு முடிகிறது. அதை நிலைக்க வைப்பது மனிதனின் கையில் இல்லை.

எங்கோ உள்ள ஒரு சக்தி மனிதனை இயக்குகிறது.

நமது கைக்கு நாம் ஆணையிடுவதில்லை. நமது வாய்க்கு நாம் ஆணையிடுவதில்லை.

ஆனால் கை உணவை எடுக்கும்போது வாய் தானாகத் திறக்கிறது. ஒரு அழகான மலரை கண் பார்க்கிறது. கை பறிக்கிறது. அதில் மணம் இருக்கிறதா, இல்லையா என்று மூக்கு முகர்கிறது. மூக்கு கையிடம் சொல்வதில்லை, மலரை எடுத்து வா நான் முகர வேண்டும் என்று.

தாயின் வயிற்றிலே இருந்து வெளியே வந்த குழந்தையை தாயின் அருகில் வைத்தாலும், வேறு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் அருகில் வைத்தாலும் பசி வரும்போது குழந்தை தாயின் பக்கம் திரும்பி அழுகிறது.

தாயின் பக்கம் திரும்பி அழுதால்தான் பால் கிடைக்கும் என்று தாய் கற்றுக் கொடுத்தாளா? பக்கத்தில் இருப்பது தாய் என்று குழந்தைக்குத் தெரியுமா? தெரியாது.

அப்படியானால் அதைத் தெரிய வைப்பது யார்? இது மனிதனுக்கு மட்டும் உள்ளதல்ல.

பசு கன்று ஈனுகிறது. அக்கன்று வெளியே வந்து விழுந்த 30 நிமிடத்தில் எழுந்து நிற்கிறது.

எழுந்து நின்றதும் அது நிமிர்ந்து பார்க்கும் இடம்மடி! தானாக வாயைத் திறந்து பால் குடிக்கிறது.

கன்றைத் தூக்கி, பால் காம்பை அதன் வாயில் திணித்து பாலைக் குடி என்று தாய்ப்பசு சொல்வதில்லை.

கோழி அடை காக்கிறது. முட்டையில் இருந்து குஞ்சு அதை உடைத்து வெளியே வருகிறது.

வெளியே வந்து குஞ்சுகள் உணவு உண்கிறது. தண்ணீர் குடிக்கிறது. தண்ணீரை உறிஞ்சி தலையைத் தூக்கிக் குடிக்கிறது. குஞ்சுகள் தண்ணீர் குடிக்கும் முறையை கோழி கற்றுக் கொடுக்கிறதா? இல்லை.

இதை எல்லாம் ஒரு சக்தி இயக்குகிறது. யார் யாருக்கோ ஆணையிடும் மனிதன் தன் தலையில் ஏற்படும் தலையிடியை ஆணையிட்டு நிறுத்த முடிகிறதா? என் தலையில் தலைவலி வந்தால் நில் என்று சொல்லி நிறுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட மனிதன் எதற்கோ திட்டமிட நினைக்கிறான்.

நிலைக்கு மிஞ்சி நினைக்கிறான். நினைப்பதை நிலை நாட்ட வேண்டும் என்றும் நினைக்கிறான்.

அந்த நினைப்பு சரியோ, தவறோ சிலரது நினைப்புகள் நிலை நாட்டப்படுகிறது.

இந்த நினைப்புகளை நிலையாக்கி என்ன செய்கிறான் மனிதன் என்று பார்த்துக்கொண்டிருக்கிறான் இறைவன்.

தப்பான வழியில் சென்றால் தட்டிப் பறிக்க சில மனிதர்களை ஏவி விட்டு அழிக்கிறான்.

சரியான வழியில் -முறையில் நடந்தால் இல்லாதவர்களை அவனிடம் அனுப்பி இன்பம் காண வைக்கிறான்.

'இடியாப்பம் போன்ற இதயத்தைக் கொடுத்து, அதன் தலைப்பைத் தேடும் பொறுப்பை மனிதனிடம் ஒப்படைத்திருக்கிறான் இறைவன், என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

அதைத் தேடத் தெரிந்தவன் பிழைத்துக் கொள்கிறான். முடியாது ஓடித் திரிந்தவன் களைத்து விடுகிறான்.

சிலர் நிலைக்கு ஏற்றபடி நினைக்கின்றனர். வேறு சிலர் நிலையை மீறி நினைக்கின்றனர்.

பழைய சோறு சாப்பிடுகிறவன். பால்சோறு சாப்பிட நினைக்கிறான். குடிசையில் வாழ்கிறவன் கோபுரத்தின் உயரத்திற்குப் போக நினைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சி கூட கிடைக்காதவன் பால் அருந்த நினைக்கிறான்.

இந்த அத்தனை பேருடைய நினைப்பும் ஆண்டவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை.

அன்றாடங் காய்ச்சி அடுக்கு மாளிகைக்குப் போகிறான். காலால் நடந்தவன் காரில் பறக்கிறான். பிச்சை எடுத்தவன் பெரும் பணக்காரன் ஆகிறான் என்றால் ஆண்டவன் போடும் பிச்சை. முயலுங்கள் உதவுகிறேன் என்று சொன்ன இறைவனை நான் நாடினால்தான் நடக்கும் என்கிறான்.

இதை எடுத்து ஆராய்ந்தால் இறைவன் பிறக்கும்போது ஒவ்வொரு மனிதனின் தலை எழுத்தையும் எழுதி அனுப்புகிறான்.

இத்தனை வயதில் பணம் வரும், இத்தனை வயதில் கல்யாணம் நடக்கும், இத்தனை குழந்தைகள் கிடைக்கும் என்று எழுதிவிட்ட ஆண்டவன் மனிதனை உலகத்திற்கு அனுப்பி நடமாட விட்டுப் பார்க்கிறான்.

அவன் போட்ட கணக்கை மாற்ற நினைக்கும் மனிதனை, கீறி வைத்த கோட்டைத்' தாண்ட நினைக்கும், தாண்டிய மனிதனுக்குத் தண்டனையை உடனே கொடுப்பதில்லை.

விட்டுப் பார்க்கிறான். திருந்துவான் என எண்ணுகிறான். மேலும் மேலும் வசதிகளைக் கொடுக்கிறான்.

வசதி வருகிறது என்பதற்காக மனிதன் உயரப் போக நினைக்கிறான். போகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் போனவன் உயர்த்தியவனை மறந்து விடுகிறான்.

காலம் அறிந்து அவனை அழைத்துக் கொள்கிறான்.

உலகத்திலிருந்து அப்புறப்படுத்திய மனிதனுக்கு, எந்த வயதில் அவன் இறக்கிறானோ அந்த வயதிற்கு அதிகமான பாவங்கள் செய்திருந்தால் மீதப் பாவத்திற்கு உரிய தண்டனையை அவன் பிள்ளைகட்கு உலகத்திலேயே கொடுக்கிறான்.

'பெற்றோர்கள் செய்த பாவத்திற்கு ஏன் பிள்ளைகளா தண்டனை பெற வேண்டும்?' என ஒரு கேள்வி எழுகிறது.

'தோட்டத்தில் பங்கு, சொத்தில் பங்கு, வீட்டில் பங்கு தா என பெற்றோர்களிடம் பிள்ளைகள் பங்கு கேட்கும்போது பாவத்தில் பங்கு ஏன் கேட்கக் கூடாது?' என ஆண்டவன் கேட்கிறான்.

ஆகவே,

என்னதான் மனிதன் ஆடினாலும் நினைத்தாலும் இறைவன் போட்ட கணக்குத் தவறாது. அப்படித் தவறியதாக ஒரு சரித்திரம் இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் தண்டனையை உலகத்திலேயே கொடுக்கிறான்.

எங்கள் ஊரில் ஒருவர் இருந்தார். தெரு வழியே போகிறவன் அவர் வீட்டு வாசலைத் தாண்டும் முன் தோளில் உள்ள துண்டை இடுப்பில் கட்டிக் கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்யாதவரை இழுத்து வரச் செய்து பலாமரத்தில் கட்டி சவுக்கால் அடிக்கச் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காரருக்கு, வேலைக்காரருக்கு, நாய்க்கு என மூன்று ரகமாக சோறு சமைக்கப்படும்.

நூறு ரூபா பணத்தைக் கொடுத்து ஐந்து ரூபாவிற்கு பொருள் வாங்கியபின் மீதப் பணத்தை வேலைக்காரனிடம் இருந்து வாங்க மாட்டார். காரணம், வேலைக்காரனிடம் இருந்து கை நீட்டி வாங்குவது அவமானம் என நினைத்தார்.

முடிவு? உலகத்திலே தண்டிக்கப்பட்டார். பணம் போனது. பெற்றெடுத்த மகள் எவனுடனோ போனாள்.

அவர் பெற்ற பிள்ளை இன்று பிச்சையெடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி அதிர்ஷ்டம்



பணத்தைத் தேடி அலையும் மனிதன் இந்த வெற்றியையும் தேடுகிறான். பேச்சில் வெற்றி, எழுத்தில் வெற்றி, விளையாட்டில் வெற்றி, தொழிலில் வெற்றி, பள்ளித் தேர்வில் வெற்றி என பல வகைகளில் இருந்தாலும், வெற்றி ஒன்றுதான்.

இமயத்தில் ஏறிய டென்சில் வெற்றி என்றான்.

கோழி கிண்டும் குப்பை மேட்டில் நின்று இமயம் இதுதான் என்று சாதிப்பவனும் வெற்றி எனக்கு என்கிறான்.

எலியை அடித்தவனும் வெற்றி பெற்றேன் என்கிறான்.

கோழியை விரட்டியவனும் வெற்றி என்கிறான்.

வாளியை உடைத்தவனும் வெற்றி என்கிறான்.

வெற்றியின் சாதனையை நிலைநாட்ட வாந்திகூட எடுக்கலாம் போல் இருக்கிறது.

அதிக தூரம் யார் எச்சில் துப்பினார்கள் என்பதை எல்லாம் கின்னஸ் புத்தகம் வெளியிடுகிறது.

பைத்தியகாரத்தனமாக எதைச் செய்தாலும் அதை வெற்றி என்று கின்னஸ் புத்தகம் வெளியிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி, சாதனைகள் எல்லாம் இன்று கேலிக் கூத்தாகிக் கொண்டிருக்கிறது. வெற்றியும் அதிர்ஷ்டமும் இரட்டைக் குழந்தைகள்.

அதிர்ஷ்டம் என்பது அது இஷ்டத்திற்கு வரக்கூடியது! தேடினால் கிடைக்காது. கடைகளில் வாங்க முடியாது.

வெற்றி சிலரிடம் தத்தித் தத்தி வரும். சிலரிடம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் வரும்.

வெற்றி வரும் முன்பு இழுத்து எடுத்துக் கொள்பவரும் உண்டு.

பணமும் அதிர்ஷ்டமும் பக்கத்தில் இருந்தால், வெற்றியை விலை கொடுத்தே வாங்கிவிடலாம்.

தேர்தலில் கூட சிலர் பணத்தை வீசி வென்று விடுகின்றனர்! அதிர்ஷ்டமும் வெற்றியும் ஒரு மனிதனிடம் வந்து சேர்ந்துவிட்டால் அதை நிறுத்தி வைத்துக் கொள்வது கஷ்டம்.

இவை இரண்டும் அந்த மனிதனை சும்மா இருக்க விடாது. அதனால் இவன் ஏதாவது பண்ணிக் கொண்டே இருப்பான். அதை அடுத்தவன் பொறாமை இவனைப் பார்த்துச் சிரிக்கும். கவிழ்க்கத் துடிக்கும். தப்புப் பண்ண தாயம் போடும்.

இந்த வெற்றியைக் காப்பாற்ற தப்புச் செய்துதான் ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவான்.

வெற்றி நிரந்தரமானதல்ல. நித்தியமானதும் அல்ல. முகம்மதலியின் வெற்றி அடுத்தவன் கைக்குப் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.ஆரின் வெற்றி பிரேமதாசவிடம் வந்தது. அதே வெற்றி சந்திரிக்காவின் கையில் இருக்கிறது. இந்த வெற்றி நாளை 'புஸ்'வானம் ஆகிவிடலாம். வெற்றி பகடைக்காய் போன்றது. தாயக்கட்டையைத் தள்ளுவதுபோல ஆண்டவன் வெற்றியை ஆளுக்கு ஆள் தள்ளிக்கொண்டிருக்கிறான்.

ஆண்டவன் வெற்றியை ஒருவனிடம் விட்டு வைப்பதில்லை. அதிர்ஷ்டம் ஆலவட்டம் தூக்கும்போது வெற்றி விரும்பிச் சிரிக்கிறது. மனிதன் மகிழ்ந்து சிரிக்கிறான். வெற்றியும் அதிர்ஷ்டமும் எனது பிள்ளைகளே! நான்தான் உன்னிடம் அனுப்பினேன்!

அனுப்பிய என்னை மறந்து, நீ ஆனந்தமாக சிரிக்கிறாயே! அட பாவி என ஆண்டவன் மனதிற்குள் சிரிக்கிறான்.

என்னால் தான் வெற்றி என நினைக்கும் மனிதன், அதை அனுப்பி வைத்த ஒருவன் மேலே இருக்கிறான் என்பதை மறந்து விடுகிறான்.

மறக்கும் போது வெற்றி இறைவனால் பாதிக்கப்படுகிறது.

தறி அசைந்தால் போதாது. நூல் இருந்தால்தான் துணி கிடைக்கும். விளக்கு இருந்தால் போதாது. எண்ணெய் இருந்தால்தான் வெளிச்சம் கிடைக்கும்.

செக்கு சுற்றினால் போதாது. எள்ளு இருந்தால் தான் எண்ணெய் கிடைக்கும். தறிக்கு நூல், விளக்கிற்கு எண்ணெய், செக்கிற்கு எள்ளு இருப்பதுபோல் இறைவன் அருள் இருக்க வேண்டும் மனிதனுக்கு.

அருள் எல்லாருக்கும் கிடைப்பது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் கிடைக்க நல்ல மனம் வேண்டும். மனம் மாறுபடும் போது குணம் குப்புற விழுகிறது. இருள் இதயத்திற்குள் நுழைந்து விடுகின்றது. அந்த இடத்தில் வெற்றி இருக்காது. வேரோடு சரிந்துவிடும். அதிர்ஷ்டம் ஆகாயத்தில் பறந்துவிடும்.

அந்த அருளை இறைவன் யாருக்குக் கொடுக்கிறான்?

இந்தக் கேள்விக்கு மனிதனால் விடை காண முடியவில்லை.

பக்தியோடும் பண்போடும் வாழ்ந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பயங்கர வறுமைக்கு ஆளானார்கள்.

அக்கிரம் பண்ணிய அபூஜஹல் ஆடம்பரமாக வாழ்ந்தான். கொடுமைக்காரனுக்கு அள்ளிக் கொடுக்கும் இறைவன், நல்ல கொள்கை உள்ளவனுக்கு கிள்ளிக் கொடுக்கவும் தயங்குகிறான். கல்லான நெஞ்சத்தையும் கணக்கற்ற பொருளையும் கறுமிக்குக் கொடுக்கிறான் இறைவன்.

இரக்க உள்ளத்தையும் இல்லாத தன்மையையும் ஏழைக்குக் கொடுக்கிறான். இல்லாதவன் இல்லை என்று சொல்ல மாட்டான் என்பதை உணர்ந்தோ என்னவோ பிச்சைக்காரன் கூட ஏழை வீட்டைத் தேடி வருகிறான்.

பொருள் உள்ளவனை அருள் உள்ளவனாக மாற்றுவதும், அருள் உள்ளவனை பொருள் உள்ளவனாக மாற்றுவதும் ஆண்டவன் கையில் உள்ளது.

எப்போது மாற்றுவான்? எப்படி மாற்றுவான் என்பது அவனுக்குத் தெரிந்த இரகசியம்.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிம்மதி

பிறந்துவிட்ட ஒவ்வொரு மனிதனும் தேடுகின்ற; விலை போட்டு வாங்கமுடியாத பொருள் நிம்மதி!

இதைப் பணக்காரனும் தேடுகிறான் பாட்டாளியும் தேடுகிறான்.

உழவனும் தேடுகிறான். ஊர்க்காவலனும் தேடுகிறான்.

அரசியல்வாதியும் தேடுகிறான் அன்றாடங்காய்ச்சியும் தேடுகிறான். ஆனால் அது எங்கே இருக்கிறது என்று யாருக்கும் தெரிவதில்லை.

"காலைக்கடன் முடித்து என் காரிலே ஏறி எவ்வளவு வேகமாக ஓட்ட முடியுமோ அவ்வளவு வேகத்தில் சென்று, அலுவலக வேலைகளை முடித்துவிட்டு அதே வேகத்தில் வீட்டிற்குத் திரும்பிவந்து உட்காரும்போது என் மனைவி ஒரு கப் டீ கொண்டு வந்து தருவாள். அதைக் குடிக்கும்போதுதான் நிம்மதி" என்கிறான் பிரிட்டிஷ்காரன்.

"தெருவிலே போய்க் கொண்டிருக்கிறேன். அழகான கால் உள்ள ஒரு பெண் போகிறாள். அவளை அழைத்துச் சென்று ஹோட்டலில் தங்கி அவளை அனுபவித்து விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகிறேனே அப்போதுதான் எனக்கு நிம்மதி" என்கிறான் ஒரு பிரெஞ்சுக்காரன்.

இரவு நேரம் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கிறேன் - நடுசாமம்! என் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. திறந்து பார்க்கிறேன். சிலர் நிற்கின்றனர். 'என்ன?' என்கிறேன்.

'நீதானே கந்தசாமி' என்று கேட்கிறார்கள்.

'இல்லை அடுத்த வீடு' என்கிறேன். அப்பொழுது தான் எனக்கு நிம்மதி என்கிறான் ஒரு தமிழன்.

வருமானவரி அதிகாரிகள் வருகிறார்கள். வீடு முழுக்க சோதனை. திக் திக் என மனம் அடிக்கிறது. சோதனை முடிந்த அதிகாரிகள் வெறுங்கையோடு திரும்புகிறார்கள். மறைத்து வைத்த கறுப்புப் பணம் அவர்களிடம் சிக்கவில்லை என்பதை எண்ணும்போது நிம்மதி.

"பசி பசி என அலைந்தேன். பல இடங்களில் கேட்டேன். பார்க்கவில்லை யாரும். ஒரு வயதான மாது கொஞ்சம் பழைய சோறு போட்டாள். அதைச் சாப்பிட்டபோதுதான் எனக்கு நிம்மதி" என்கிறான் பிச்சை எடுப்பவன்.

இவை எல்லாம் நிம்மதி என்று சொல்ல முடியாது. இந்த நிம்மதி வந்த வேகத்தில் போய்விடும். காரணம் அது எக்ஸ்பிரஸ் வேகத்தில் வருகிறது. நிற்க நேரம் இல்லை. நிற்கவும் முடியாது.. நிரந்தரமான நிம்மதியாக ஆகாது.

உழைக்கின்ற மனிதனுக்கு நிம்மதி இல்லை. உண்ணும்போது கூட நிம்மதி இல்லை. உறங்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட நிம்மதி இல்லை. சிலரால் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை. இதற்குக் காரணம், நிதானம் இல்லாமல் மனிதன் அலைகிறான்.

அந்த நிதானம் எப்படி வரும்?

எந்த ஒரு செயலில் ஈடுபடும்போதும் நின்று நிதானித்து அளந்து ஆழமாக அடி எடுத்து வைக்க வேண்டும் என்று சிலர் சொல்வார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற செயல்பாடு இருக்கக்கூடாது.

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று நினைக்க வேண்டும்.

எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் சேர்க்கலாம் என்று இஸ்லாம் சொல்கிறது. அதை எப்படிச் சேர்க்க வேண்டும் என்றும் சொல்கிறது.

அப்படிச் சேர்ப்பவனுக்கு சேர்த்ததைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

அதை எப்படிக் காக்க வேண்டும்? என்று அடுத்து ஒரு எண்ணம் வரும்போது பாதுகாக்கப் பல வழிகளைத் தேடுகிறான். அந்த நிம்மதி அவனிடம் சிக்குவதில்லை.

அந்த நிம்மதி - ஆலயங்களில் - பள்ளியில் பெறமுடியும் என்கிறார்கள் பெரியோர்கள்.

சிக்கல்களில் சிக்கித் தவிப்பவனும் அதைப் பிரிக்க முடியாது தவிப்பவனும் இறைவணக்கத்தில் அந்த நிம்மதியைப் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவணக்கம் பண்ணும்போது பலதரப்பட்ட பிரச்சினைகளை அள்ளி மனதில் வைத்துக் கொண்டு இறைவனே இறைவனே! என்று வாய்சொல்லை, மனதில் மற்றைய எண்ணங்கள் உருவானால், அந்த அழைப்பிற்கு காது கொடுக்க ஆண்டவன் அங்கு இருக்க மாட்டான்.

அடுத்துக் கெடுத்து அடுத்தவனை ஏமாற்றி அற்பத்தனம் பல செய்தும் அடுக்கடுக்காக அக்கிரமத்தை அடுத்தடுத்து பண்ணிவிட்டு ஆண்டவனே ஆண்டவனே என்றால், அந்த அழைப்பிற்கும் காது கொடுக்க ஆண்டவனுக்கு நேரம் இருக்காது. ஆண்டவன் என்ன வீட்டு வேலைக்காரன் கூட ஓடிவர மாட்டான்.

ஆகவே இறைவணக்கத்தில்கூட நிதானம் வேண்டும். ஒருமனப்படுத்தும் தன்மை வேண்டும். அந்த நிதானம் வரும்போது நிம்மதி தானாக வரும்.

இது மனிதர்களுக்குக் கிடைக்குமோ, இல்லையோ மகான்களுக்குக் கிடைத்திருக்கிறது. மகான்கள் மனிதர்களில் மேம்பட்டவர்கள்.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கை

நம்பிக்கை! யானையின் தும்பிக்கையை விட சக்திமிக்கது.

யானைக்குத் தும்பிக்கை எவ்வளவு முக்கியமோ அதுபோல மனிதனுக்கு நம்பிக்கை மிகவும் முக்கியம்.

நம்பிக்கை இழந்த மனிதன் தும்பிக்கை இழந்த யானையைப் போல் ஆகிறான்.

"இவர் தான் உன் அப்பா" என்று தாய் சொல்லித்தான் அப்பா என்று மகன் அழைக்கிறான்.

பெற்ற தாய் இவள்தான் என்று பிறப்புச் சாட்சிப் பத்திரத்தைப் பார்க்காமலே பிள்ளை ஒப்புக் கொள்கிறது என்றால் அதுதான் நம்பிக்கை.

எனக்கும் பணம் கிடைக்கும் என ஏழை நம்புகிறான்.

இருக்கும் பணம் இரும்புப் பெட்டியை விட்டுப் போகாது என்று பணக்காரன் நம்புகிறான்.

திருப்பித் தந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் கடன் கொடுக்கிறான். திருப்பிக் கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில்தான் கடன் வாங்குகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவன் தவிக்கவும், எடுத்தவன் விழிக்கவும்; அதை அடுத்தவன் பார்த்துச் சிரிக்கவும் வரும்போதுதான் இருவர் நம்பிக்கையும் நர்த்தனம் ஆடுகிறது.

வாங்கிய சரக்கை அதிக விலைக்கு விற்கலாம் என்று வியாபாரி நம்புகிறான்.

கண்மூடித்தனமாக விற்கும் இவனை கம்பி எண்ண வைத்து விடலாம் என்று அதிகாரி நம்புகிறான்.

அதிகாரியின் குறி தவறும்போது வியாபாரியின் நம்பிக்கை வாழ்கிறது. அதிகாரியின் நம்பிக்கை வீழ்கிறது.

ஆயிரம் எதிர்ப்புகள் வந்தாலும் அவளை அடைந்தே தீருவேன் என இளைஞன் நம்புகிறான்.

கட்டினால் அவன், இன்றேல் கன்னி என்றும் அவளும் நம்புகிறாள்.

வேட்பாளன் ஒவ்வொருவனும் வென்றுவிடுவோம் என்ற நம்பிக்கையில்தான் வேட்பு மனுவைத் தாக்கல் செய்கிறான்.

லட்ச ரூபாய் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் லாட்டரிச் சீட்டைக் கூட மனிதன் வாங்குகிறான்.

விற்றுவிடலாம் என்ற நம்பிக்கை வியாபாரிக்கு வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை அதிகாரிக்கு எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் நம்பிக்கையோடு மனிதன் வாழ்கிறான்.

நம்பிக்கை இல்லை என்றால் மனைவியை வீட்டில் வைத்து விட்டு, கணவன் வெளியே போக மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி மீது நம்பிக்கை! கிடைக்கும் என்ற நம்பிக்கை! வெல்வோம் என்ற நம்பிக்கை! பொருள் மீது நம்பிக்கை!

விபத்து ஏற்படாது என்ற நம்பிக்கையில்தான் விமானத்தில் மனிதன் ஏறுகிறான்.

டாக்டரிடம் நம்பிக்கை வைக்கவில்லை என்றால் நெஞ்சை அடைப்பது போல் இருக்கும்; மூச்சுத் திணறுவது போல் தோன்றும்.

மருந்தில் நம்பிக்கை இல்லை என்றால் நோய் குணமாகாது.

உண்ட உணவில் சந்தேகம் வந்துவிட்டால் வாந்தி வந்துவிடும். முயற்சியில் நம்பிக்கை இல்லை என்றால் முன்னேற்றம் கிடைக்காது. இறைவனை நம்பவில்லை என்றால் எதுவுமே கிடைக்காது.

நம்மை நாமே நம்பாதபோது இறைவனை நம்ப மனம் இடங்கொடுக்காது.

அடுத்தவன் மீது வைக்கும் நம்பிக்கையை ஆண்டவன் மீது வைப்பதில்லை மனிதன்.

இதனால் சிலரின் நம்பிக்கை சீரழிந்து விடுகிறது. கடவுளை நம்பாத மனிதன் கட்டியவளைக் கூட நம்பமாட்டான்.

பெற்றெடுத்த பிள்ளைகளும் பெருமைக்குரிய நண்பர்களும் பேயாகத் தெரிவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டதெதுவும் துலங்காது, கண்ணில் பட்டதெல்லாம் பயங்கரமாகத் தெரியும். நாம் கட்டி இருப்பது வேட்டியா? அல்லது வேறு ஏதாவதா என்ற சந்தேகம் வந்துவிடும்.

தன் மூஞ்சியை கண்ணாடியில் பார்த்துவிட்டு, "என் மூஞ்சி இப்படியா இருந்தது?" என்று தன்னைத்தானே கேட்பான்.

சாப்பிடாமலே சாப்பிட்டதாக எண்ணிக் கொள்வான்.

"இப்போதுதானே சாப்பிட்டேன், ஏன் பசிக்கிறது? ஒரு வேளை சாப்பிடவில்லையோ என்ற எண்ணம் வரும்.

மனைவியிடம் கேட்டால் என்ன என எண்ணுவான்.

ஒரு வேளை அவளும் பொய் சொல்லி விட்டால் என்ன செய்வது என நினைப்பான்.

எப்போதோ மனைவி விளையாட்டாகச் சொன்னது இப்போது நினைவுக்கு வந்து விபரீதமாகப் பயமுறுத்தும்.

இப்படியான நம்பிக்கை இழந்த மனிதனை இறைவனும் நம்பமாட்டான்.

இறைவன் அவன்மீது வைத்த நம்பிக்கையை திரும்பப் பெறும்போது இவன் தும்பிக்கை இழந்த யானையாகி விடுகிறான்.

நம்பிக்கை, மனிதனை விட்டு விலகும்போது மனம் தளர்ந்து விடும்; மதிப்புக் குறைந்துவிடும். சோர்வு அவனைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். வேலைக்காரர்கள் கூட அவனை விட்டும் ஓடி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரர்களே ஓடும்போதும் மனைவி, மக்கள் என்ன மாலையா போடுவார்கள்?

கட்டியவள் காண்டாமிருகத்தைப் பார்ப்பது போல் பார்ப்பாள்.

பெரும் பூதத்தைப் பார்ப்பது போல் பிள்ளைகள் இவனைப் பார்ப்பார்கள்.

கர்மமே என்று கட்டியவள் இருந்தாலும், பிள்ளைகள் பிடிவாதம் பெரிதாகி விடும்.

அப்பனுக்கே முடியவில்லை நம்மால் எங்கே ஆகப் போகிறது என பிள்ளைகள் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிடிதளரும்; பிடிப்பு விடுபடும்; நிம்மதி, நிம்மதியாக வேறுபக்கம் போய்விடும்.

உறுதி உறங்கிக் கொண்டே ஒற்றைக் கண்ணால் இவனைப் பார்த்துச் சிரிக்கும்.

இவன் மீது வைத்திருந்த நம்பிக்கையை இறைவன் எடுத்துக் கொள்வான். வீட்டுக்குள்ளேயே ஒரு நரகம் உருவாகிவிடும்.

மனிதனுக்கு நம்பிக்கை அவசியம் என்பதற்காக கண்மூடித்தனமான நம்பிக்கை கூடாது.

கண்ணைக் கட்டி காட்டிலே நின்று கரடியோடு விளையாடலாம் என்பது கண்மூடித்தனமான நம்பிக்கை.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் ஏற்படும் நம்பிக்கை தொழில் வளம் பெருக வைக்கும். முதலாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தப்புகளை எல்லாம் சரிசரி என்று தொழிலாளி நம்புகிறான்.

நம்புகிறானே என்பதற்காக முதலாளி இவன் தலையில் மிளகாய் அரைக்கிறான்.

அரைப்பது கூடத் தெரியாமல் இவன் அவனுக்கு அடிமையாகி விடுகிறான். அடிமையாகிவிட்டவன் கையில் கஞ்சிக்குக் கூட வசதி இருக்காது. இத்தனை காலம் உழைத்தும் மிச்சமில்லையே ஏன் என்ற கேள்வியோடு தலையைச் சொரிகிறான் இவன்.

இப்போதுதான் தெரிகிறது. தன் தலையில் முதலாளி மிளகாய் அரைத்திருக்கிறான் என்று. அதுவரை அவன் வைத்திருந்தது. கண்மூடித்தனமான நம்பிக்கை. என்னதான் பண்ணினாலும் இவன் கேள்வி கேட்க மாட்டான் என்று முதலாளி நம்பினான்.

தொழிலாளி நிமிர்ந்து பார்க்கும்போதுதான் கண்மூடித்தனமாக நம்பிவிட்டோமே என முதலாளி நினைக்கிறான். யானைகள் முகத்தில் தொங்கும் வரைதான் அது தும்பிக்கை! துண்டிக்கப்பட்டால்?

அளவு கடந்த நம்பிக்கை ஆண்டவனிடம் வைக்கலாம். அடுத்தவனிடம் வைக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணம்

பணம் பாதாளம் மட்டும் பாயும். பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும். பணம் இல்லாதவன் பிணம். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.

- என்று பலவிதமான பழமொழிகள் உண்டு, ஆனால் இந்தப் பொன்மொழிகளில் சொன்னபடி நடக்கிறதா என்றால் இல்லை.

பணம் பாதாள மட்டும் பாய்கிறதோ, இல்லையோ பல அழிவுகளுக்குக் காரணமாகி விடுகிறது.

பணம் ஒரு மோகனமான மூன்றெழுத்து அழகி. அழகி என்பதால் படி தாண்டாப் பத்தினி என்று பறைசாற்ற முடியாது.

பணம் ஒரு கடைந்தெடுத்த விபச்சாரி. ஒருவனிடத்தில் உருப்படியாக இருக்காமல் பலரிடமும் போகிறாள். அதனால் விபச்சாரி.

இவளால் வாழ்விழந்த வனிதையர்கள் ஏராளம். பிரிக்கப்பட்ட குடும்பங்கள் அறுக்கப்பட்ட தாலிகள் ஏராளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாளை அறிவாளியாக்கி, அறிவாளியை அலையவிடுவதில் அதிக பங்கு இவளுக்குண்டு.

இரக்கமுள்ளவரிடம் இருக்காது. கல்நெஞ்சர்களின் காலடியில் கிடப்பவள்.

சிலருக்கு எட்டாத உயரத்தில் இருப்பாள். ஏணியாக நின்று சிலரை ஏற்றியும் விடுவாள்.

பசி பசி என ஏழை பதறும்போது அவள் பசிபோக்க வரமாட்டாள்.

ஆம்! பசி உள்ளவனிடம் இருக்காத இவள், பசி இல்லாதவனிடம் இருப்பாள்.

இவள் இருப்பதால் பலருக்குப் பசி போனதும் உண்டு.

பசி இல்லாதவரிடம் இவள் இருப்பதும் உண்டு.

எப்படித் தேடினாலும் கிடைக்க மாட்டாள். தேடாத வேளைகளில் தானாக வந்து சேர்வாள்.

இவள் நெருங்க நெருங்க மனிதனுக்கு நிம்மதி இல்லை. பசி இல்லை; தூக்கமில்லை.

எண்ணங்களைக் கிண்டி மனிதனை எத்தன் ஆக்குவதில் வல்லவள்.

பண்பை விலை கூற வைத்து, பாசத்தை மோசம் செய்து, சந்தைச் சரக்காக மனிதனை மாற்றி விடுவாள்.

திக்கற்று திசைமாறிப் போன குடும்பங்கள் அவள் சிரிக்காமல் இருந்ததன் பிரதிபலிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் சிரித்து சீரழிப்பாள். சிரிக்காமலும் சீரழிப்பாள். முற்றும் துறந்தவனும் இவள் மோகவலையில் வீழ்வதுண்டு. பற்றற்றுப் போகவும் வைப்பாள். பகல் வேடம் போடவும் வைப்பாள். திட்டங்கள் போடவும் வைப்பாள். திசைமாறிப் போகவும் வைப்பாள். துன்பத்தைச் சேர்த்தும் வைப்பாள். துயரத்தை நீக்கியும் வைப்பாள். வைத்தியனை அழைப்பதும் இவள்தான். வளமோடு வைப்பவளும் இவள்தான். திக்கற்ற சிலபேரை திசைமாறிப் போக வைப்பாள். கடன்காரனாக ஆக்கியும் வைப்பாள்.

உலகத்தையே ஆட்டிப் படைக்கும் இவள், பல நாட்டு அரசியலை மாற்றியும் இருக்கிறாள்.

எழுந்து நிமிர்ந்து நிற்க வழிகாட்டியும் இருக்கிறாள். வறுமையும் இவளால் வரும். நல்ல வாழ்வும் இவளால் வரும். கொடுமை செய்யவும் தூண்டுவாள். நல்ல கொள்கையையும் வகுப்பாள். இவளை அடைந்து விட்டால் புகழும் வரும், பொல்லாங்கும் வரும். சபை ஏறி பேசவும் வைப்பாள். சரிந்து விழவும் வைப்பாள். ஆகவே, பணம் என்னும் இந்தப் பாவையைத் தேடுவதும் கஷ்டம். கிடைத்துவிட்டால் வைத்துக் காப்பதும் கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடியாட்சி அரசியல்

மனிதன் தொட்டுப் பார்க்காத எதுவும் இந்த மாநிலத்தில் கிடையாது.

அவன் கால்படாத இடமும், கைபடாத பொருளும் உலகத்தில் இல்லை.

பெண்ணைத் தொட்டான்,

பொன்னைத் தொட்டான்,

மண்ணைத் தொட்டான்,

விண்ணில் பறந்து சந்திரனில் மண்ணைத் தொட்டான்.

மேழி தொட்டவன்,

ஆழியில் மீன் பிடித்தவன்,

தாலி செய்தவன் - எல்லைக்கோடு போட்டு வேலி அடைத்தவன். கோழி வளர்த்தவன், கோயில் கட்டியவன்.

மால் கொண்டான் - பெண்ணின் சேல் தொட்டான், கால் தொட்டான் - செங்கோல் தொட்டான். ஆம்! ஆள வந்தான். அரசியலைத் தொட்டான் அரசன் ஆனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் என்பவன் ஆண்டவனால் அரசனாகப் படைக்கப்பட்டவன் அல்லன்.

பூமியில் எல்லைக் கோடு போட்டு "இது உனது நாடு. இதில் ஆட்சி செய்து கொள்" என இறைவன் இவனுக்குத் தானமாகக் கொடுக்கவும் இல்லை.

எல்லோரையும் போல பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்ற நிலையில் பிறந்து வளர்ந்தவன் தான் இவன்.

அந்தப் பத்தை விட, இவன் கொஞ்சம் பளபளப்பாகத் தெரிந்தான்.

அதனால், இவனை கோபுரத்துக் கலசம் என்று சொல்ல முடியாது.

உப்புக்கல்லுக்கு மத்தியில் கிடந்த வைரக் கல்லும் அல்ல.

குப்பையில் ஒரு குண்டுமணி என்றும் சொல்ல முடியாது.

ஆனாலும், ஏதோ ஒன்று இவனிடம் இருந்தது. அதனால், அந்தப் பத்தும் இந்த ஒன்றை நம்பியது.

இவன் சொன்னது எடுபட்டது.

இவன் கேட்டது கிடைத்தது.

இவன் எண்ணியது நடந்தது.

இவன் எண்ணியது பலித்தது.

அதனால் அந்தப் பத்திற்கு இவன் தலைவன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து நூறானது, நூறு ஆயிரம் ஆனது, ஆனாலும் இவன்தான் தலைவன். இறைவன் படைத்த மண்ணிற்கு எல்லை போட்டான். எல்லைக்கு வெளியில் உள்ளவன் இதற்குள் வரக்கூடாது என்றான்.

ஆமாம் என்றது ஆயிரம்.

அப்படி வருவதனால் கப்பம் கட்ட வேண்டும்; கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்றான்.

அதற்கும் ஆமாம் என்றது ஆயிரம்;

எல்லைக் கோடு விரிந்தது.

ஊர் பல ஊர்கள் ஆயின;

பல ஊர்கள் நாடாக மாறியது;

இப்போது இவன் அரசன்;

முடிசூடிக் கொண்டான்.

தன் நடை, உடை, பாவனையில் மாற்றம் பண்ணினான். மக்கள் அரசன் என்றனர்.

நாடு என்னுடையது. நீங்கள் என் பிரஜைகள் என்றான் மன்னன். அதற்கு நாடே ஆமாம் என்றது.

நாட்டின் எல்லைக்குள் உள்ள அசையும் அசையாப் பொருட்கள் அனைத்தும் என் ஆளுமைக்குக் கட்டுப்பட்டது என்றான். அதற்கும் ஆமாம் என்றார்கள் மக்கள்.

காடு விளையும் கனியும்

கழனி நிறைந்த நெல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடு திறந்த பஞ்சும்

உண்ண, உடுக்க வசதியும் பெருக வேண்டுமானால் வரி தாருங்கள் என்றான். கொடுத்தனர். அம்மி என்றால் அரைக்கக் குழவி இருக்க வேண்டும்.

உரல் என்றால் இடிக்க உலக்கை இருக்க வேண்டும்.

சாடி என்றால் அதற்கொரு மூடி தேவை.

அடுப்பு இருந்தால் எரிக்க விறகு கட்டாயம் தேவை.

விளக்கு இருந்தால் போதுமா? வெளிச்சம் தர எண்ணெய் வேண்டும்.

கண் என்றால் இமை இருக்க வேண்டும்.

கழுத்து என்றால் நகை இருக்க வேண்டும்?

பெண் என்றால் துணை இருக்க வேண்டும்

ஆலோசனை கூற அமைச்சர் இருக்க வேண்டும் அல்லவா?

படை அமைத்தான், தன்னை அரசனாக்கிய சிலரை அமைச்சர் ஆக்கினான்.

அமைச்சர்கள் ஆலோசனைப்படி கொள்வனவு கஜானாவை நிறைத்தது.

அமைச்சர்கள் அளந்து எடுத்தால் அரசன் அளக்காமலே எடுத்தான்.

அன்று அன்னையர் குலத்திற்கு தலை வணங்கிய இவன், அரசனானதும் அந்தப்புரத்திற்கு அதிக பெண்கள் தேவைப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குலத்தை வணங்குங்கள் என்று ஆணையிட்ட மன்னனுக்கு அந்தப்புர நாயகிகளின் அணைப்பு இல்லாமல் தூக்கம் வர மறுத்தது.

மது அருந்துவது மாபெரும் குற்றம் என அன்று பிரச்சாரம் செய்த மனிதன், அரசன் ஆனதும் மது இன்றி உணவு உட்செல்ல மறுத்தது.

ஒவ்வொருவரும் சேமிக்க வேண்டும் என உத்தரவு போட்டவன், ஊர்ப்பணத்தை வரி என்ற பெயரில் சேமித்துக் கொண்டிருந்தான்.

- அளவோடு உண்ணுங்கள் என அன்று ஆணையிட்டவன், இன்று அளவு இன்றி உண்டு கொண்டிருந்தான்.

அன்று கஞ்சிக்கு அலைந்தவன் அறுசுவையோடு உண்ணுகிறான்.

அன்று கட்டாந்தரை - இன்று கட்டிலறை.

அன்று ஒட்டுத்துணி - இன்று பட்டு ஆடை.

அன்று பசித்த வயிறு - இன்று பசியற்ற நிலை.

எதைச் செய்தால் தவறு என்று மக்களுக்குச் சொன்னானோ, அந்தத் தவறை இவன் செய்து கொண்டிருந்தான்.

தவறுக்காக பிரஜைகள் தண்டிக்கப்பட்டார்கள். அரசனைத் தண்டிக்க ஆளில்லாமல் இருந்தது.

அன்று மக்கள் மத்தியில் நின்று பேசிய மனிதனை மக்களால் பார்க்கவே முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீரிலே குளித்தல்

பழரத்தில் நீச்சல்

கன்னியர் புடை சூழ்ந்த கட்டிலறை வாழ்வு மன்னன் கண்டான்.

மன்னனுக்குச் சொத்து - சுகம் - பொன் - பொருள் என்று குவியத் தொடங்கியது.

தனக்குப் பின் தன் பிள்ளைகள் ஆள வேண்டும் என எண்ணினான். எண்ணத்தை வெளியிட்டான். அதைத் தொடர்ந்தான்.

விதி ஒரு மூலையில் உட்கார்ந்து சிரித்தது. "நாம் ஏன் ஆளக் கூடாது?" என்ற எண்ணம் பலருக்கு ஏற்பட்டது.

தனது ஆலோசனைப்படிதானே இவன் ஆட்சி செய்கிறான். நானே அரசன் ஆனால் என்ன? என அமைச்சன் எண்ணினான்.

இவர்கள் இரண்டு பேரையும் பாதுகாப்பது நான். இந்த நாடே என் பாதுகாப்பில் இருக்கிறது. நான் அரசனானால் என்ன? என தளபதி எண்ணினான்.

பணக்காரனின் படுக்கை அறையைச் சுத்தம் பண்ணும் ஏழைக்கு பஞ்சணையில் படுக்க ஆசை வரத்தானே செய்யும்.

தேனைத் தொட்டவன் கையை நக்கத்தானே செய்வான்.

இந்த ஆசைதானே பல சாம்ராஜ்யங்களை அழித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டோவின் போக்கு ஒரு முஜிபுர் ரஹ்மானை உருவாக்கியது.

முஜிபுர் ரஹ்மானுக்கு பாகிஸ்தானை எதிர்த்து ஆளும் ஆசை.

பங்களாதேசுக்கு பாதை போட்ட முஜிபுர் ரஹ்மான் குடும்பத்தையே அழித்து ஆட்சி பீடம் ஏறியவர்கள் உள்ளத்தில் பாசமா இருந்தது?

பூட்டோவைத் தூக்கிலிட்டு பாகிஸ்தானை ஆட்டிப்படைத்த "சியாவுல் ஹக்" கிடம் இருந்தது பாசமா? பதவி வெறியா?

கஜானாவில் கைவைக்காத கண்ணியவான்.

தான் கைபடத் தைத்த தொப்பியை விற்று திருமறையை பிரதி எடுத்து விற்று - அதில் வந்த வருமானத்தைத் தன் செலவுக்குப் பயன்படுத்தினான்.

கடும்போர் நடக்கும் களத்தில் கூட நேரத்திற்குத் தொழத் தவறாதவன்.

இவன் துணிவைக் கண்டு எதிரிகள் இவன் தொழுது முடியும் வரையில் போர் நிறுத்தம் செய்வார்கள் என ஆலங்கீர் பாதுஷா ஒளரங்கசீப் பற்றி சரித்திரக்காரன் அற்புதமாக எழுதுகிறான். ஆனால், தந்தையைச் சிறையிட்டு அவர் கண்ணைக் குருடாக்கி தங்கையின் உதவியுடன் சகோதரர்களை வீழ்த்தி அரியணை ஏறியவன் ஒளரங்கசீப் என்ற விஷயம் சிந்தனைக்கு இதமாக இல்லையே.

சேர, சோழ, பாண்டியர் என்ன கூட்டணி அமைத்து குணமான ஆட்சியா நடத்தினார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலனை அவைக்கு அழைக்காமல் மரண தண்டனை விதித்தது பாண்டிய நெடுஞ்செழியனின் பதவித் திமிரைத்தானே காட்டுகிறது.

மதுரை அழிந்தது மன்னன் தவறில்தானே. புத்தம் சரணம் கச்சாமி என்று பிற்காலத்தில் சொன்ன அசோகன் கலிங்கத்தில் ஓடவிட்ட ரத்த ஆற்றில் எத்தனையோ தாலிகள் அடித்துச் செல்லப்பட்டதே!

நம் நாட்டுக் காசியப்பன் கதை என்ன கண்ணியத்திற்குப் புண்ணியம் சேர்ப்பதாகவா உள்ளது?

தன் குடும்பம்தான் ஆளவேண்டும் என்றெண்ணிய மன்னன் அதைத் தொடர்ந்தான்.

முடியாட்சி வேண்டாம். குடியாட்சி வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடியாட்சி

அளவுக்கு மீறினால் அனைத்தும் விஷம் என்ற உண்மையை மன்னன் மறந்தான்.

மறதி மறு பதிப்பு ஆகியதால் மக்களிடம் வெறுப்பு வேரூன்றத் தொடங்கியது.

வேரூன்றத் தொடங்கிய வெறுப்புக்கு நீர் பாய்ச்சி உரமும் இட்டான் ஆள ஆசைப்பட்ட ஒருவன்.

கட்டாந்தரையிலே தொட்டால் எலும்பு குத்தும் குழந்தைகளோடு நீங்கள் உறங்குகிறீர்கள்.

பட்டு விரித்த தரையில் பாதம் நோகாமலே நடக்க வசதி மன்னனுக்கு. பழைய சோறு கூட இல்லாமல் மக்கள்; பலவகை உணவு அவனுக்கு.

குடிக்கத் தண்ணீருக்கும் வழியில்லாமல் கண்ணீரில் மிதக்கிறார்கள்.

அவனோ பன்னீரில் குளிக்கிறான். பழரசத்தில் நீந்தி, கன்னியர் புடைசூழ்ந்த கட்டிலறை வாழ்க்கை நடத்துகிறான். இந்த நிலை நீடிக்கலாமா?

ஆகவேதான் சொல்கிறேன் மன்னன் வேண்டாம் மக்களே நீங்கள் ஆள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் ஒரு கோடி மக்களை ஆள்வதா? வேண்டாம்.

உங்களை நீங்களே ஆள வேண்டும் என்றான். அன்று மன்னன் சொன்னபோது ஆமாம் என்றது கூட்டம்.

இன்று இவன் சொன்ன போதும் ஆமாம் என்றது கூட்டம்.

நீங்களே ஆளவேண்டும் என்றதும் மக்களும் ஆள ஆசைப்பட்டனர்.

ஆள ஆசைப்பட்டவன் பேச எழுந்து விட்டால் அற்புதமான வார்த்தைகள் அவன் வாயில் வரும்.

அவன் சொல்கிற பொய் அனைத்தும் மெய் என மக்கள் நம்பினர்.

நம்பும் விதத்தில் தான் பேசுவான். அற்புதமாகப் பேசி ஆட்சிக்கு வந்தவன் எவனும் அற்புதமாக ஆட்சி நடத்தியதாக சரித்திரம் இல்லை.

ஜார் மன்னனை வீழ்த்தி ஆட்சிக்கு வந்தவன் அற்புதமான ஆட்சியா நடத்தினான்?

மக்கள் ஆட்சி வேண்டும் என உரத்த குரலில் கூறிய லெனின் கழனியில் இறங்கி கலப்பை பிடித்து உழுதுண்டா வாழ்ந்தான்?

லெனின் என்ன குடிசையில் உட்கார்ந்து கஞ்சி குடித்துக் கொண்டா ஆட்சி நடத்தினான்?

ஜெர்மன் மக்களைத் தட்டி எழுப்பி உலகத்தைத் தன் கைக்குள் கொண்டு வர முயன்ற ஹிட்லரின் ஆட்சி முறையைப் பார்த்த சரித்திரக்காரன் காறித் துப்புகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசோலினி என்ன முறையான ஆட்சியா நடத்தினான்?

இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? பத்தோடு பதினொன்றாக இருந்து அன்று அரசனானவன் பாவையர் பஞ்சணை என்று வாழ்ந்தான்.

அவனுக்கு ஆமாம் சொன்னவர்கள் அல்லலப்பட்டார்கள்.

"நீங்களே ஆள வேண்டும்" என உரக்கக் கூறியவன் ஆட்சி பீடம் ஏறினான். ஏற்றிவிட்டவர்கள் திண்டாடினார்கள்.

என்னவோ தெரியவில்லை. ஆட்சிக்கு வருகிறவன் வசதியோட வாழ்கிறான்.

அவனுக்கு ஆமாம் போட்டு ஆள வைத்தவன் அல்லல்படுகிறான்.

பிறரை ஏற்றிவிட்ட ஏணி ஏறாது.

பிறரைக் கரைசேர்த்த தோணி கரையேறாது. பாதாளம் தோண்டி பசும்பொன் எடுத்தவனுக்கு ஒரு பொட்டுத் தங்கம் கூட சொந்தமானதில்லை.

முத்தெடுக்கும் தொழிலாளியின் மனைவி கழுத்தில் முத்தாரமாக போடுகிறாள்?

முடியாட்சியிலும் இதுதான் நடந்தது.

குடியாட்சியிலும் இதுதான் நடந்தது.

மன்னர் தத்துவமும் இதைத்தான் சொல்கிறது.

மார்க்ஸிசத் தத்துவமும் இதைத்தான் சொல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்காரனை ஒழிக்க வேண்டும் என்பது மார்க்ஸிசத் தத்துவம்.

மக்களாட்சி கண்ட மார்க்ஸிச வாதிகள் நாட்டு மக்களை மூன்றாகப் பிரித்தார்கள்.

பணக்கார வர்க்கம்.

நடுத்தர வர்க்கம்

ஏழை வர்க்கம்

இந்த மூன்றிற்கும் மேலே ஒரு வர்க்கம் இருக்கிறது. அதுதான் ஆளும் வர்க்கம்.

இவர்கள் தத்துவப்படி பார்த்தால் ஆளும் வர்க்கம் மட்டும் தான் சிறப்போடு வாழ முடியும்.

எப்படி என்ற கேள்வி எழுகிறது அல்லவா? ஒரு பென்சிலை எடுத்துக் கொள்வோம். இதை மூன்றாகப் பிரிப்போம்.

மேல்புறம் பணக்கார வர்க்கம்

நடுப்பகுதி நடுத்தர வர்க்கம்

கீழ்ப்பகுதி ஏழை வர்க்கம்.

மேற்பகுதியான பணக்கார வர்க்கத்தை இல்லாமற் பண்ணும்போது நடுப்பகுதியான நடுத்தர வர்க்கம் பணக்கார வர்க்கம் ஆகிறது.

பணக்கார வர்க்கமாக மாறிய நடுத்தர வர்க்கத்தை அழிக்கும் போது கீழே உள்ள ஏழை வர்க்கம் பணக்கார வர்க்கம் ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிச தத்துவப்படி பணக்காரனே இல்லாத ஒரு சமதர்மம் வரவேண்டும் அல்லவா?

கீழே உள்ள பணக்கார வர்க்கத்தையும் இல்லாமல் பண்ணினால் என்ன மிஞ்சும்?

மீண்டும் ஒரு முறை சிந்திக்க வேண்டும். இங்கே அழிப்பது என்று நான் குறிப்பிட்டதை பறிப்பது என்று வைத்துக் கொள்வோம்.

பணம் படைத்தவனின் பணத்தைப் பறித்தால் அவன் ஏழையாகிறான்.

இப்போது நடுத்தர வர்க்கம் பணக்காரன் ஆகிறது. அங்கேயும் பறித்தால் அந்த வர்க்கமும் ஏழை!

அப்படி என்றால், ஏழையாய் இருப்பவன் இங்கே பணக்காரன்.

அவனிடம் இருந்தும் பறித்து விட்டால் மொத்தமும் ஏழை!

மூன்று வர்க்கமும் ஏழை வர்க்கம் ஆகிவிடுகிறது.

மீதம் இருப்பது என்ன?

பறித்த கை, கையின் சொந்தக்காரன், சொந்தக்காரனைச் சேர்ந்தவர்கள்.

அதாவது ஆளும் வர்க்கம்!

இந்த ஆளும் வர்க்கம் மட்டும்தான் பணக்கார வர்க்கமாக இருக்கும்.

அவனிடம் கையேந்தும் பிச்சைக்காரர்களாக ஆளப்படுவோரான மக்கள் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்பவன் கொடுப்பதை உண்டு,

தருவதை அணிந்து,

சொல்வதைக் கேட்டு

ஏவலை முடிக்கும் எடுபிடிகளாக மக்கள் வாழவேண்டும்.

அப்படி அடிமைகளாக வாழும் இவர்கட்கு விரும்பியதை வாங்க முடியாது. சம்பள உயர்வு கேட்க முடியாது. வேலை நிறுத்தம் பண்ண முடியாது. போராட்டம் நடத்த முடியாது.

"இம்" என்றால் சிறை வாசம்.

"ஏன்" என்றால் மரண வாசம்.

தட்டிக் கேட்டால் காணாமல் போய் விடுவான் கேட்டவன். அப்படி ஒரு வட்டத்திற்குள் மக்களை இந்த ஆளும் மனிதன் மக்களாட்சி என்ற பெயரில் வைத்திருந்தான்.

அதற்கு ஒரு தாரக மந்திரம் இந்த மக்களாட்சி மனிதன் கையில் இருந்தது.

எங்கள் நாடு,

எங்கள் பூமி,

எங்கள் மொழி,

எங்கள் இனம்,

எங்கள் மதம்

- என இந்த மக்களாட்சிக்காரன் சொல்லும்போது இந்த மக்கள் கூட்டமும் சேர்ந்து சொன்னது, மக்களாட்சிக்காரன் சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிரிப்பிற்குள் மறைந்து கிடந்த உண்மை இந்த மக்கள் கூட்டத்திற்குத் தெரியாது.

தெரியாமல் மக்களாட்சிக்காரன் மறைத்து வைத்திருந்தான்.

“அட மடையர்கள் கூட்டமே! இந்த நாடு - பூமி - இனம் - மொழி - மதம் அனைத்தும் எங்களுடையவை” என்ற பொருள் தொக்கி நின்றதை மக்கள் உணரவில்லை.

அந்த மக்கள் கூட்டத்திற்குள் ஒருவன் உணரத் தலைப்பட்டான்.

அந்த மக்கள் கூட்டத்தில் உள்ள ஒரு மனிதனை இறைவன் சிந்திக்க வைத்தான்.

சிந்தித்தவன் பேசத் தொடங்கினான்.

அவன் சிங்காரப் பண் இசைக்கிறான்.

நீங்கள் சிதைந்து கிடக்கிறீர்கள்!

அவனுக்குப் பல்சுவை உணவு!

உங்களுக்குப் பழைய சோறு கூட இல்லை!

அவனுக்குப் பட்டாடை!

உங்களுக்கு ஒட்டுப் போட்ட துணி!

அவனுக்கு கனகமணிக் கட்டில்

உங்களுக்குக் கட்டாந்தரை!

பால் தருவேன், பழம் தருவேன், அணி தருவேன், ஆடை தருவேன், வீடு தருவேன், விதைக்க நிலம் தருவேன் என்றான். தந்தானா? இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை துந்தனா போட வைத்து அவன் தந்தனா பாடுகிறான்.

மன்னன் ஆண்ட காலத்தில் மனிதனாக வாழ்ந்தீர்கள். இன்று மிருகத்தை விடக் கேவலமாக மதிக்கப்படுகிறீர்கள்.

அராஜகம் - அடக்குமுறை அயோக்கியத்தனம் ஆட்சி நடத்துகிறது.

கொடுமை கொக்கரிக்க வறுமை வாய் பிளந்து நிற்கிறது.

ஆண்டவன் இல்லை எனும் அயோக்கியன் ஆலயங்களை மூடிவிட்டான்.

இதோ காட்டுகிறேன் நான் சரியான வழி!

ஆள்வோரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்!

உங்களால் தெரிவு செய்யப்படுகிறவன் தான் ஆளவேண்டும்! நீங்களும் போட்டியிட்டு ஆளவரலாம் என இவன் பேசத் தொடங்கியதும் இவன் சொல்வது சரி என்றது அந்தக் கூட்டம்.

அன்று ஆமாம் போட்ட அதே கூட்டம் இன்றும் ஆமாம் என்றது.

தேர்தல் மூலம் ஆள்வோரைத் தெரிவு செய்யும் ஜனநாயகத்தை இந்த அரசியல்வாதி தந்தான்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக அரசியல்



ஆள்வோரைத் தெரிவு செய்ய ஆளப்படுவோனுக்கு உரிமை.

ஆளுக்கு ஒரு வாக்குமூலம் ஆள்வோனைத் தெரிவு செய்யலாம்.

தெரிவு செய்யப்படுபவர் ஐந்து ஆண்டுகட்கு ஆளமுடியும்.

முறையாக ஆள்வதில் குறை உள்ளவன் என்பதால் அவனை மாற்றி புதியவனைத் தெரிவு செய்யும் முறை. இதற்கு ஜனநாயகம் என்று பெயர் வைத்தான் மனிதன்.

ஜனநாயகம் என்றால் ஜனங்கள்தான் நாயகம் என்று மக்கள் எண்ணினர்.

ஜனங்களால் தெரிவு செய்யப்படுகிறவன்தான் ஜனங்களின் நாயகன் என்று அரசியல்வாதி நினைத்தான்.

ஜனநாயகத்தைக் கண்டுபிடித்தவனுக்குத் தெரியும் மக்களை ஏமாற்ற மகத்தான வழி இது என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் முறை வந்தது. தேர்தலிலே பலர் குதித்தனர். கூட்டங்கூட்டமாகக் குதித்த மனிதன் அந்தக் கூட்டத்திற்கு ஒரு பெயர் வைத்தான்.

கட்சி என்றான் ஒருவன். கழகம் என்றான் மற்றொருவன். இயக்கம் என்றான் இன்னொருவன். முன்னணி என்றான் மற்றும் ஒருவன். சுயேச்சை என்றான் ஒரு சோம்பேறி. சுயேச்சைக் கூட்டம் இருக்கிறதே, கட்சித் தலைவர்களைக் கச்சைக்குள் வைக்கும் திறமை உள்ளது. சுய இச்சைக்காக எதையும் செய்வார்கள்.

கட்டறுந்த மந்தை.

கட்டாக்காலி மாடுகள்.

எங்கே பசை இருக்கிறதோ அங்கே ஒட்டிக் கொள்ளும் சுவரொட்டிகள். இந்த சுயேச்சைகள். இந்தக் கூட்டத்திற்கு ஒரு சின்னம் தேவைப்பட்டது.

கழுதை என்றான், குதிரை என்றான், யானை என்றான், பறவை என்றான், கை என்றான், கதிரை என்றான்.

வாக்குக் கேட்பவன் வேட்பாளன் ஆனான். வாக்குக் கொடுப்பவன் வாக்காளன் ஆனான். வண்டிக் கணக்கில் வாக்குறுதிகளை அள்ளி வீசினான் வேட்பாளன்.

எந்த வண்டிச் சரக்கு என்று தெரியாமல் முடியைப் பிய்த்துக் கொண்டான் வாக்காளன். நிறைவேறாத வாக்குறுதி என்பது வேட்பாளனுக்குத் தெரியும்.

நிரந்தரமற்றது என்று வாக்காளனுக்குத் தெரியாது. இந்த வேட்பாளன் சொல்லும் அனைத்தையும் அலசிப்பார்க்கும் அளவுக்கு வாக்காளனுக்குச் சக்தி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலசிப்பார்க்க முடியாத வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறான் என்பதால் அரசியல்வாதியானான்.

கொடுக்க வேண்டியதைக் கொடுத்து எடுக்க வேண்டியதை எடுக்கும் முறையை அரசியல்வாதி தெரிந்து வைத்திருக்கிறான்.

ஜனநாயக ஆட்சி நடக்கும் நாடுகளில் நல்ல முறையில் தேர்தல் நடந்ததாகப் படிக்கிறோம்.

இந்திய, இலங்கைத் தேர்தல் முறையைப் பார்க்கும்போது, படிக்கும் போது முன்பு படித்தது தப்பாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

தேர்தல் முறையைச் சீரழித்து, ஜனநாயகத்தை நாறடித்து சந்தி சிரிக்க வைத்த பெருமை இந்திய, இலங்கை அரசியல்வாதிகளைச் சாரும். வாக்காளன் வாக்களிக்காமல் வாக்குப் பெட்டியை நிறைக்கும் வித்தை இவனிடம் உண்டு.

வஞ்சகமாகவும் வாக்குப் பெறுகிறான். வம்புத் தனமாகவும் வாக்குப் பெறுகிறான். பாட்டாளிக்குப் பணம் கொடுத்து வாங்குகிறான். பசியாளிக்குச் சோறு போட்டு வாங்குகிறான். பதவி தருவேன் என்று சொல்லி பட்டதாரியிடம் வாங்குகிறான்.

பாதை தருவேன் என்று பலரிடம் இருந்தும் வாங்குகிறான்.

வீடு தருவேன் என்று சொல்லி வீதியில் உள்ளவனிடம் வாங்குகிறான்.

இவனை எதிர்த்துப் பேச எந்த ஒரு வாக்காளனுக்கும் உரிமை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் ஓட்டுப் போட்ட சட்டை போட்டவன் பட்டுச் சட்டை வாங்கிய பின்தான் ஓட்டுப் போட்டான்.

அரசியல்வாதியைத் தட்டிக் கேட்கும் உரிமை இவனுக்கு இல்லை.

அப்படி எவனாவது ஒரு நல்லவன் எதிர்த்துக் கேட்டால் போட வாக்கு இருக்காது. பேச நாக்கிருக்காது. இன்றேல் வாக்களிக்க இவன் இருக்க மாட்டான்.

சண்டித்தனத்தையும் சண்டாளத்தனத்தையும் கற்றுத் தேறியவன் அரசியல்வாதி என்ற புதிய தத்துவத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறது ஜனநாயகம்.

இந்தக் கலாசாரத்தை நடைமுறைப்படுத்திய பெருமை இந்திய, இலங்கை அரசியல்வாதிகட்கு உண்டு.

தேர்தலில் போட்டி இடுகிறவன் என்னென்ன தகுதி உள்ளவனாக இருக்க வேண்டும் என்று ஜனநாயகம் வரையறுத்துச் சொல்லவில்லை.

வாக்காளர் பட்டியலில் பேர் பதிவாகி விட்டால் போதும். மனிதன் வாக்காளனாகவும், வேட்பாளனாகவும் மாறும் தகுதி பெறுகிறான்.

அதனால் யார் யார் போட்டியிடுவது என்ற விவஸ்தை இல்லாமல் போய்விட்டது.

கையில் பணம் இருந்தால் போதும் அவன் வேட்பாளன் ஆகிறான்.

அவன் பணம் சேர்த்தது எப்படி என்று யாரும் கேட்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கொலைகள் பண்ணிய பூலான்தேவி நாடாளுமன்ற உறுப்பினராகி இருக்கிறாள்.

பகற்கொள்ளை அடித்த எத்தனையோ பேர் பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கிறார்கள்.

நாட்டை வெள்ளைக்காரனுக்குக் காட்டிக் கொடுத்தவர்கள் பரம்பரை நாடாண்ட சரித்திரம் நடந்திருக்கிறது.

பிறந்ததை நிரூபிக்க பிறப்புச் சான்றிதழ், இறந்து விட்டான் என்பதை நிரூபிக்க இறப்புச் சான்றிதழ்.

கல்யாணமானவன் என்பதைக் காட்ட கல்யாணப் பதிவு.

தொழில் தேடிப் போனால் கல்விச் சான்றிதழ். சாதாரணக் கூலி வேலைக்குப் போனால்கூட கெரக்டர் சர்டிபிகேட் கேட்கின்ற இந்தக் காலத்தில் தேர்தலில் போட்டியிட எந்த சர்டிபிகேட்டும் கிடையாது.

ஆசிரியர் என்றால் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். வாகனம் ஓட்டுவதற்கு ரைவிங் லைசன்ஸ் வேண்டும்.

டாக்டர் என்றால் மருத்துவம் படித்திருக்க வேண்டும். வக்கீல் என்றால் சட்டம் படித்திருக்க வேண்டும்.

நீதிபதியாவதற்கு பல்லாண்டு வக்கீல் தொழில் செய்த அனுபவம் வேண்டும்.

இந்த அரசியல்வாதிக்கு, ஊராளவோ நாடாளவோ தராதரம் கேட்கப்படுவதில்லை.

அதனால் கண்ணியவானும் வருகிறான்; கயவனும் வருகிறான். கல்வித்தரம் உள்ளவனும் வருகிறான். கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டும் வருகிறான். அதனால் சரியான அரசியல்வாதி யார் என தரம் பிரித்துப் பார்க்க முடிவதில்லை.

அதனால் ஆட்டுக்குட்டிக்கு ஓநாயை தொட்டப்பா ஆக்கிவிடுகிறார்கள்.

பறவை இனம் தான் என்பதற்காக கோழிக்கு கழுகைக் காவல் வைத்து விடுகிறார்கள்.

அழகாக இருக்கிறது என்பதற்காகக் காஞ்சிலம் பழத்தை சந்தைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

நாயைப் போல நரியும் இருக்கிறது என்பதற்காக நன்றியை எதிர்பார்க்கிறார்கள்.

நரியிடம் குடல் கழுவக் கொடுத்துவிட்டு சாப்பிட இலை போட்டு உட்கார்ந்து விடுகிறார்கள்.

குதிரை பண்ண வேண்டிய வேலையை எருமை செய்யும் என எதிர்பார்க்கிறார்கள்.

தங்கத்தால் தகடு செய்து, வைரத்தால் ஆணி அடித்தாலும் செருப்பைக் காலில்தான் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதை மறந்துவிட்ட காரணத்தால் தலையில் தூக்கி வைத்துக் கொள்கிறார்கள்.

வேங்கையை வெள்ளாட்டுக்குத் துணை போக வைத்துவிட்டு, தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைப்பது இந்த வாக்காளர்களின் வாடிக்கையாகிவிட்டது.

சரியான அரசியல்வாதி யார் என்று தெரியாமல் ஓட்டுப் போட்டு தர்மத்தைப் புதைத்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் யாருக்கு ஓட்டுப் போடப் போகிறீர்கள்?" என்று கவிஞர் கண்ணதாசனிடம் ஒருவன் கேட்டான்.

"இன்னாருக்கு ஓட்டுப் போடப் போகிறேன்" என்றார் கண்ணதாசன்.

"அந்தாள் அயோக்கியன் ஆயிற்றே. அவரை விட இவர் நல்லவராயிற்றே இவருக்கு ஓட்டுப் போடலாமே" என்றார் கேட்டவர்.

"அதனால்தான் அந்தாளுக்கு ஓட்டுப் போடப் போகிறேன்" என்ற கண்ணதாசன் "நல்லவனையும் பிடித்து சட்டசபைக்கு அனுப்பி அவனையும் கெடுப்பானேன்" என்றார்.

நல்லவர்களை நாடாளுமன்றம் அனுப்ப மக்கள் விரும்பவில்லையா என்ற கேள்வி நாட்டு நடைமுறையை நோக்கும்போது எழுகிறது.

தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்காமல் நிறைந்து இருப்பதுதான் ஆள்வோனின் சிறப்பு என்ற குறள்மொழி பிரேமதாசவுடன் புதைக்கப்பட்டு விட்டது.

தவறை எப்படிச் செய்யலாம்? நேர்மையை வளைக்க வழி என்ன? தப்பைத் தப்பாமல் செய்வது எப்படி என்பதை அரசியல்வாதிகளிடம் கற்றுக் கொள்ளுங்கள் என ஜனநாயக அரசியல் சொல்லாமல் சொல்கிறது.

மக்கள் உரிமைகளை மறுக்காதே என ஜனநாயகம் சொல்கிறது.

அதை மறுபக்கம் புரட்டிப் போட்டு ஜனநாயகம் அரசியல் வேடிக்கை பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் மீனைப் பிடித்து தரையில் போட்டால் என்ன நடக்குமோ?

ஆமையை மல்லாத்திப் போட்டால் எப்படித் தவிக்குமோ? அப்படித் தவிக்கிறது ஜனநாயகம்.

திசை காட்டும் கருவியை தப்பானவனிடம் கொடுத்ததால் கப்பல் பாறையில் மோதி விட்டது. அதனால் குணநாயகமாகக் கோலோச்ச வேண்டிய ஜனநாயகத்தை இனநாயகம் கோலோச்ச வேண்டிய ஜனநாயகத்தை இனநாயகம் இழுத்துப் பிடிக்கிறது.

பணநாயகம் பாதை போடுகிறது.

மதநாயகம் மகுடி ஊதுகிறது.

மொழி நாயகம் மோகனம் இசைக்கிறது.

வெறி நாயகம் வேரூன்றி விட்டது.

பிண நாயகம் பெருவிழா நடத்துகிறது.

அதனால் ஜனநாயகம் இழி நாயகமாகி பழி நாயகமாக பாரறிய உயர்ந்துவிட்டது.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டம்

புத்தளத்தில் ஒரு பழைய வீடு இருக்கிறது. அங்கு அன்று போனேன். வீட்டுச் சுவரில் வீட்டுச் சொந்தக்காரனின் பெரிய அளவு புகைப்படம் ஒன்று மாட்டி இருந்தது.

இது யாருடைய படம் என்று இருந்தவரிடம் கேட்டேன்.

எங்க வாப்பாவும் சின்னாப்பாவும் என்று சொன்னார். கமார் எழுபது ஆண்டுகட்கு முந்தியது அந்தப் படம். இந்தக் காலத்து லெமினேட்டிங் முறை இல்லாத காலத்தில் எடுக்கப்பட்டது.

எந்தச் சிதைவும் இல்லாமல் அற்புதமாக இருந்தது. ஒரு கண்ணாடி அதன் பின்னால் அந்தப் படம். அதற்குப் பின் தடிப்பான பாதுகாப்புப் பலகை. ஓரத்தைச் சுற்றி சட்டம்.

ஒரு புகைப்படம் சட்டம் போட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஆம்! கண்ணாடிச் சட்டம் போட்டுப் பாதுகாத்து இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புகைப்படத்தைப் பாதுகாக்க உறுதியான சட்டம் தேவைப்படுகிறது.

அந்தக் கண்ணாடிச் சட்டம் சரியாக அமையாவிட்டால் படம் சிதைந்துவிடும்.

பூச்சிகள், எறும்புகள் நுழைந்து அரித்திருக்கும்; தூசு நுழைந்து சிதைந்திருக்கும்.

ஒரு படத்தைப் பாதுகாக்க உறுதியான கண்ணாடிச் சட்டம் தேவைப்படுகிறது என்றால் நாட்டைப் பாதுகாக்கும் சட்டம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

என எண்ணிய மனிதன் சட்டத்தை உண்டாக்கினான்.

மனிதத் தேவைக்காக மனிதன் நேராக - நெறியாக - முறையாக - முன்னேற்றமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் உண்டானது மனிதச் சட்டம்.

மனிதச் சட்டம் என்பதாலோ, என்னவோ சில ஓட்டைகள் இருந்தன; இருக்கின்றன.

வக்கீல் இனம் வார்த்தை ஜாலங்களால் ஓட்டைகளை உருவாக்கியது.

அதனால் ஓட்டைகளை அடைக்க பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

மனிதனால் ஆக்கப்படும் எதுவும் திருத்தப்படக் கூடியது - திருத்தப்பட்டது - திருத்தப்படுகிறது - திருத்தப்படும்.

இறைவனால் தயாரிக்கப்பட்ட சட்டம் திருத்தப்படாத - திருத்த முடியாத - திருத்த வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமோ, அவசரமோ இல்லாத சட்டம் இஸ்லாமிய சட்டம்.

மற்றைய எல்லாச் சட்டமும் திருத்தப்பட்டவைதான். சரித்திரத்தை உருவாக்கிய மனிதன் போல சட்டத்தை உருவாக்கிய மனிதனும் தவறுகள் செய்தான்.

சரித்திரத்தை எழுதிய மனிதன் சமகாலத்தில் வாழ்ந்தவன் அல்லன்.

இறந்த காலத்தில் நடந்தவைகளை நிகழ்காலத்தில் உள்ளவன் எழுதி, எதிர்காலத்தில் வாழப்போகும் சந்ததிகட்குக் கொடுக்கும் புத்தகம்தான் சரித்திரம்.

இந்த சரித்திரத்தை சிறப்பாய் எழுதியவனும் உண்டு. திருப்பி எழுதியவனும் உண்டு. திருத்தி எழுதியவனும் உண்டு, திரித்து எழுதியவனும் உண்டு. மேலெழுந்த வாரியாக எழுதியவனும் உண்டு. மிகைப்படுத்தி எழுதியவனும் உண்டு. அதுபோல சட்டத்தை ஆக்கிய மனிதனும் சில நோக்கங்களோடு எழுதி இருக்கிறான்.

மக்கள் நலம் பேண எழுதியதும் உண்டு. மக்கள் நலம் பேணுவதாக மேனா மினுக்கித் தனமாக எழுதியதும் உண்டு.

பொது நலத்திற்குள் சுயநலத்தை வைத்து எழுதியவனும் உண்டு.

பேர் நிலைக்க வேண்டும் என்பதற்காக சட்டம் ஆக்கியோரும் உண்டு.

நாட்டு மக்களை வாட்டும் விதத்தில் சட்டம் ஆக்கியவரும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட சட்டம் சரியாக இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்திய மனிதன் நாறடித்து விடுகிறான். இதனால் சரிந்து போன சாம்ராஜ்யங்களைப் பற்றி சரித்திரக்காரன் வகை வகையாக எழுதுகிறான்.

சட்டத்தைத் தமக்கு ஏற்ற விதத்தில் வளைத்துக் கொள்கிறார்கள் அதிகாரமுள்ளோர்.

இதனால் நிமிர்ந்து நிற்க வேண்டிய சட்டம் நிலை தடுமாறி. நிலத்தில் விழுந்து விடுகிறது.

சட்டம் விழும்போது. தர்மம் கண்ணீர் வடிக்கிறது. கர்மம் என நல்லவர்கள் தலையில் அடித்துக் கொள்கிறார்கள்.

வக்கீல்களின் வாதத் திறமைக்கு சட்டம் விலை போகிறது.

விலை போவதால் வியாபாரப் பெருளாகிவிடுகிறது. வியாபாரப் பொருள் ஆனதால் விபச்சாரி என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறது.

இதனால் நேர்மை முறிந்து விடுகிறது.

நெறி புரண்டு விடுகிறது. நியாயம் நீசத்தனத்தால் விரட்டப்படுகிறது. தர்மம் தலை குனிந்து விடுகிறது. "சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீல்களின் வாதம் ஒரு விளக்கு" என்றார் அறிஞர் அண்ணா.

இந்த விளக்கு பணம் இல்லாதவர்க்குக் கிடைப்பது இல்லை.

பலரால் இதைப் பிடிக்க முடிவதில்லை. பிடிக்க முடியாதபடி இருட்டிலே இருந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டிலேயே இருக்க வேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ வக்கீல்கள் கறுப்பு அங்கி அணிகிறார்கள்,

குற்றம் செய்தாயா? இல்லையா? என்பதுதான் சட்டத்தின் கேள்வி.

ஆம் என்றால் தண்டனை! இல்லை என்றால் விசாரணை. ஏன் குற்றம் செய்தாய்? காரணம் என்ன என்ற கேள்விகளை சட்டம் கேட்பதில்லை. ஏன் செய்தாய் என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்கும் சட்டம் இஸ்லாமியச் சட்டம் ஒன்றுதான்.

இறைவனால் அருளப்பட்ட சட்டம் இஸ்லாமியச் சட்டம்.

இந்த சட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் பல நாடுகள் சட்டங்களைத் தயாரித்தன.

ஆக்கியவன் தனக்கேற்ற விதத்தில் ஆக்கிக் கொண்டதால், பல ஓட்டைகள் ஏற்பட்டன.

விசாரிக்கப்படும் ஒரு வழக்குக்கு சட்டப்படிதான் நீதிபதியால் தீர்ப்புக் கொடுக்க முடிகிறது.

அதாவது சாட்சிகள் சொல்கிறவற்றையும் வக்கீல்களின் விளக்க உரையையும் அடிப்படையாக வைத்தே தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. குற்றவாளி யார், நிரபராதி யார்? என்று கண்டுபிடிக்கும் சந்தர்ப்பம் நீதிபதிக்குக் கிடைப்பதில்லை.

எப்போதாவது யாராவது ஒரு நீதிபதி கண்டு பிடித்தாலும் அதைப் பொய் என்று வக்கீல்கள் நிரூபித்து விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ குற்றவாளி என்று தெரிகிறது. ஆனால் சரியான சாட்சிகள் இல்லாத காரணத்தால் விடுதலை செய்கிறேன். எனத் தீர்ப்பு கொடுக்கப்பட்ட வழக்குகள் உண்டு.

உண்மையிலேயே ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட்டால் உயர்நீதி மன்றம் அதைத் தப்பு என்று தள்ளி விடுகிறது.

உயர்நீதி மன்றமும் தீர்ப்பை வழங்கினால் கருணை மனு மூலம் ஜனாதிபதியால் மன்னிக்கப்படுகிறான்.

இங்கே தர்மம் தலைகுனிகிறது. நீதி சமாதியாகிறது. நியாயம் நீண்டு படுத்து விடுகிறது. குற்றம் கோலோச்சுகிறது. அதற்கு வக்கீல்களின் துணை இருக்கிறது. பணம் பாராட்டுத் தெரிவிக்கிறது. மறுபடியும் தவறு செய்ய இந்தக் கருணை மனு காரணமாகிவிடுகிறது.

போதைப் பொருள் கடத்தினால், வைத்திருந்தால், விற்றால், வாங்கினால், தயாரித்தால், பாவித்தால் கடுமையாகத் தண்டிக்க சர்வதேசச் சட்டம் இருக்கிறது.

அந்தக் கடத்தல்காரனுக்காக வாதாடும் வக்கீலைத் தண்டிக்க சட்டத்தில் இடம் இருக்கிறதா?

இருட்டில் இருக்கும் சட்டம் வெளிச்சத்திற்கு வரும்போது வக்கீல்கள் நீதியை கறுப்பு அங்கியினுள் மறைத்து விடுகிறார்கள். அதனால் சட்டம் தள்ளாடுகிறது.

ஒரு கொலை செய்தவனைத் தண்டிக்கும் சட்டம் பல நூறு கொலைகள் செய்தவனுக்குப் பதவி உயர்வு கிடைப்பதை சட்டம் பார்ப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கச் சில கறுப்பு அங்கிகள் விடுவதில்லை. கடன் பட்டவன் உண்மையாக நடந்து கொண்டால் சிவில் சட்டத்திற்கு வேலை இருக்காது.

குற்றவாளி உண்மையை ஒப்புக் கொண்டால் கிரிமினல் நீதிமன்றம் தேவை இல்லை.

குற்றவாளியும் நியாயம் கேட்கிறான். சுத்தவாளியும் நியாயம் கேட்கிறான். யாருக்கு நியாயம் வழங்குவது என்பதைப் பணம் பக்கத்தில் இருந்து உதவுகிறது.

வெட்கம் கெட்ட சட்டம்.

வேதனை தரும் சட்டம்.

"சத்தியமாக நான் சொல்வது எல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறில்லை!" என்று கூண்டிலேறிச் சொல்கிறவன் தன் மனச்சாட்சியை அடகு வைத்து விட்டுத்தான் சொல்கிறான்.

"நாணல் போல வளைவதுதான் சட்டம் ஆகுமா? அதை வளைப்பதற்கு வழக்கறிஞர் பட்டம் வேண்டுமா?"

மூன்று ஆண்டுகள் சந்தா கட்டத் தவறிய எந்த ஒரு நாட்டையும் உறுப்பினர் நிலையில் இருந்து அகற்றும் உரிமை ஐ.நா.சபைக்கு உண்டு என்கிறது ஐ.நா. சட்டம்.

பல ஆண்டுகளாக பலநூறு கோடி டாலர்களைக் கட்டாது இருக்கும் அமெரிக்காவை நீக்க ஐ.நா. சட்டம் விரும்புவதில்லை.

ஈராக்கிற்கு எதிராக அணு ஆயுதத் தடையை ஐ.நா. விதிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் இருக்கும் அணு ஆயுதங்களைப் பற்றி கேள்வி எழுப்பவும். ஐ.நா. சட்டம் பயப்படுகிறது.

பெரிய புள்ளி கொலை செய்தால் சட்டம் அவனை நிரபராதி என்கிறது.

ஐந்து பேர் சேர்ந்து இரண்டு கொலைகளைச் செய்து கொள்ளையும் அடிக்கிறார்கள்.

குழுத் தலைவன் கால் சிந்திக் கிடந்த ரத்தத்தை மிதிக்கிறது.

அந்த அச்சு அடுத்த பக்கத்தில் பதிந்து இருக்கிறது. காவல் துறையினர் அந்தக் கால் அடையாளத்தை சட்டத்தின் முன் வைக்கிறார்கள்.

குற்றவாளி ஒருவனைத் தண்டிக்கப் போகிறோம் என்று நீதிபதிக்கு உள்ளூர மகிழ்ச்சி.

அவனுடைய கால் அடையாளம் என்பது உண்மை.

இந்தக் கூட்டம் அவனை ஏமாற்றி அழைத்துச் சென்றது.

அழைத்துச் சென்றவர் கொலை செய்தனர். அதைக் கண்டு பயந்த இவன் ஓடினான். ஓடும் போது ரத்தத்தில் கால் பட்டுள்ளது. அதனால் இவன் கொலை செய்து இருப்பான் என்று கூறமுடியுமா? என்றார் வக்கீல்.

நீதிபதி அசடு வழிகிறார். முதலாம் எதிரியை வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டது சட்டம்.

சட்டத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாத வரை நாடு நிமிராது. நாடு நலம் பெற வேண்டுமானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகாரன் மீண்டும் ஒரு கொலை பண்ணாது தடுக்க வேண்டும்.

கொள்ளைக்காரன் மற்றும் ஒரு வீட்டைக் கொள்ளையடிக்காது இருக்க வேண்டும்.

குற்றவாளி மற்றும் ஒரு குற்றம் செய்யாது காக்க, சட்டம் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

விலைமாது எனத் தண்டிக்கும் சட்டம் அவளோடு போன ஆணையும் தண்டிக்க வேண்டும். அங்கேதான் சட்டம் சட்டமாக இருக்கும்.

உலகம் உருப்படியாக இயங்க, இஸ்லாமிய சட்டம் உலகெங்கும் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்

வானத்தைப் படைத்தான் இறைவன்.

வானத்தில் கோளங்களைப் படைத்தான்.

பூமியைப் படைத்தான்; அது ஆடியது.

மலைகளைப் படைத்தான்; ஆட்டம் நின்றது.

மலையை உடைக்கும் இரும்பைப் படைத்தான்.

இரும்பை உருக்கும் தீயைப் படைத்தான். தீயை அணைக்கும் நீரைப் படைத்தான்!

மரம் - செடி - கொடி - காய் - கனி

அனைத்தையும் படைத்தான்.

உயிரினங்கள் அனைத்தையும் படைத்த இறைவன் இறுதியில் மனிதனைப் படைத்தான். என் படைப்புகள் அனைத்தையும் விட சக்தி மிக்கவன் மனிதன் என்றான். அந்த மனிதன்தான் அனைத்து படைப்புகளையும் அனுபவிக்க தகுதிமிக்கவன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் என்னை வணங்க" என்ற பாடல் இதைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

படைக்கப்பட்ட மனிதன் காடுகளில் அலைந்தான்; அணிய உடை இருக்கவில்லை; போர் படை இருக்கவில்லை; வியாபாரக் கடை இருக்கவில்லை. அலைய தடை இருக்கவில்லை.

பிறந்த மேனியாய் திரிந்த அவனது திறந்த மேனியை மூடும்படி யாரும் சொல்லவில்லை. சொல்லத் தகுதி உள்ளவன் இருக்கவில்லை.

மறைக்க வேண்டிய உறுப்புகள் என்பதற்காகத்தான் இறைவன் ரோமத்தைப் படைத்தான் போலும்.

மறைக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு வரவே, இலைகளால் மறைத்தான். மழை வந்ததும் மரங்களுக்குக் கீழே ஒதுங்கினான். அப்போதும் நனைந்தது.

குகைக்குள் மறைந்தான். நனையவில்லை. நனையாமல் இருக்க குகை பாதுகாப்பு என எண்ணினான். ஒருவனை பாம்பு கடித்தது; அவன் இறந்துவிட்டான்! பாம்பைக் கண்டு பயந்தான்! -இன்னொருவன் பாம்பை தடியால் அடித்தான்!

பாம்பு செத்துவிட்டது! தடியால் பாம்பை வெல்லலாம் என்று எண்ணினான்.

பசித்ததும் பழங்களைத் தின்று பழக்கப்பட்ட ஆதி மனிதன் வேறு ஏதாவது உண்ண எண்ணினான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானைக் கண்டான்; அதைச் சாப்பிட நினைத்தான். பாம்பை அடித்த தடியால் அடித்தான் சாகவில்லை!

கூராக ஒன்று செய்து குத்தினான். மான் செத்தது!

கூரான ஒன்றால் மிருகத்தைக் கொல்லலாம் என எண்ணினான்.

வேட்டையாடி எடுத்து வந்த மிருகத்தை உரித்து பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

வேட்டைக்குப் போய்விட்டு வெறுங்கையுடன் திரும்பிக் கொண்டிருந்த இன்னொருவன் இவனது இறைச்சியில் கொஞ்சம் கேட்டான்.

அவன் கொடுக்க மறுத்தான்! இவன் எடுக்க முயன்றான்! அவனுக்குக் கோபம் வந்தது! இவனைத் தாக்கினான். இவன் ஈட்டியால் அவனைக் குத்தினான் அவன் இறந்துவிட்டான். இறந்தவனின் சொந்தக்காரர்கள் குத்தியவனைக் கொன்றனர். கொன்றவனை கைது பண்ண காவல்துறை இருக்கவில்லை! காவல்துறைக்கு கையூட்டு கொடுக்க ஆள் இருக்கவில்லை. நீதிபதி இருக்கவில்லை. வாதாட வக்கீல்கள் இல்லை! பகை பிறந்தது! தொடர்ந்து வேல் பிறந்தது; வாள் பிறந்தது. வில்லம்பு பிறந்தது! கேடயம் பிறந்தது! மனிதன் இரண்டாகப் பிரிவுபட்டான்! கூட்டம் இரண்டானது!

ஆளுக்கு ஒரு தலைவனை கூட்டம் தேர்ந்து எடுத்தது.

தலைவன் அரசன் ஆனான். அரசன் படைகளை உருவாக்கினான். போர்க்குணம் மனிதனிடம் அதிகமானதால் யானை, குதிரைகளையும் பயிற்றுவித்தான் யானையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றுவித்தவன் மாவுத்தன் ஆனான்! குதிரையை பயிற்றுவித்தான் ராவுத்தன் ஆனான்!

வானும், நீரும் காற்றும், நெருப்பும் பொதுவாக இருக்கும்போது தன் காலில் பட்ட பூமியை மட்டும் கோடு போட்டுப் பிரித்தான்.

அப்பன், பாட்டன் வீட்டுச் சொத்தைப் பிரிப்பது போல் இறைவன் படைத்த பூமியை மனிதன் பிரித்தான்.

பிரிவு பெரிதானபோது நேசம் விடைபெற்றது! நெறி புரண்டு விழுந்தது! தர்மம் தலை குனிந்தது! மோசம் முன்னுரை எழுதியது! நாசம் நர்த்தனம் ஆடியது! நாசம் முடிகட்டிய போது போர் பிறந்தது! அழிவு அரசோச்சத் தொடங்கியது. உலகத்தின் முக்கால் பகுதியை ஆட்சி பண்ண வர்த்தகம் என்ற பெயரில் நாட்டுக்குள் நுழைந்தனர்! புகுந்த இடத்தில் இருந்த வர்த்தகர்களை அடக்கினர்.

போர் குணத்தால் நாடு பிடித்தனர்! அண்டைய நாட்டு மன்னர்களை வீழ்த்தி ஜமீன்களைப் பறித்தனர்! நவாப்களை மடக்கினர்! இலங்கை என்ன இங்கிலாந்துக்காரனின் பாட்டன் சொத்தா?

வெள்ளைக்காரன் இலங்கையை எப்படிப் பிடித்தான் என்பதை சரித்திரம் சொல்கிறது.

முதலாவது உலகப்போரும் இரண்டாவது உலகப்போரும் சமாதானத்திற்காகவா நடந்தது?

("பேர்ல") ஹாபரை ஜப்பான் தாக்கி அழித்ததால் ஏற்பட்ட ஆத்திரம் நாகசாக்கி ஹிரோசிமாவின் அழிவுக்கு அடிப்படையாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானில் விழுந்த அணுகுண்டு லட்சோபலட்ச உயிர்களை உடனே அழித்தது. தப்பிப் பிழைத்தோர்க்கு பிறந்த குழந்தைகள் குறைபாட்டோடு பிறந்தன.

உலகம் முழுவதும் ஆளவேண்டும் என எண்ணி ஓய்வு இன்றி போர் தொடுத்த அலக்ஸ்சாண்டர் சொந்த மண்ணில் சாகவில்லையே!

அலெக்ஸ்சாண்டரின் போர்க்குணம் அவனை அடுத்த நாட்டில் அநாதையாகச் சாக வைத்தது. இந்த இடத்தில் இறைவன் சிரித்தான்.

உலகத்தை வெல்ல நினைத்த ஹிட்லரின் போர்க்குணம் அவனது முகவரியை மூளியாக்கியது.

முசோலினியின் வீழ்ச்சி முன்னேற்றத்தைத் தர கூடியதாகவா அமைந்தது?

பெண்ணுக்காக நடந்த போரால் இலங்கை எரிந்தது. மண்ணுக்காக நடந்த போர் மகாபாரதம். இதில் ஒரு உண்மை என்னவென்றால், துரியோதனன் கூட்டம் நூறுபேர். பாண்டவர் ஐந்து பேர், அந்தக் காலத்திலேயே நூற்றுக்கு ஐவர்தான் நல்லவர்.

வியட்நாம் போரில் 25 லட்சம் ஆண்கள் அழிந்தனர்.

25 லட்சம் பெண்கள் விதவை ஆயினர். அந்தப் பெண்களை ஆதரிக்க, வாழ்வு கொடுக்க ஆள் இல்லாத காரணத்தால் விபச்சாரிகளாக ஆக்கப்பட்டனர்!

பொஸ்னியாவில் நடந்தது புனிதத்தைத் தரக்கூடியதா?

செக்கோசெலவாக்கியாவில் நடப்பது சீர்திருத்தத்திற்கு சிறப்பானதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானிஸ்தானின் அடிப்படை ஆட்டங்காண காரணமானது போர்!

ஈராக் அணு ஆயுதம் வைத்திருப்பது பொற்குணமா?

ஈரான் - ஈராக் யுத்தத்தால் அழிவு கொஞ்சமா! அழிவுக்கு ஆராத்தி எடுத்துவிட்டு இஸ்லாத்தை காக்கும் புனிதப் போர் என்று பெயர் சூட்டியது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

மனிதனை மனிதன் கொலை செய்ய வேண்டும் என்றா இஸ்லாம் சொல்கிறது?

இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால், என்னால் முடியாதா என்று பாகிஸ்தானும் சோதனை நடத்துகிறது என்றால் போருக்குத் தயாராகிறார்கள் என்று தானே பொருள்.

அநாதைகளாக, அகதிகளாக, இருக்க இடம் இன்றி, உடுக்க உடையின்றி, நோய்கண்டு ஐந்து லட்சம் ருவண்டா அகதிகள் மாண்டார்கள்.

ஒவ்வொரு உடலாகப் புதைக்க நேரமில்லாத காரணத்தால் "புல்டோசர்" போட்டு பெருங்குழி தோண்டி மொத்தமாகப் புதைக்கப்பட்டது கழிவுப் பொருட்களா? அல்லவே மனித உடல்கள்!

இது போர் தோண்டிய புதைகுழி! இதற்கு யார் பொறுப்பு? ஆள்வோரா? ஆயுதம் விற்போரா? போராளிகளா? பொறுப்பில்லாதவர்களா? நாட்டிற்கு நாடு பகைமை மூட்டுகிறார்கள். ஆயுதங்களை விற்கிறார்கள்! போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூள்கிறது. அகதிகள் ஆகிறார்கள் மக்கள்! அவர்கட்கு உணவு கொடுக்கிறது. ஐ.நா.நிறுவனங்கள்! வல்லரசுகளின் ஆயுத உற்பத்தியைத் தடுக்க முடியாத ஐ.நா. சபை ஆயுத விற்பனையை தடுக்க முடியாத ஐ.நா.சபை

அந்த ஆயுதத்தால் உண்டான போர். போரால் வந்த அகதிகளுக்கு உணவு கொடுக்க முன்வருகிறது என்றால் இது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்! போரால் வீரர்கள் மட்டும் சாவதில்லை. போடுகின்ற குண்டால் பொதுமக்களும் சாகிறார்கள். காக்கை குருவிகள் போல் மனிதனையும் கொல்கிறார்கள். மனித உயிர் அவ்வளவு கேவலமானதா? கேவலமாக ஆக்கி விட்டனர் கீழ்குணம் கொண்டோர். நாட்டிற்குப் போர் என்ற காலம் மாறிவிட்டது. நாட்டுக்குள்ளேயே போர் உலகமெங்கும் நடக்கிறது! நமது நாடு என்ற எண்ணத்தால் எழுந்த போர், இந்த நாடு எனக்கு மட்டும்தான் என்ற எண்ணத்தால் எழுந்த போர்!

இதற்கு சமாதானம் போர் என்ற பெயர் சூட்டியுள்ளனர்.

நொறுங்கிய தலைகள், சிதறிய மூளைகள், முறித்த கைகள், ஒடிந்த கால்கள், துளைக்கப்பட்ட மார்புகள் கொஞ்சமல்ல!

அந்தக் குறைபாடுகளை இளைஞர்கட்கு ஏற்படுத்திய போர்; இதுவரை செத்தவர்கள் செத்துக் கொண்டிருப்பவர்கள் யார் நாட்டு மனிதர்கள். இளைஞர்கள் வாழ வேண்டியவர்கள். தாலிகளை அறுக்கவைத்த போர்; வருங்கால சந்ததிகளை வாழ்விழக்க வைத்த போர்; நிம்மதியை அழிக்கும் போர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தை சிதைக்கும் போர்! நாட்டை அழிக்கும் போர்! தீமையை விதைக்கும் போர்! அகதிகளை உருவாக்கும்! போர் அநாதைகளை உண்டாக்கிய போர்! புனித உயிராம் மனித உயிரை போக்கும் போர்! மனிதனை மனிதன் அழிக்கும் போர் - முடிவது எப்போது? முடித்து வைப்பது யார்?

ஊரெழுந்து ஓடும் விதம் போரெழுந்து வந்ததனால் சீரழிந்து போக்க சமுதாயம் இதை யார் எழுந்து சொன்னால் வரும் ஞாயம்? இந்தக் கேள்விக்கு விடைகாண மதத்தால் வேறுபடாமல், மொழியால் பிளவுபடாமல், இனத்தால் இரண்டு படாமல், நல்ல மனத்தால் ஒன்றுபட்டு மனிதனாக நின்று முடிவெடுக்க வேண்டும்! மனிதனா? அப்படி என்றால்? இப்படி ஒரு கேள்வி எழுகிறதா? இங்கேதான் பிரச்சினை பூதமாக மாறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி

நாடு ஒன்று இருக்கிறது!

அங்கே தேர்தல் நடக்கிறது!

பல கட்சிகள் போட்டி இடுக்கின்றன. ஒரு கட்சி ஆட்சி அமைக்கிறது.

மறுகட்சி எதிர்க்கட்சி ஆகிறது.

இது தேர்தல் நடக்கும் நாடுகளின் காட்சி; நாட்டுப்பற்று கொண்டோரின் மாட்சி.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ, அந்தக் கட்சியின் ஆட்சி மாண்புக்கு உரியதாக, மதிப்பிற்கு உரியதாக, மாட்சிமைக்கு உரியதாக அமைய வேண்டும்.

முன்னய ஆட்சியில் நடந்து முடிக்க முடியாமல் அரைகுறையாக நிற்கும் வேலைத் திட்டங்களை, பின்னய ஆட்சி தொடர்ந்து முடிக்க வேண்டும்.

தேர்தல் வந்து ஆட்சி மாறிய காரணத்தால் தொடங்கிய திட்டங்களை முடிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை.

அந்த முடிக்காதவற்றை முடிக்காமல் புதிய திட்டங்களைத் தொடங்கி புகழ் தேட ஆள வந்தவர்கள் முயலக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மனம் கொண்ட ஆட்சியாளர்கள் வில்லத்தனம் பண்ண மாட்டார்கள்.

அதல்லாது முன்னய ஆட்சி முறையாக வேலை செய்யவில்லை.

திட்டங்களைத் தொடங்கி முடிக்க முடியாமல் போனதற்குக் காரணம் ஊழல்.

"ஒதுக்கப்பட்ட பணத்தை விளையாடி விட்டதால், வேலைத்திட்டம் போலித் திட்டமாகி விட்டது"

"காலிப்பெட்டியாக கஜானாவை வைத்து விட்டுப் போய் விட்டார்கள்"

அதனால் "நாங்கள் போடுகிறோம் நல்ல திட்டம், நாடு போற்றும் நலமான திட்டம்" எனப் பேசிப் பேசியே நாளைக் கடத்திவிடக்கூடாது.

அப்படி நாளைக் கழித்தால், இன்று நாளை என்று, நாளை எண்ணத் தொடங்கி விடுவார்கள் மக்கள்!

அந்த எண்ணிக்கை தேர்தல் வரை நீடிக்கும்.

முன்னய ஆட்சிக்கு நடந்தது பின்னய ஆட்சிக்கும் வரும்.

எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகள் எடுத்து ஆராய்ந்து சிறப்பான கோரிக்கைகளை சிரம் ஏற்றுச் செய்ய வேண்டும்.

அப்பொழுதுதான் நிறைவான ஆட்சி என்று குறை நீக்கிப் புகழ்வார்கள் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அப்படிப் புகழ வேண்டுமானால் ஆட்சி என்பது கோடு போட்டது போன்று நேராக, நெறியாக, ஒழுங்காக, உருப்படியாக இருக்க வேண்டும்.

அதனால்தான் ஆட்சிக்கு ஆங்கில மனிதன் Rule என்று பெயர் வைத்தான். Ruler என்று ஆள்வோருக்குப் பெயர் வைத்தான்.

கோடு போடப் பயன்படுத்தும் தடி அல்லது மட்டைக்கும் Ruler என்றுதான் பெயர்.

கோடு சரியாக அமைய வேண்டுமானால் கோடு போடப் பயன்படுத்தும் தடி அல்லது மட்டை சரியானதாக இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் கோடு கோடாக இருக்கும்! கோணாமல் இருக்கும்.

கோடு கோணினால் கோலம் ஆகிவிடும்!

நான் சொல்வது வீட்டு வாசலில் பெண்கள் போடும் மாக் கோலம் அல்ல! அலங்கோலம் என்றாகி விடும்.

கோடு போடப் பயன்படுத்தும் தடிகளை (ரூல் தடிகள்) அலுவலகங்களில் கூடப் பார்க்க முடியவில்லை.

கோடு போடப் பயன்படுத்தும் பொருள் மரத்தில் அல்லது வேறு மூலப் பொருட்களில் செய்ததாக இருக்கும்.

அதல்லாது மரத்தில் பாதி, தங்கத்தில் கொஞ்சம், தகரத்தில் கொஞ்சம், பித்தளையில் கொஞ்சம், பிளாஸ்டிக்கில் கொஞ்சம் என ஒட்டுப் போட்ட ரூள் தடிகள் எங்கேயும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூள் எனும் ஆட்சி கோடு போட்டது போன்று நேராக, நெறியாக அமைய வேண்டும்.

Ruler என்னும் ஆள்வோரும் ஒழுக்கம் உள்ளவர்களாக இல்லை என்றால் Rule என்னும் ஆட்சியும் வழுக்கி விழுந்ததாகவே இருக்கும்.

நாட்டுப்பற்றுள்ள ஆள்வோர் நாட்டின் தேவைக்கே முன்னுரிமை கொடுப்பர்.

சேவையை தன் தேவைக்காகப் பயன்படுத்தமாட்டார்கள்.

நட்டு நீர் ஊற்றி வளர்த்தவருக்கு கனி கொடுப்பது மரத்தின் சேவை.

தளரா வளர் தெங்கு தாழுண்ட

நீரை தலையாலே தருவது சேவை.

தண்ணீர் ஊற்றினாலும் ஊற்றாவிட்டாலும், நீண்டு வளர்ந்து நீண்ட பயன்தரும் பனை, மக்கள் சேவைக்காகவே உயர்ந்து நிற்கிறது.

தெருவில் செத்துவிட்ட மிருகம், புழுத்து நாற்றம் எடுக்குமுன் அதைத் தின்று தீர்க்கும் காகம் செய்வது சேவை.

ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்தும் மீன்கள் செய்வது சேவை.

மலருக்கு மலர் தாவிச் சேர்ந்து, மருந்தாக நமக்குக் கிடைக்கிற தேன், அது தேனீயின் சேவை.

கடையில் வாங்கி காலில் அணிந்து கொள்கிறோமே செருப்பு, அது செய்யும் சேவையைக் கூட ஆள வரும் மனிதன் செய்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள வந்தவர்கட்கு சேவை செய்வதுதான் ஆள வந்தவர்கள் கடமை.

"நம்மை அள வைத்த மனிதர்கள் வெளியே இருக்கிறார்கள்"

"நாம் அமர்ந்திருக்கும் மனிதர்கள் வெளியே இருக்கிறர்கள்"

அதைப் பறித்து அடுத்தவனுக்குக் கொடுக்கும் சக்தி அவர்கட்கு உண்டு என்ற பயம் இருந்தால் சேவை மனப்பான்மை தானாக வரும்.

அதை விடுத்து கரையேற்றிய தோணியை உடைப்பவர்கள், ஏற்றி விட்ட ஏணியை உதைப்பவர்கள், ஊன்றக் கொடுத்த கம்பால் உச்சியைப் பிளப்பவர்கள்.

வந்தது வந்து விட்டோம் சேர்ப்பதைச் சேர்த்துக் கொள்வோம் என்ற தேவை எண்ணம் உள்ளவர்கள், அந்த எண்ணம் உள்ளவர்கள் தன் தேவைக்கு ஏற்ற விதத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்துவார்கள்.

இப்படிப்பட்டவர்கட்கு கழுத்துப் பருத்து விடும். உடல் கொழுத்து விடும். தலை கனத்து விடும். தலை கால் தெரியாது போய்விடும். நிலை தடம் மாறும். நிதானம் விளிம்பைத் தாண்டி விடும். சட்டம் தவிக்கும். நேர்மை கண்ணீர் விடும்.

ஆனால் நாற்காலி பறிக்கப்பட்ட பின்பு மீண்டு வர ஆசை வரும்.

ஆட்சிக்கு வருபவர்கள் நிதானமும் நெறியும் தவறக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள வைத்த எஜமான் வெளியே இருக்கிறான். ஆள வந்த ஊழியனான நாம் ஆட்டம் போடக் கூடாது என்ற எண்ணம் இதயத்தில் எழ வேண்டும்.

தேர்தல் இன்று வந்து நாளை போவது. சேவை ஒன்றே மக்கள் நெஞ்சில் வாழ்வது என்ற எண்ணம் இருந்த காரணத்தால் தான் சாதாரண பிரேமதாச ஜனாதிபதி பிரேமதாச ஆக முடிந்தது.

சேவை மனப்பான்மை இருந்த காரணத்தால்தான் சினிமா நடிகர் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆக முடிந்தது.

அண்ணல் ரசூல் (ஸல்) அவர்களின் சேவைதான் அற்புதமான இஸ்லாம் அகிலம் முழுவதும் பரவ காரணமாக அமைந்தது.

நாட்டிற்கு எது தேவை என்பதை உணர்ந்து சேவை செய்ததால்தான் காந்தி மகாத்மா ஆக முடிந்தது.

முன்னய ஆட்சியைக் குற்றம் சாட்டுவது முக்கிய கடமை என்று ஆள வருபவர்கள் எண்ணக் கூடாது.

அப்படி எண்ணுகிறவர், தன் குறைகளை மறைக்க திரை போடுகிறார் என்று பொருள்.

அப்படிப்பட்டவர்கள் ஆள வந்தவர்கள் அல்ல, அலச வந்தவர்கள்.

அலசல்கள்; ஆள் அருகதை அற்றவர்கள். இவர் உடைத்ததும் பொன் குடந்தான் என்றாலும் எதிரணி உடைத்தது மட்டும்தான் பொன் குடம் என்று அலம்பக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உடைத்தானே நான் உடைக்கக் கூடாதா என்பதெல்லாம் நேசப் பிள்ளைகளின் வாதம்!

மொத்தத்தில், யார் ஆள வந்தாலும், அதாவது Ruler ஆனாலும் கோடு போட்டது போன்று நேரான Ruler (ஆட்சி) அமைக்க வேண்டும்.

அதற்கு நேர்மையான Ruler வேண்டும்! Ruler, Roller ஆனால் மக்கள் நசுக்கப்படுவார்கள்.

ஆட்சி ஆச்சியானால் தள்ளாட்டம் வரும், தடுமாற்றம் வரும், தடுக்கி விழ நேரும். அப்போது இறைவன் சிரிப்பான். குளம் நிறைந்து கிடக்கிறதே என்று கொக்கு மகிழக் கூடாது. அதோ கோடை காலம் வருகிறது. குளம் வற்றி விட்டதே என்று கொக்கு கவலைப்படக் கூடாது. அதோ மழைக்காலம் வருகிறது. காலையில் முன்னால் விழும் நிழல் மாலையில் பின்னால் தான் விழும் - கண்ணதாசன்.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமை

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார்! நகைச்சுவையாகப் பேசுவார். யாரோடு பேசினாலும் "தலைவா" என்ற சொல்லை அடிக்கடி உபயோகிப்பார்.

"தலைவா! எப்படி இருக்கீங்க?" எனக் கூறியவாறே என்னிடம் வந்தார்.

"என்னங்க, என்னைப் போய் தலைவானு கூப்பிடுகிறீங்க? என்றேன் நான்.

"தலைவா! உங்களுக்கு விசயமே தெரியாதா? ஊருக்குள்ளே யார் தலைவன்னே தெரிய மாட்டேங்குது.

தனக்குத்தானே தலைவன்னு ஒவ்வொருத்தரும் நெனச்சிக்கிட்டிருக்கான்.

நம்ம போய் அண்ணன், தம்பினு, கூப்பிட அவன் எதுக்காவது தலைவனா இருந்து தொலைக்க நம்ம காரியம் நடக்காமே போயிடும். அதனாலே நம்ம கூப்பிடுற மாதிரி கூப்பிட்டு வைப்போம்! என்றைக்காவது தலைவனா வந்தா நமக்கு மரியாதை இருக்குமில்லே" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான்! நாம் சொல்லும் வார்த்தை சரியான நேரத்தில் சொல்லப்பட்டால் நினைவுவிடு" என்று சொன்ன நான் அவர் சொன்னதை மீண்டும் சொல்லிப் பார்த்தேன்.

யார் யாருக்கு, யார் தலைமை தாங்குவது? என்ற விவஸ்தை இல்லாமல் போய் விட்டது.

ஒவ்வொருவனும் தன்னைத் தலைவன் என்றே எண்ணுகிறான்.

தலைவனாக வேண்டும் என விரும்புகிறான்.

கட்சித் தலைவன் என்கிறான்.

கழகத் தலைவன் என்கிறான்.

குழுத் தலைவன் என்கிறான்.

கோமாளித் தலைவன் என்கிறான்.

சங்கத் தலைவன் என்கிறான்.

சமூர்த்தித் தலைவன் என்கிறான்.

ஊர்த் தலைவன் - (தெடுத்த) தலைவன் என்றெல்லாம் இருக்கட்டும்! வேண்டாம் என்று யார் சொன்னார்கள்?

இதைக் குற்றம் என்று சொல்ல வரவில்லை. இவர்கள் எல்லாம் தலைமைக்குத் தகுதி உள்ளவர்களா? தகுதி உள்ள தலைவர்களா? அப்படி இல்லாமைக்குக் காரணம் தகுதி உள்ளவர்கள் தலைவர்களாகத் தெரிவு பண்ணப்படுவதில்லை.

சில இடங்களில் தப்பானவர்களைத் தெரிவு செய்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு இடங்களில் தப்பானவர்கள் தாங்களாகவே வந்து விடுகிறார்கள்.

தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரன் ஆகி விடுகிறார்கள்.

கத்தியை கையில் வைத்திருப்பவன் எல்லாம் கத்திச் சண்டை வீரன் என்று கணக்குப் போடக் கூடாது.

கறுப்பு "பெல்ட்" அணிகிறவன் எல்லாம் கராட்டே மாஸ்டர் என்றால், தாடி வைத்தவன் எல்லாம் தாகூர் ஆகிவிடுவான்.

பணம் படைத்தவன் எல்லாம் படைத்தலைவன் ஆகலாமா?

பருந்து இருக்கிறது என்பதற்காக ஒதிய மரத்தை உத்திரமாக ஆக்கக்கூடாது.

சிறுத்து இருக்கிறது என்பதால் கடுகு காரம் அற்றது ஆகி விடாது.

வீட்டுக் குருவி காட்டு யானை ஆக நினைக்கலாமா?

பாக்கு வெட்டியை போர்க்களத்திற்கு அனுப்புவது புத்திசாலித்தனமா?

ஆட்டு மந்தைக்கு வேண்டுமானால் இடையன் தலைவனாக இருக்கட்டும்.

நாட்டு மக்களின் தலைமை எப்படி இருக்க வேண்டும்?

இந்தக் கேள்விக்கு விடை காண்பதில் பலர் தடுக்கி விழுந்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தடுக்கி விழுந்தது போல் காட்டிக் கொள்கிறார்கள்.

இன்றும் சிலர் வீழ்த்தப்பட்ட பின்பு தடுக்கி விழுந்ததாகக் காட்டப்படுகிறார்கள்.

இதனால் ஊதுபத்தி இருக்க வேண்டிய இடத்தில் பீடி அமர்ந்து விடுகிறது.

குப்பைத் தொட்டி கோபுரத்திற்குப் போய் விடுகிறது.

தங்கமும் வைரமும் தரையில் கிடக்க ஒரு ரூபா ஊறுகாய் உறியில் ஏறி விடுகிறது.

இதனால் திறமை திண்டாடுகிறது. தகுதி தள்ளாடுகிறது. விவேகம் வேதனைப்படுகிறது. ஆற்றல் தூற்றலுக்கு ஆளாகிறது. சிந்திக்கத் தவறி விடுகிறார்கள் மக்கள். அதனால் சந்தி சிரிக்க வேண்டிய சங்கதிகளாகி விடுகின்றன தலைமைகள்.

நடக்கின்ற கால்கள், எடுக்கின்ற கை, நிறைகின்ற வயது துடிக்கின்ற இதயம், ரத்தம் கொடுக்கின்ற ஈரல், சுழிக்கின்ற பிரிவு அனைத்தையும் இறைவன் மனிதனின் கழுத்துக்குக் கீழேதான் வைத்துள்ளான்.

கேட்கின்ற புலன், நுகர்கின்ற மூக்கு, சுவையறியும் நாக்கு, பேசுகின்ற வாய் மட்டும் அல்ல அனைத்து உறுப்புகளையும் இயக்குகின்ற கொம்பூட்டரான மூளையையும் இறைவன் கழுத்திற்கு மேலே படைத்திருக்கிறான்.

அதனால்தான் எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்று முன்னோர்கள் சொன்னார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, குழுவிற்கோ, கூட்டத்திற்கோ, நாட்டிற்கோ, வீட்டிற்கோ தலைமை தேவை.

அந்தத் தலைமை உடம்பிற்குத் தலை போல இருக்க வேண்டும்.

ஏனைய உறுப்புகளை இயக்கும் மூளையாக உறுப்பினர்களை இயக்கும் தலைமை வேண்டும்.

தொண்டர்களைக் கட்டவிழ்த்து விடவும் தெரிந்திருக்க வேண்டும். கட்டுக்கோப்போடு ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் தெரிய வேண்டும்.

துணிவும் இருக்க வேண்டும், தொண்டர்களின் எண்ணங்கட்குச் செவிமடுக்கும் பணிவும் இருக்க வேண்டும்.

பெரியோரை மதிக்கும் கனிவு இருக்க வேண்டும். கடமை, கண்ணியம். கட்டுப்பாடு தவறாது இருக்க வேண்டும்.

வாயில் நின்றும் வெளிவரும் ஒவ்வொரு சொல்லும் மந்திரச் சொற்களாக மாற்றி மாற்றாரையும் இழுக்க திறன் வேண்டும்.

தமிழ் நாட்டிலே ஒரு மாநாடு! தி.மு.கழக மாநாடு!

அறிஞர் அண்ணா பேசிக் கொண்டிருந்தார். அண்ணா பேசுகிறார் என்றால் கடுகு விழுந்தாலும் கணீர் என்று சத்தம் வரும்! அத்தனை அமைதி!

மாநாட்டைக் குழப்ப எண்ணிய சிலர் மாநாட்டு மக்கள் மத்தியில் எருமைகளை விரட்டி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பதற்றம் அடைந்தனர். அண்ணா அதைக் கண்டார். "எருமைக்கு மக்கள் பெருமை தெரியாது." அப்படியே அமருங்கள்" என்றார். அசையவில்லை மக்கள்! அப்படியே இருந்தனர். வந்த எருமைகள் தானாகவே போய்விட்டன. வெளியே நின்ற எருமைகட்கு வியர்த்தது. அங்கேதான் தெரிந்தது தலைமையின் சக்தி எப்படிப்பட்டது என்று.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் கடைசி வரையில் தோற்கடிக்கப்படாத எம்.பி. 1966 இறுதிப் பகுதி மருதானைப் பள்ளிவாசலுக்கு முன்னால் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை அறிமுகப்படுத்திப் பேசிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயலாளர் ஜனாப். அ.கா.அ.அப்துல் சமது அவர்கள்.

"ஒரு ஒட்டகத்தில் ஒருவனை ஏற்றி அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு பாலை - சோலை - காடு - கழனி - மேடு - பள்ளம் - கல்லுமுள்ளு - ஆறு - சேறு என்று பாராது மழை - வெயில் எனக் கவனிக்காது நடந்து தனக்கும் தன் கூட்டத்திற்கும் அதன் மேல் இருப்பவனுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பவன்தார் காயிதே மில்லத். அந்த கௌரவத்தை ஏந்தி நிற்பவர் தலைவர்" எனப் பேசினார்.

ஓர் இயக்கத்தின் தலைமை இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதாக அந்தப் பேச்சு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தன்மைக்காரரான பண்டிதர் நேரு, நாட்டுக்காகவே தம் சொத்துக்களைத் தியாகம் செய்தவர்.

அரை நிர்வாணப் பக்கிரி என 'வின்சன்ட் சேர்சிலால்' இகழ்ந்துரைக்கப்பட்ட மகாத்மா காந்தி நாட்டிற்காகவே மாண்டவர்.

அரபு நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சி செய்த காலத்தில் கூட, தம் உடை, உணவுகளில் மாற்றம் கொண்டு வராதவர். (யார்?)

தாம் வரும்போது தம் தோழர்கள் எழுந்து நின்று மரியாதை பண்ணுவதை விரும்பியதில்லை.

ஒரு சபையில் முன்னால் அமர விரும்பியதில்லை. மக்களோடு மக்களாக இருக்க விரும்பியவர்.

தான் அடகு வைத்த மேலங்கியை மீட்க முடியாமலே இறையடி சேர்ந்தவர்.

அன்னாருக்கு முன்பும் அதன் பின்பும் இருந்த தலைவன் என்று எவனும் வரவில்லை.

ஏழைகளைப் பற்றி மேடையேறி பேசுகிறானே இதில் எவனாவது ஏழையாக இருக்கிறானா? மக்களோடு மக்களாக வாழ விரும்புகிறானா?

தலைமை தகைமை உள்ளவர்க்கு வர வேண்டும்.

கறுப்புக் கண்ணாடியும் வெள்ளைத் தொப்பியும் பொருத்தமாக இருக்கிறது என்பதற்காக எல்லோரும் எம்.ஜி.ஆர். ஆக முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரால் தலைமைக்கு ஒரு மரியாதை வரவேண்டும்.

தலைமையை வைத்து தலைவர் மரியாதையை தேடக்கூடாது.

மரியாதை என்பது கொடுத்து எடுப்பது. விளக்கிற்கு எண்ணெயைக் கொடுத்தால்தான் வெளிச்சம் கிடைக்கும்.

கண்ணிற்கு இமை போல,
பொன்னிற்கு புடம் போல,
மண்ணிற்கு வளம் போல,
தலைமை திறமை இருக்க வேண்டும்.

தலைக்கு ஏற்ற தொப்பி
காலுக்கு தகுந்த செருப்பு
வாளுக்கு ஏற்ற உறை
வேலுக்கு ஏற்ற கம்பு
சாடிக்கு ஏற்ற மூடி
உடலுக்கு ஏற்ற உடை போல
ஆளுக்கு ஏற்ற பதவி இருக்க வேண்டும்.

தலைமை என்பது பகைமை ஏறிவரும் படிக்கட்டாக அமையக் கூடாது. நேர்மையின் திறவு கோலாக இருக்க வேண்டும்.

தலைமை என்பது பார்த்துத் தருவது. பறித்து எடுப்பது அல்ல பண்பாளர்கள் சூட்டும் மகுடம் பணம் போட்டு வாங்கும் பலசரக்கல்ல. அன்பு உள்ளங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரத்தி. அச்சடித்த காகிதம் அல்ல என்பதை உணர்ந்தவனை தலைமை தலை நிமிர்ந்து வரவேற்கும்.

எங்கே உள்ளம் அங்கே வாழும் அன்பு அவனை வாழ்த்தும்.

நேசக்கரங்கள் நெருங்கி வந்து அணைத்துக் கொள்ளும்.

தலைமை தலை கால் தெரியாது. குதித்தால் தலைக்கனம் வந்தால், சிறுமை சிந்து பாடும்; பகைமை பக்க வாத்தியம் வாசிக்கும். மோசம் முன்னுரை எழுதும். நேசித்தவர்கள் தூசிப்பார்கள். முடிவு மூளியாகி விடும்!

துள்ளி வரும் தொல்லைகளை கிள்ளி எறிவேன். எனவே சொல்லி விட்டு செய்து நிற்கும் தலைமை அது இல்லை என்றால் வந்து நிற்கும் பகைமை.

பாடுபடும் ஏழையவன் கேடு கெட்டுப் போய்விடாமல் நாடு போற்ற வைப்பதுதான் தலைமை. அது வேறுபட்டுப் போனால் வரும் பகைமை.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம்

காட்டிலே திரிந்த மனிதன்கூட சமாதானமாகத் தான் வளர்ந்தான்.

வேட்டையாடிய இறைச்சியைப் பகிர்ந்து உண்டான்.

தேடிச் சேர்த்த தேனை மண்சாடியில் வைத்துக் காத்து அக்கம் பக்கத்தாருக்குக் கொடுத்தான்.

மிருகங்களால் தன் சக மனிதனுக்கு ஆபத்து வந்தபோது ஓடிச் சென்று காப்பாற்றினான்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற பொன் மொழி பிறப்பதற்கு முன்பே கூடித்தான் வாழ்ந்தான்.

ஒருவனின் குழந்தை இறைச்சி தா எனக் கேட்டது.

கட்டி வைத்திருந்த காய்ந்த இறைச்சியைக் கொடுத்தான்.

“இது வேண்டாம் வேறு வேண்டும்” என அடம் பிடித்தது குழந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனில் ஊற வைத்த இறைச்சியைத்தான் குழந்தை கேட்கிறது என்பதை உணர்ந்தான்.

இவன் கையிருப்பில் அந்த இறைச்சி இருக்கவில்லை.

அடுத்த வீட்டுக்காரனிடம் இருக்குமே என எண்ணிக் கேட்டான்.

அவனிடம் இருக்கிறது! ஆனால் இல்லை என்று சொல்லி விட்டான்.

எப்படியோ இவன் வேறு பொருள் கொடுத்து குழந்தையைச் சமாளித்தான்.

சற்று நேரத்தில் அடுத்த வீட்டு பிள்ளையும் இதே பிரச்சினையை எழுப்பியது.

அந்தக் குழந்தைக்கு இறைச்சி கிடைத்தது! அதை இவன் பார்த்தான்.

எனக்கு இல்லை என்று சொல்லி விட்டானே என மனம் துடித்தது.

அந்தத் துடிப்பு வெறுப்பைத் தந்தது. சமாதானம் நிமிர்ந்து பார்த்தது. அவனை ஒரு கரடி விரட்டியது!

இவன் பார்த்தான், உதவிக்குப் போகவில்லை. வெறுப்பு விரிவு அடைந்தது!

சமாதானத்தின் முகம் சுருங்கியது. ஒன்றோடு ஒன்றாக, ஒன்றுக்குள் ஒன்றாக, ஒன்றை ஒட்டி ஒன்றாக வாழ மனிதன் மறந்தான்!

சமாதானம் கண்ணீர் விட்டது. ஒவ்வொன்றாக வந்த பிரச்சினை ஒன்றோடு ஒன்றாக வந்து ஒன்றின் பின் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியது. அப்போது சமாதானம் அழுதது. விரிவு, விபரீதம் ஆனது. சமாதானம் ஓடிவிட்டது.

காணாமல் போன சமாதானத்தை ஒவ்வொரு மனிதனும் தேடிக் கொண்டிருக்கிறான்.

அதைத் தேடித்தான் உலகத் தலைவர்கள் புறாவை அனுப்புகிறார்கள் போலும்.

அனுப்புவதுதான் அனுப்புகிறார்கள் ஜோடிப் புறாவாக அனுப்பக் கூடாதா?

ஒற்றைப் புறா தனித்து வாழாது என்பது இந்தத் தலைவர்கட்குத் தெரியாதா?

தெரிந்தும் தெரியாதது போல் காட்டிக் கொள்கிறார்களா?

ஏற்கனவே அனுப்பிய ஆண் புறாவைக் காணவில்லை!

அதைத் தேடி வர இந்தப் பெண் புறாவை அனுப்புகிறார்களா?

இவர்கள் விற்ற, குண்டடிபட்டுத்தான். அந்தப் புறா செத்தது என்பது இவர்கட்குத் தெரியாதா?

தெரியும்! தெரிந்தும் பம்மாத்துக் காட்டுகிறார்கள்!

ஒன்று மட்டும் உண்மை! ஒற்றைப் புறா அனுப்புவதன் உள்நோக்கம் புரிகிறது.

இரண்டு கை தட்டினால்தானே சத்தம் வரும்!

ஒரு கை தட்டினால் வருமா? வராதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் என்று சொன்னால் போதுமா? எதிரியும் சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்லக்கூடாது. கை குலுக்கக் கூடாது. பிரிந்து இருக்க வேண்டும் என்று எண்ணித்தான் ஒற்றைப் புறாவைப் பறக்க விடுகிறார்கள்.

காரணம், உலகத்தில் சமாதானம் வந்துவிட்டால் ஆயுத விற்பனைக்கு ஆளிருக்காது.

சமாதானம் என்பது க்ருகி விட்ட மலர். கருவில் அழிந்த சிசு. கண் மூடிகளின் கனவு. காணாமல் போன ஒட்டகம்!

அதனால் இதை யாரும் பார்க்க முடியாது. அப்படிப் பார்ப்பதானால் அரசியல்வாதிகளின் வாயிலும் அன்றாடச் செய்தித்தாள்களிலும் பார்க்க முடியும்!

அதனால்தான் வல்லரசுகளால் பிழைப்பு நடத்தவும் முடிகிறது. வாங்குவோனால் பணம் சேர்க்கவும் முடிகிறது.

சமாதானம் என்ற சொல், வல்லரசுகட்கு ஆயுத விற்பனை, வளைகுடாவில் போரின் ஒத்திகை, உலகத் தலைவர்களின் மந்திரத் தடி அரசியல்வாதிகளின் வாக்குப் பெட்டகம், ஐக்கிய நாட்டிற்குக் கேள்விக்குறி! மதவாதிகட்கு மதுவின் போதை! இனவாதிகட்கு எரியும் பந்தம்!

இந்த சமாதானம் என்ற சொல்லை வைத்துக் கொண்டு சித்து விளையாட்டுக் காட்டுகிறார்கள் அரசியல்வாதிகள்.

இதைப் பார்த்து வேடிக்கை விரும்பிகள் கை தட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கைக்கு எட்டிய தூரத்தில் சமாதானம் இருக்கிறது, அதைப் பிடிப்பதற்கு எதிர்க்கட்சி விடுவதில்லை” என்கிறது ஆளும் கூட்டம்.

“இருந்ததை இல்லாமல் பண்ணிவிட்டு எங்கள் மீது குற்றச்சாட்டா?” என்கிறது எதிரணி!

“காணாமல் போன சமாதானத்தைக் கண்டு பிடிக்கத்தானே போர் நடக்கிறது” என்கிறது தலைமை!

“சண்டை என்று வந்தால் ஜனங்கள் சாவார்கள், சமாதானம் வராது” என்கிறது இடையில் ஓர் அணி!

“கல்லில் நார் உரிக்கலாம், பாறையில் பயிர் விளையலாம், முட்டையில் ரோமம் பிடுங்கலாம், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுக் கூட போடலாம், சமாதானத்தைக் கண்டுபிடிக்க உங்களால் முடியாது” என்கிறது இடை அணி ஒன்று!

“உன் அணிக்குள்ளேயே இழுபறி. ஊர்சமாதானத்தைப் பற்றிப் பேச உனக்கு என்ன யோக்கிதை இருக்கிறது?” எனக் கேட்கிறது ஓர் எடுபிடி அணி!

இப்படி அணிக்கு அணி சண்டை, அணிக்குள்ளும் சண்டை! அடுத்ததுக்கும் எதிர்த்ததுக்கும் சண்டை என ஆளுக்கு ஆள் சண்டை போட்டு சமாதானத்தை அடித்து விரட்டி விட்டார்கள்.

சாந்தத்தையும் சகோதரத்துவத்தையும் இணைத்து வைத்த பெருமை அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சாரும்.

அதனால்தான் சமாதானக் குழந்தை பிறந்தது! உலகம் முழுவதும் அக்குழந்தை ஓடி விளையாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனும் மனிதனும் கை குலுக்கினர்! நாட்டுக்கு நாடு சலாம் சொன்னது! வீட்டிற்கு வீடு விருந்தோம்பல் நடந்தது! தெருவும் தெருவும் சேமம் விசாரித்தன. ஊரும் ஊரும் ஒற்றுமை கீதம் இசைத்தன.

தர்மம் தலை நிமிர்ந்து நின்றது. சுயநலம் சூதாட வந்தபோது, சமாதானம் துகிலுரியப்பட்டது. பாஞ்சாலி துகில் உரியப்பட்டபோது பரந்தாமன் கை கொடுத்தான்.

சமாதானம் துகில் உரியப்பட்ட போது விருந்தோம்பல் நடந்ததே தவிர எந்த வெறுந்தாமனும் வேதனை போக்க வரவில்லை.

துகிலுரியப்பட்டதால் தெருவிற்கு வர முடியவில்லை!

அன்று காணாமல் போன சமாதானம் இன்றுவரை காணவில்லை.

அமெரிக்கா அடைத்து வைத்துள்ளதா? பிரிட்டனின் பாதுகாப்பில் இருக்கிறதா? பொஸ்னியாவில் சிக்கியதா? ருவண்டாவில் புதையுண்டதா? ஈராக்கில் இடுப்பொடிந்ததா? ஆப்கானிஸ்தானில் அலைகிறதா? செக்கோஸ்லாவாக்கியாவில் சிதையுண்டதா? கிழக்கில் பிழைப்புத் தேடுகிறதா? தெரியவில்லை! தெரிந்தும் சொல்லவில்லை! ஆனாலும், தேடுகிறோம் என்கிறார்கள் சிலர்! தேடுவது போல் நடிக்கிறார்கள் சிலர்! நம்பிக்கை உண்டு என்கிறார்கள். தேடத் திறமை உள்ளோர் செத்து விட்டார்கள். யுத்தம் நடத்தினால் சமாதானம் தத்தித்தத்தி வரும் என்கிறார்கள்.

யார் சொல்லுவதை நம்புவது? உத்தரவாதம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே சமாதானம் வர வேண்டுமானால், வல்லரசுகளின் வீட்டோ அதிகாரம் பறிக்கப்பட வேண்டும்.

போர் விமானங்கள் தயாரிப்பது நிறுத்தப்பட வேண்டும்.

ஆயுத உற்பத்தி நிறுத்தப்பட வேண்டும்! அடுத்த நாட்டுடன் தலையிடுவதை வல்லரசுகள் நிறுத்த வேண்டும். மனிதன், மனிதனை மனிதனாக மதிக்கப் பழக வேண்டும்.

அதற்கு அண்ணல் நபிகள் (ஸல்) அவர்கள் மறுபடி பிறந்து வர வேண்டும்.

இது நடக்காத ஒன்று! சமாதானம் கிடைக்காத ஒன்று!

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு

சந்திப்பு வருவது கண்டு - பலர்
சந்திக்கும் இடறுகளும் உண்டு - பலர்
சொந்தங்கள் ஆவதும் உண்டு - சில
தொடர்கதை ஆவதும் உண்டு.

- கண்ணதாசன்

நான் தொடர் வண்டியில் போகிறேன். என் அருகில் ஒருவர் அமர்ந்துள்ளார். அவர் பேசுகிறார். நான் கேட்கிறேன். அவர் சொல்லுகிறார். அவர் எங்கோ போகிறார். நானும் எங்கோ போகிறேன். அவர் வேறு இனம்; நான் வேறு இனம். வண்டி நிற்கிறது. அங்கே தேநீர் விற்கிறார்கள். அவர் வாங்குகிறார். நானும் வாங்குகிறேன். எனக்கும் சேர்த்து பணம் கொடுக்கிறார். அவருக்கு சிகரட் கொடுக்கிறேன். வாங்கிப் புகைக்கிறார். பேச்சு தொடர்கிறது. நாங்கள் சொந்தமில்லை. முன்பின் பார்த்ததில்லை. இன்றுதான் சந்திக்கிறோம்.

அந்தக் கொஞ்ச நேரத்தில் ஒரு நெருக்கம்! மனதிற்குள் ஒரு இது! என்ன என்று புரியவில்லை! அவர் முகவரியை எடுகிறார். என் முகவரியைக் கொடுக்கிறேன். வண்டி நிற்கிறது! அவர் இறங்குகிறார். கடிதம் போடுங்கள் என்கிறார்! சரி என்கிறேன்! சந்திப்போம் என்கிறார்! என் பயணம் தொடர்கிறது! மனதிற்குள் ஒரு இது, அதுதான் நேசம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிறிய பையன்! அவனுக்குக் காய்ச்சல்! டாக்டர் மருந்து கொடுக்கிறார். அவள் அழுகிறாள்! புலம்புகிறாள்! கதறுகிறாள்! கண்ணீர் வடிக்கிறாள்! கடவுளே! காப்பாற்று என்கிறாள்!

பையன் உடல் நடுங்குகிறது! இவள் உடலும் நடுங்குகிறது! அவனுக்குக் காய்ச்சல். இவள் ஏன் நடுங்க வேண்டும்? அதுதான் தாய்மையின் பெருமை. அதற்குப் பெயர் பாசம்.

பிச்சைக்காரனைப் பார்க்கிறோம்; உதவ வேண்டும். உள்ளம் சொல்கிறது. சில்லறையைக் கொடுக்கிறோம். அது ஏன்? அதுதான் இரக்கம்!

அவனுக்கு வயது இருபது! அவளுக்கு வயது பதினெட்டு! அறிமுகம் இல்லை! ஆனாலும் பார்க்கிறாள்! அண்ணலும் நோக்கினான்! அவளும் நோக்கினாள்! அவள் சொன்னாள். இவன் சரி என்கிறான்! கனிவு, கிளுகிளுப்பு, அரவணைப்பு. பெற்றோரை மறந்த நிலை! அதற்குப் பெயர் காதல்.

பாதையில் செல்கிறோம். பலர் கண்ணில் படுகிறார்கள். அவனும் படுகிறான்! அவன் நொண்டி, பார்வை இல்லை, பேச்சில் தடுமாற்றம். தள்ளுவண்டியில் இருக்கிறான். ஒரு பையன் தள்ளுகிறான். அம்மா பிச்சை என்ற அழுகுரல் கண்ணீரை வரவைக்கும் தோற்றம் மனம்சங்கடப்படுகிறது. அதற்குப் பெயர் கருணை.

கொளுத்தும் வெயில், பாரம் ஏறிய வண்டி. அதை இழுக்க முடியாத மாடு. வண்டிக்காரன் அடிக்கிறான். மாடு தள்ளாடுகிறது. தள்ளாடும் மாட்டை தண்டிக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசுக்குள் என்னவோ பண்ணுகிறது! வண்டிக்காரனை அடிக்கத் தோன்றுகிறது. அதற்குப் பெயர் தாபம்! பச்சாத்தாபம்!

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் எல்லாமே அன்புதான்.

இடத்திற்கு ஏற்ற விதத்தில் பெயர் வேறுபடுகிறது.

இந்த அன்பு, பண்பு, நேசம், பாசம், காதல், கருணை, இரக்கம், தாபம், ஒட்டு, உறவு, பிடிப்பு, பிணைப்பு, தொடர்பு, தோழமை என்பதெல்லாம் மனித இனத்திற்கு இறைவன் போட்ட விலங்கு!

இந்த மனிதன் ஏனைய உயிரினங்களைவிட வேறுபட்டவன்!

படைப்பில் உயர்வானவன் என்று இறைவனால் உறுதிபடுத்தப்பட்டவன். சிந்திக்கத் தெரிந்தவன். நிந்திக்கத் தெரிந்தவன். உறவுக்குக் கை கொடுப்பான். உரிமைக்குக் குரல் கொடுப்பான். நேசக்கரம் நீட்டுவான். மோசத்தனத்திற்கு முன்னுரையும் எழுதுவான்.

ஒட்டியும் உறவாடுவான், வெட்டியும் வேறுபடுவான். இணையவும் வைப்பான், பிரியவும் வைப்பான். இவன் ஐந்தறிவு மிருகமல்ல. ஆறு அறிவு மனிதன். அந்த ஆறாம் அறிவை தேறா அறிவாக மாற்றிக் கொண்டவன்.

சோறு போட்டவனைத் தூக்கி எறியும் தன்மை உள்ளவன். வேறுபட்டு வேதனை தருவதில் வல்லவன்!

நாறுகின்ற சமூகங்களின் ஆணிவேர். நலிந்தோர் உருவாக இவன்தான் காரணம்! நாணயம் உயர்வதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன்தான் பொறுப்பு. வாழ்த்திற்கும் ஆளாவான்! வசைக்கும் இடம் தருவான். ஆனால் உறவுக்காக உயிரையும் கொடுப்பான்.

பறவைகள் உறவாடுகின்றன. ஆனால் குஞ்சுப் பருவத்தைத் தாண்டியதும் உறவு பிரிகிறது. கழுகிடம் இருந்து குஞ்சைப் பாதுகாக்க கோழிக்கும் தெரியும்! அந்தக் குஞ்சு கோழியான பின்பு உதவிக்குப் போகாது.

பால் குடிக்கும் பருவம் தாண்டும் வரைதான் கன்றைப் பாதுகாக்கிறது பசு!

பறவைகளில், புறா மட்டும் தன் ஜோடியைப் பிரியாத உறவு வைத்துள்ளது. புறா தனித்து வாழ்வதில்லை. தன் ஜோடியை விட்டு வேறு ஜோடியைத் தேடுவதில்லை! சேருவதும் இல்லை. தன் ஜோடிப் புறா இறந்தால் மற்ற புறா உயிர் வாழாது. இந்த இடத்தில் மனிதன் வேறுபடுகிறான்.

ஜோடியில் ஒன்று இறந்தால் மறுமணம் பண்ணும் உரிமை மனிதனுக்கு உண்டு. பிரிந்து போய் வேறு ஜோடியை சேர்த்துக் கொள்ளவும் மனிதனுக்குத் தெரியும்!

குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. அடைகாக்கவும் வராது. காகம் கூண்டில் முட்டையிடுகிறது. காகம் அடைகாக்கிறது! குஞ்சு பொரிக்கிறது! காகம் உணவு கொடுக்கிறது. குஞ்சு குயில் என்று தெரிந்த பின்பு காகம் கொத்தி விரட்டுகிறது.

தன் பிள்ளை அல்ல என்று தெரிந்தால் மனைவியையும் சேர்த்து விரட்டுவான் மனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவைக் கண்ட காகம் தன் இனத்தை அழைத்து உண்ணுகிறது. ஒரு காகம் இறந்து விட்டால் ஒரு கூட்டமே வந்து கரையும்!

பக்கத்தில் உள்ளவனுக்குக் கொடுக்காமல் சாப்பிடும் குணம் மனிதனுக்கு உள்ளது.

பசி வந்த பின்புதான் சிங்கம் இரைதேடப் புறப்படும்! எப்போதோ வரப் போகும் பசிக்கு இப்போதே உணவு தேடுவான் மனிதன்.

எங்கோ பிறந்த இருவர் மணமுடித்து ஒன்றிணைந்து வாழ்கிறார்கள் என்றால் அதுதான் இறைவன் போட்ட உறவு முடிச்சு.

ஒரு காகம் இறந்தால் ஒரு கூட்டம் வந்து கரைவது போல மனிதன் அழுவதில்லை. குடும்பத்தார் இறந்தால் அழுவான். தெருவிலே ஒருவன் போகிறான். வாகனம் அவன் மீது மோதுகிறது. அவன் இறந்து விடுகிறான். கூட்டம் கூடுகிறது. ஐயோ! என்பார்கள், சிலர் பாவம் என்பார்கள், சாரதியை சிலர் தாக்குவார்கள். சிலர் தூற்றுவார்கள். பொலிஸ் வரும், கூட்டம் கலையும். எவனும் இறந்த மனிதனைப் பொறுப்பேற்கமாட்டான். விபத்தைப் பார்த்தவன் கூட சாட்சி சொல்ல மாட்டான். இறந்தவனின் உறவுக்காரன் அங்கு இருந்தால் ஊரையே கூட்டி விடுவான்!

ஒன்றுக்கு நான்கு சாட்சிகளை உருவாக்குவான்.

இத்தனை சாட்சிகளா என்று பொலிஸ்காரனைத் திணற வைத்து விடுவான்! அழுவான், கதறுவான், துடிப்பான்.

இந்த இடத்தில் இறைவன் போட்ட உறவு முடிச்சு உயிர் பெறுகிறது! சக்தி பெறுகிறது! சந்திக்கு வருகிறது! சாட்சி சொல்லுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு நோய் என்றால் தாய் தவித்துப் போகிறாள். கணவனுக்குத் தலைவலி என்றால் ம்னைவி துடித்துப் போகிறாள்! தைலத்தைத் தடவி விடுவாள். காப்பி போட்டுக் கொடுப்பாள். தனக்கு வந்ததாக நினைப்பாள். அருகில் இருந்து கவனிப்பாள். டாக்டரிடம் போகலாமா என்பாள். கண்ணீர் கொட்டும்! கடவுளே! இவர் தலைவலியை குணமாக்கு என்பாள். இதுதான் இறைவன் மனிதனுக்குக் கொடுத்த உறவின் உச்சம்.

இது மிருகங்களிடம் இல்லை. காளை மாட்டிற்கு காயம் என்றால்; பசு கண்ணீர் விடாது. மாட்டு மந்தையில் ஒன்று கொல்லப்பட்டால் ஏனைய மாடுகள் எதிர்த்து நிற்காது. இறந்த மாட்டிற்காக மந்தை ஊர்வலம் நடக்காது காரணம் உறவு இல்லை!

மிருகம் கூட்டமாக வாழுகிறது. மனிதன் குடும்பமாக வாழ்கிறான்!

குடும்பத்தில் இருக்கும் உறவு கூட்டத்தில் இல்லை!

பிள்ளைக்கும் தந்தைக்கும் இடையில் பிணக்கு இருக்கலாம்.

கணக்கைத் தீர்த்துக் கொள்ளும் அளவுக்கு காரியம் நடக்காது! காரணம் உறவு!

பாசத்தைப் பிரித்துக் கொண்டு பிள்ளை போகலாம். ஆனால் பாசத்தைக் கூறுபோட பாதை இருக்காது.

சொத்துப் பிரியலாம், சொந்தம் பிரியாது. மருமகன் குற்றம் செய்து விட்டான் என்றால் அவனைக் காப்பாற்ற புறப்பட்டு விடுவார் மாமா. அடுத்த வீட்டுக்காரன் குற்றம் செய்தால் அந்த மாமன் காட்டிக் கொடுத்துவிடுவார். காரணம் அடுத்த வீட்டுக்காரன் தன் குடும்பத்தவன் அல்லன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளையை தொழிலாகக் கொண்டவன் தன் குடும்பத்திடம் கொள்ளை அடிப்பதில்லை. காரணம்? உறவு.

தாயைத் தாரம் ஆக்குவோனைப் பார்க்க முடியாது. அந்த எண்ணம் மிருகத்திடம் உண்டு. மனைவியைப் பார்க்கும் போது மனிதனின் மனதில் உண்டாகும் எண்ணம் மகளைப் பார்க்கும் போது வராது! காரணம் உறவு!

மனதிற்குள் ஏற்படுகின்ற உணர்வு உந்துதல், உறவு ஊறி இருப்பதை உறுதிப்படுத்துகிறது. தன் குடும்பத்திடம் மனிதன் காட்டும் பற்று, பாசம், பரிவு, கனிவு, ஆதரிப்பு, அனுசரிப்புகளைப் பிறரிடம் காட்டுவதில்லை.

சந்தைக்கு வந்த மந்தைக் கூட்டத்தில் சொந்தம் பந்தம் இருக்காது. காரணம் உறவு இல்லை.

மனிதனிடம் உள்ள குடும்ப உறவை, பற்று பாசத்தை அடுத்த வீட்டுக்காரனிடம் காட்டுவதில்லை.

அடுத்த வீட்டுக்காரன் முஸ்லிம் அல்லாதவனாக இருந்தால் கூட அவன் பசித்திருக்க நீ சாப்பிடாதே என்பது தானே இஸ்லாம்!

அடுத்த வீட்டுக்காரனுக்கு உண்ணக் கொடுப்பது, உதவி - தர்மம் - இரக்கம் - மனிதாபிமானம் - மாற்றாரை புறக்கணிக்கக்கூடாது என்ற மனப்பான்மை என்றுதான் சொல்ல முடியும். அது உறவுக்குள் வராது!

உறவு உயர்ந்தது! சிறந்தது! புனிதமானது! மனிதனுக்கே உரியது.

மனித வாழ்க்கையில் உறவு என்பது மனதினால் வந்தது!

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரம்

சாப்பிட்டுக் கொண்டிருந்த என் கண்களில் செய்தித்தாள் ஒன்றின் சிறு பகுதி பட்டது.

எடுத்துப் பார்த்தேன். கவிதை இருந்தது. அதுவும் ஒரு பகுதி! படித்தேன்.

"உனக்கிருக்குதா? எனக்கிருக்குதா?

ஊருக்கிருக்குது எங்கே சுதந்திரம்

யாருக்கிருக்குது எங்கே இருக்குது

தேடுங்கடா தம்பி தேடுங்கடா!"

நாட்டுத் தலைவர்கள் தந்த சுதந்திரம்

நானும் தான் தேடுகிறேன் காணவில்லை.

ஏட்டுச் சுரக்காயாய் போனதுவோ

இன்று

எங்க சுதந்திரம் நாட்டினிலே!"

அந்தக் கவிதை என்னைச் சிந்திக்க வைத்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணாளனும் சுதந்திரம் இல்லை என்கிறான்!

மனைவியும் சுதந்திரம் இல்லை என்கிறாள்! வீட்டுச் சுதந்திரம் விடுதியில் இல்லை என்கிறான் மாணவன்!

"என்னப்பா, மீனுக்கு யானை விலை சொல்லிறாய்?" என்றால்,

"என்ன சார் பண்ண, சுதந்திரமா மீன் வாங்க முடியுதா? வசதி உள்ளவன் வாரிக்கிட்டுப் போயிடுறான். என் மாதிரி சின்ன யாவரிக திண்டாடுகிறோம்." என்றான் மீன் விற்பவன்.

சுதந்திரமாகப் பிச்சை எடுக்க முடியவில்லை என்கிறான் பிச்சைக்காரன்.

சுதந்திரமாக பஸ்ஸில் போக முடியவில்லை. என்கிறான் பிரயாணி.

சுற்றி வளைப்புத் தொல்லையால் சுதந்திரமாகத் தூங்க முடியவில்லை என்கிறான் வட கிழக்கு மனிதன்.

எண்ணச் சுதந்திரம் இல்லை.

எழுத்துச் சுதந்திரம் இல்லை.

உண்ணச் சுதந்திரம் இல்லை.

உறங்கச் சுதந்திரம் இல்லை.

சொல்லச் சுதந்திரம் இல்லை.

சுவைக்கச் சுதந்திரம் இல்லை.

பார்க்கச் சுதந்திரம் இல்லை.

படிக்கச் சுதந்திரம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்று தான் யாரைக் கேட்டாலும் சொல்லுகிறார்கள். அப்படி என்றால் உண்மையிலேயே சுதந்திரம் இல்லையா?

இருக்கிறது! ஆனால் அந்த சுதந்திரத்தை அனுபவிக்க பலரால் முடியவில்லை. முடியவில்லை என்று சொல்வதை விட, அனுபவிக்கச் சிலர் விடுவதில்லை. சில நாடுகள் சுதந்திரத்தைத் தப்பாக எண்ணிக் கொண்டிருக்கின்றன.

அதனால்தான் அணுகுண்டு வெடிப்பதை சுதந்திரமாக எண்ணுகிறது இந்தியா.

எனக்கும் அந்தச் சுதந்திரம் உண்டு என்கிறது. பாகிஸ்தான்.

இந்த அணுகுண்டு உற்பத்தியால் எங்கோ ஒரு நாட்டின் சுதந்திரம் பறிக்கப்படப் போகிறது! மக்கள் சுதந்திரத்திற்கு மாசு ஏற்படப் போகிறது. எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. நாகசாக்கியின் அழிவுக்குப் பிறகும் அணுகுண்டு அவசியமா?

ஆள வந்தவர்களின் அசட்டையான போக்கும், அலட்சிய மனப்பான்மையும் பலரின் சுதந்திரம் பாதிக்கக் காரணமாகி விடுகின்றன.

கல்யாண வீடு எது? கருமாரி வீடு எது? என்று அடையாளம் காட்ட தேசியக் கொடியைத் தொங்க விடுகிறான்.

பிளாஸ்டிக் காகிதத்தில் தேசியக் கொடியை செய்து, கண்ட கண்ட இடத்தில் தொங்க விடுகிறார்கள்.

இரண்டு நாள் கழித்துப் பார்த்தால் தேசியக் கொடி குப்பைத் தொட்டியில் கிடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக்கொடி குப்பைத் தொட்டிக்குப் போகிறது என்றால், சுதந்திரமும் சேர்ந்து போய் விட்டது என்றுதானே பொருள்?

காரணம் என்ன? சுதந்திரத்தை வாங்கித் தந்த முன்னோர்கள் அதைப் பேணக் கற்றுக் கொடுக்கவில்லை.

அப்படி கற்றுக் கொடுக்காத காரணத்தால், கற்றுக் குட்டிகள் எல்லாம் ஆள்வந்து விடுகின்றனர்.

சுதந்திரத்தை தந்தபின் நாட்டிற்குத்தான் தந்தான். இனவாரியாகப் பிரித்து, இரண்டு, மூன்று சுதந்திரம் தரவில்லை.

சுதந்திர நாட்டில் சுதந்திரம் அற்ற பிரஜைகள் இருக்கிறார்கள் என்றால், அதிகாரத்தின் அடக்குமுறைதான் காரணம்!

இந்தக் காரணத்தின் காரணம் சுதந்திரம் பேணப்படவில்லை.

இந்த இடத்தில் வெள்ளைக்காரனிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டை நம் முன்னோர்கள் மீட்டுத் தந்தார்கள்.

அந்தச் சுதந்திர நாளை இன்று கொண்டாடுகிறோம்.

“பாலை வனம் சோலைவனமாக வேண்டும், அங்கே பசுங்கிளிகளும் பாடிட வேண்டும் என்ற பாடல் வெறும் கற்பனைப் பாடல் அல்ல!

ஊன்றி கவனித்தால் நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் ஏராளம் உண்டு என்பதை இந்தப் பாடல் உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பெற்ற சுதந்திரம் பேணப்பட வேண்டும்.

நானோ என் அமைச்சரவைத் தோழர்களோ நின்று சுதந்திரத்தைப் பேண முடியாது.

பல தொழில் பண்ணிப் பாடுபடுகிறானே பாட்டாளி அவனும் ஆலைச் சங்கு ஊதியதும் காலை கடுங்குளிர் என்றும் பாராமல் சாலையைத் தாண்டி ஓடுகிறானே, ஆலைத் தொழிலாளி அவனும், உச்சி வெயில் என்றும் பாராமல் கச்சை கட்டி கழனியில் நிற்கிறானே உழவன் அவனும்,

அலை பாயும் கடலில் வலை வீசி மீன் பிடித்து கரை வாழ் நமக்கு எல்லாம் தருகிறானே மீனவன் அவனும்,

நலிந்து போனவர்கட்கு மருந்திட்டு எழுந்து நடக்க உதவுகிறார்களே வைத்தியர்கள் அவர்களும், இதயக் கதவைத் தட்டி அறிவுக் கண்களைத் திறந்து விடுகிறார்களே ஆசிரியர்கள் அவர்களும்,

அலுவலகங்களில் கோப்புகள் குவிந்து விடாது நகர்த்தி, ஆர்வத்தோடு அலுவலாற்றுகிறார்களே அலுவலர்கள், அவர்களும்,

ஆற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி ஊரமைத்துச் சீரமைத்துத் தருகிறார்களே புவியியலாளர்கள், பொறியியலாளர்கள் அவர்களும்,

ஒன்றுபட்டு உறுதியோடு, உற்சாகத்தோடு உழைக்க வேண்டும்!

இருக்கும் விருப்பு - வெறுப்புகளை மறந்து - கொண்ட கோபதாபங்களைத் துறந்து கொள்வனவு கொடுப்பனவுகள் நடைபெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் பாலைவனம் சோலை வனமாக முடியும். அங்கே பசுங்கிளிகள் பாடிடவும் முடியும்'' என்ற அறிஞர் அண்ணாவின் பேச்சு என் நினைவுக்கு வந்தது.

இந்த இடத்தில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு!

அதுதான் இருக்கும் விருப்பு - வெறுப்புகளை விடுத்து; கொண்ட கோப - தாபங்களைத் துறந்து கொள்வனவு, கொடுப்பனவுகள் நடைபெற வேண்டும்.

அப்படி நடைபெற்றால்தான் சுதந்திரம் சுதந்திரமாகவும் இருக்கும்! எல்லோரும் அனுபவிக்கும் முறையிலும் அமையும்.

விருப்பு வேரறுந்து வெறுப்பு வேரூன்றும் போது, சுதந்திரம் சுக்கல் சுக்கலாகத் தெறிக்கிறது.

ஆள்வோரின் அலட்சியம் அதிகமாகும்போது கொள்வனவு இருக்காது. கொடுப்பனவு நடைபெறாது!

இந்த இரண்டும் இருட்டடிப்புக்கு ஆளாகும்போது ஆளப்படுவோரின் சுதந்திரம் அடி பெயர்ந்து விடுகிறது.

அப்போது ஆட்சிக்கு எதிராக முன்னுரை எழுதுவான் ஒருவன்.

அதற்குப் பொருளுரை எழுதுவான் மற்றொருவன்.

அணிந்துரை எழுதுவான் அடுத்தொருவன்!

அதைப் படிக்கும் மக்கள் உள்ளம் துடிக்கும்!

அந்தத் துடிக்கின்ற உள்ளத்தை அடக்கவோ அதில் வெடிக்கின்ற கேள்விக்கு விடை தரவோ மக்கள் வடிக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரைத் துடைக்கவோ, தடித்த தோல் படைத்தோரால் முடியாமல் போகும். அப்போது கட்டிய நாய்களாக எட்டிய மட்டும் பாய்ந்து கொண்டே இருக்க மாட்டார்கள் மக்கள்.

விரிந்துரை வேகமாக முடிவுரையில் மோகனம் இருக்காது முகாரிதான் இருக்கும்!

அதனால், சுதந்திரம் ஆள்வோரின் தந்திரமாகி விடக்கூடாது.

தந்திரம் ஆள்வோரின் மந்திரமானால், ஆட்சியில் சந்தன வாசம் வராது. சாக்கடை நெடிதான் வரும்! அப்போது மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடும் நிலை ஏற்படும்.

சுதந்திரம் சுக்கோ, மிளகோ அல்ல. கடையில் வாங்கிக் கொள்ள, அதனால் விரும்பிக் கொடுத்த சுதந்திரம் கேட்டு எடுத்த சுதந்திரம், கேட்காமலே பறித்த சுதந்திரம் எனக் கண்ட நாடுகள் உள்ளன.

சுதந்திர தினத்தை தவறாமல் கொண்டாடும் நாடுகளில் மக்கள் சுதந்திரத்தோடு வாழுகிறார்களா என்றால், முட்டை வடிவம் ஒன்று நம் முன்னால் வந்து நிற்கிறது.

சுதந்திரம் என்பது ஒரு நாட்டில் வாழும் மனிதனின் உரிமை!

அந்த உரிமை ஆள்வோருக்கு மட்டுந்தான் உண்டு என எண்ணியதால் வந்த வினைதான்,

பொஸ்னியாவில் கொதிப்பு,

ருவண்டாவில் உயிர் புதைப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்காவில் வறுமைத் துடிப்பு,

ஆப்கானிஸ்தானில் துடிப்பு,

இந்தியாவில் குண்டு வெடிப்பு,

ரஷ்யாவில் ஆட்சிக் கலைப்பு,

சேவியர்களின் தவிப்பு,

இலங்கையில் பதை பதைப்பு.

இந்த நிலை மாற வேண்டும்.

அரியாசனத்தில் அமர வைத்த மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சரியாசனம் சுதந்திரம்!

அது (மிதியாலும்) ஆகிவிட்டால் சதியாசனம் தலை தூக்கும்!

இது உலகத்தில் நடந்தது - நடக்கிறது - நடக்கும். மனிதனின் உரிமை சுதந்திரம் என்பதைப் பெரியவர்கள் உணர்ந்தால் பெருமை சிந்து பாடும்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடு

"நான் கடைவீதிக்குப் போகிறேன். உனக்கு என்ன வேண்டும்?" எனக் கணவன் கேட்கிறான்.

சரியான மனைவி என்றால் அடுக்களைப் போய்ப் பார்த்து விட்டு இன்ன இன்ன பொருள் வேண்டும் என்பாள்.

"அப்படிச் சொன்னால் எப்படி? மறந்தாலும் மறந்து விடும். ஒரு காகிதத்தில் எழுதித் தந்து விடு" எனக் கணவன் கேட்கிறான்.

அவளும் எழுதித்தர, எடுத்துச் சென்று உரிய பொருட்களை வாங்கி வந்தால் அது ஒரு சிறந்த குடும்பம்.

அதல்லாது, கடைவீதிக்குப் போகிறேன்; உனக்கு என்ன வேண்டும் எனக் கணவன் கேட்க.

பொருள் வாங்கி வாருங்கள் என்று மனைவி சொல்ல, இவனும் கடைக்குப் போய் பொருள் தாருங்கள் என கடைக்காரனிடம் கேட்க, என்ன பொருள் என்று கடைக்காரன் கேட்க,

எதையாவது கட்டு என இவன் சொல்ல, எது எது பழுதாகி விற்க முடியாமல் இருக்கிறதோ, அதை எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி அவன் கொடுக்க, அதை எடுத்து வந்த கணவன் மனைவியிடம் கொடுக்க, அவள் பிரித்துப் பார்த்தபின்,

"என்னங்க இது எல்லாம் புழுத்துப் போனதும் உழுத்துப் போனதுமா இருக்கு? பொருளைப் பார்த்து வாங்கிறதில்லையா? பணத்தை வீணாக்குறதுக்குன்னே பொறந்திருக்கீங்களா?

வீட்டிற்குப் பொருள் வாங்கத் தெரியாத ஆம்புளையும் ஒரு ஆம்புளையா?"

என மனைவி பேசத் தொடங்கினால் ஆண் பிள்ளை இவன் சும்மா இருப்பானா? நாலு சாத்துச் சாத்துவான். அன்று... குடும்பம் குடும்பமாக இருக்காது.

இந்த வீட்டுப் பிரச்சினைதான் இன்று நாட்டுப் பிரச்சினை!

வீட்டிற்கும் நாட்டிற்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை.

நாடு என்றால் அது ஒரு பெரிய வீடு. அவ்வளவுதான் வித்தியாசம்" என்கிறார், அறிஞர் அண்ணா!

உற்று நோக்கினால் உண்மை என்றுதான் படுகிறது.

வீட்டிற்கும் தலைமை இருக்கிறது.

நாட்டிற்கும் தலைமை இருக்கிறது.

வீட்டிற்கும் சோறு தேவை.

நாட்டிற்கும் சோறு தேவை.

வீட்டிற்குப் போவதற்கும் வீதி வேண்டும்.

நாட்டுக்குள் திரியவும் வீதி வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கும் பாதுகாப்புத் தேவை.

நாட்டிற்கும் பாதுகாப்புத் தேவை.

வீட்டிலும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.

நாட்டிலும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.

நாட்டிற்குள் மக்கள் என்றால் வீட்டிற்குள் குடும்பம்.

பல வீடுகள் சேர்ந்தால் ஒரு தெரு.

பல தெருக்கள் சேர்ந்தது ஊர்.

பல ஊர்கள் சேர்ந்தது தொகுதி.

பல தொகுதிகள் ஒரு மாவட்டம்.

பல மாவட்டங்கள் ஒரு மாகாணம். பல மாகாணங்கள் ஒரு நாடு.

அந்த நாடு நலமோடு இருக்க வேண்டுமானால் வீடு நலமோடு இருக்க வேண்டும்.

"நாடு அதை நாடு அதை நாடா விட்டால் எது வீடு" என்கிறார் கண்ணதாசன்.

"தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்கிறான் பாரதி. எத்தனை பேருக்குச் சக்தி பிறக்குது என்றால் அது கேள்விக்குறி.

தாயகத்தின் மீது பற்று உள்ள எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால் முட்டை வடிவம் நம் முன்னால் நிற்கும்.

பிறந்த மடி தாய் மடி, வந்து விழுந்த மண் தாய்நாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாயகத்தை நேசிப்பவன் எத்தனை பேர்?

இந்த பூமி நமக்குச் சொந்தம் இல்லை.

அழிந்து விடக்கூடியது! நிரந்தரம் அற்றது! நிர்மூலமாகப் போவது என்பது உண்மைதான்!

ஈ அமரும் இடம் கூட இறைவனுக்குச் சொந்தம்! இதைத்தான் எனது இடம் என்று மனிதன் கூறுபோட்டு விற்பனை பண்ணுகிறான்.

குடக்கூலி இல்லாமல் குடியிருக்கும் இடம் தாயின் கருவறை!

பெண் வந்து பிறந்தாலும் ஆண் வந்து பிறந்தாலும் மண் வந்து தங்கும் மனிதனிடம் மரணத்தை வாடகையாக வாங்காது இறைவன் விட்டதில்லை.

அதனால்தான் பூமியை பங்கு போட்ட மனிதன் பூமிக்குள் புதைகிறான்.

புதைக்கும் இடங்கூட புதிய இடம் இல்லை. ஏற்கனவே பலரைப் புதைத்த இடம் என்பது எல்லாம் உண்மை!

ஆனாலும் இந்த மண்ணில் மனிதன் பிறந்து விட்டான்.

இறைவன் மனிதனைப் பிறக்க வைத்து விட்டான்.

இறக்கப் போவதும் இந்த பூமியில்தான்! இறந்த பின்பு மறையப் போவதும் இந்த பூமியில்தான்.

வாழும் காலம் வரை இந்த மண்ணில் வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் காலம் வரை பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த பெண் தாய்!

பிறந்த பூமி தாய் நாடு!

தாயின் மடியில் இருந்து விளையாடுவது போல தாய் நாட்டு மண்ணில் வாழுகிறான்.

தான் வாழ வேண்டும் என்பதற்காக மண்ணைத் தோண்டுகிறான். மாணிக்கம் எடுக்கிறான், வீடு கட்டுகிறான், விவசாயம் செய்கிறான், வழி அமைக்கிறான், வாகனம் ஓட்டுகிறான். அதனால் வாழும் மனிதன் வாழுகின்ற காலம் வரை நாட்டிற்கு நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும்.

மண வீட்டிற்கும் போகிறான், மரண வீட்டிற்கும் போகிறான், பள்ளிக்கும் போகிறான், பங்களாவுக்குள்ளும் போகிறான்.

செருப்பு அணிந்து பழக்கப்பட்ட மனிதன் புனிதஸ்தலங்களுக்குள் போகும்போது செருப்பை வெளியே வைத்து விட்டுப் போகிறான்.

இதற்காகவே காத்திருப்பவன் செருப்பைத் திருடிவிடுவான்.

உள்ளே போனவன் வெளியே வரும்போது செருப்பு இருக்காது.

வெறுங்காலோடு வீதிக்கு வருவான். இவன் செருப்பை வேறு ஒருவன் அணிந்திருப்பதைப் பார்ப்பான்.

இவன் என் செருப்பு என்பான். அவன் தன் செருப்பு, என்பாள் செருப்புக்காகத் தெருவில் சண்டை. என் சட்டை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ட்ரவ்சர், என் பேனா, என் செருப்பு, என் வீடு, என் பணம் என்றெல்லாம் சொல்லுகின்ற மனிதன் என் நாடு என்று சொல்வதில்லை. சொல்ல மறந்து விட்டானா என்றால் இல்லை! சொல்ல விரும்புவதில்லை.

சொல்ல விரும்புகின்ற மனிதனும் இருக்கிறான். என் நாடு என்று மார் தட்டுகின்ற மனிதனும் இருக்கிறான்.

அவன் வாழுகின்ற நாடு சிறப்பாக இருக்கிறது.

அரேபியன் என்று சொல்கிறவன் ஆவேசத்தோடு வாழுகிறான்.

ஜப்பானியன் என்று சொல்கிறவன் நாடு சொர்க்கபுரி ஆகி வருகிறது.

அமெரிக்கன் என்று சொல்கிறவனின் நாடு உலகத்தையே ஆட்டிப் படைக்கிறது.

நான் வடக்கத்தியன்;

தெற்கத்தியன் நான்;

கிழக்கு என் பூமி;

மலைநாட்டான் நான்; கரையோரத்தான் நான் என்றெல்லாம் சொல்கிறவனின் நாடு போர்க்களம் ஆகிவிட்டது.

முகத்தைப் பார்த்ததுமே இனத்தை கணிக்கும் வெறி வேரூன்றி விட்டது.

இந்த லட்சணத்தில் ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன எனக் கூறும் மனிதனும் இருக்கத்தான் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு எக்கேடு கெட்டால் என்ன? சோறு கிடைத்தால் போதும் என நினைக்கிறான்.

மொழியை வைத்து சிலபேர் வாழுகிறார்கள்.

இனத்தை வைத்துச் சிலர் பிழைக்கிறார்கள். மொழியையும், மதத்தையும் வைத்துச் சிலபேர் வாழுகிறார்கள்.

மதத்தை மட்டும் நேசித்துச் சிலர் வாழுகிறார்கள்.

மொழி வெறியையும் மத, இன வெறியையும் விதைத்தவர்கள், வேரூன்ற விட்டவர்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

அவர்கள் வளர்த்து விட்டது இன்று பாடப் புத்தகம் ஆகிவிட்டது.

அந்தப் பாடப் புத்தகத்தை தீயாக மாற்றி அதில் குளிர் காய்ந்து கொள்கிறவர்கள் சிலர்.

ஜே.ஆர். ஆட்சி காலத்தில் டாக்டர்கள் தட்டுப்பாடு நிலவியது.

பர்மாவில் நின்றும் பல டாக்டர்கள் அழைக்கப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவர் கற்பிட்டி வந்து பணியாற்றினார்.

அவருக்கு ஆங்கிலம் மட்டும்தான் தெரியும்! அதனால் பல சந்தர்ப்பங்களில் அவருக்கும் நோயாளர்க்கும் மத்தியில் மொழி பெயர்ப்பாளனாக இருந்துள்ளேன்.

அதனால் அவர் நல்ல நண்பன் ஆனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நாட்டில் தொழில் வாய்ப்பு இல்லாமலா இங்கு வந்தீர்கள் என்று கேட்டேன்.

உங்கள் அரசு அழைத்தது. எங்கள் அரசு போகச் சொன்னது!

நாங்களாக விரும்பி வரவில்லை. எங்கள் நாட்டில் சேவை செய்யவே விரும்புகிறோம் என்றார்.

அவரிடம் நாட்டுப் பற்றைக் காண முடிந்தது! நம்மவர்கள் பிறந்த நாட்டில் கற்று, புகுந்த நாட்டில் பணியாற்றுகிறார்கள்.

கிராமத்துப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் போக விரும்புவதில்லை.

அப்படி விரும்பினால் 'டியுசன்' வருமானத்திற்கு வழி தேடுவார்கள்.

'இன்டர் நெஷனல்' என்ற பெயரில் கலை மகளை விலைமகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் யார்? இந்த நாட்டின் தலைவர்கள்.

வெள்ளைக்காரன் ஆட்சி பண்ணியபோது உழைத்து வாழ்ந்த மக்கள் சொந்தக்காரன் ஆட்சி பண்ண வந்ததும் சோம்பேறி ஆகி விட்டார்கள்.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள இனாமாகச் சோறு போட்டதால் சோம்பேறி ஆகிவிட்டான் மனிதன்.

போராடிச் சுதந்திரம் பெற்றிருந்தால் நாட்டில் பாசம் பிறந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனாமாகச் சுதந்திரம் கிடைத்ததால் ரேஷன் கார்டை வைத்தே மக்கள் மோசமாக்கப்படுகிறார்கள்.

இனவாரியாகக் கணக்குப் போட்டதால் மொழிவாரியாகப் பிரிய முற்பட்டு விட்டான்.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேறு என்ன பண்ணலாம் என தலைவர்கள் எண்ணுகிறார்களே தவிர நாட்டுப்பற்றை ஊட்ட மறந்து விட்டார்கள்.

அதனால் சமுர்த்தியைப் பார்த்து கையேந்தும் மனிதன் நிறைந்து வருகிறான்.

ஊர் கூடி வடம் பிடித்தால் தேர் வந்து சேரும் உண்மைதான்.

யார் கூடி வடம் பிடிப்பது என்ற கேள்விக்கு இன்னும் விடை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

**கடையில் கவனம் இன்றேல் கடன் வந்து சேரும்.**
**படையில் கவனம் இன்றேல் உயிர்ச்சேதம் கூடும்.**
**காரியாலயத்தில் கவனம் இன்றேல் பைல்கள் குவியும்.**
**வீட்டில் கவனம் இன்றேல் வேதனை அதிகமாகும்.**
**நாட்டில் கவனம் இன்றேல் நலிவு அதிகரிக்கும்!**
**பொலிவு புரையோடிப் புண்ணாகிவிடும்.**

கடமை கண் போன்றது காலம் பொன் போன்றது என்ற எண்ணம் உதிக்காத வரை அலுவலக நேரத்தில் வேலை செய்யாமல் ஓவர் டைமிற்கு உரம் போடும் வரை அலுவலகங்கள் அரட்டை அரங்கமாக இருக்கின்றவரை, லஞ்சம், பஞ்சம் இன்றிப் பரவலாக இருக்கின்ற வரை கடமை புரியக் காவலர்கள் பயப்படுகிற வரை, குறுக்கு வழிகள் மூடப்படாத வரை ஆண்டிற்கு பாதிநாள் லீவு நாளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற வரை, அதை அனுபவிக்க ஒரு கூட்டம் சாராயக் கடைகளை நிறைக்கின்ற வரை, இன வெறிக்கும் மொழி வெறிக்கும் தூபம் இடும் துரோகிகள் இருக்கின்ற வரை, மதவாதிகட்கு மந்திரிகள் பயப்படுகிற வரை மனிதன் மனிதனை மனிதனாக மதிக்கின்ற மனப்பான்மை உருவாகாத வரை மக்கள் குரலுக்கு மதிப்பு அளிக்கப்படும் வரை நாடு நாடாக இருக்காது.


"நாடு - அதை நாடு
நாடாவிட்டால் ஏது வீடு?"

என்று சொல்வதைவிட நாட்டை விட்டு ஓடு என்று சொன்னால் பொருந்தும்.

அப்படி ஓடியவர்கள் நாட்டை நாடாதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளி



ஆலைத் தொழிலாளி
சாலைத் தொழிலாளி,
உழவுத் தொழிலாளி,
தோட்டத் தொழிலாளி,
கட்டடத் தொழிலாளி,
கடல் தொழிலாளி,
காவல் தொழிலாளி,
கப்பல் தொழிலாளி,
மரம் ஏறும் தொழிலாளி,
மருத்துவத் தொழிலாளி,
துறைமுகத் தொழிலாளி,
சிகை அலங்காரத் தொழிலாளி,
சிற்பத் தொழிலாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொழிலாளர் வர்க்கத்தில் பல பிரிவினர் இருக்கிறார்கள்.

இந்தத் தொழிலாளர்களின் துறைக்கு ஏற்ற விதத்தில் சங்கங்கள் அமைத்துக் கொண்டுள்ளனர்.

தொழிற் சங்கங்கள் என்று பலவும் இருக்கின்றன.

அந்தச் சங்கங்களுக்கு தலைவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தொழிலாளர்களின் கையில் தங்கியுள்ளது.

நாட்டின் அரசு எவ்வளவு சிறந்தது என்றாலும் தொழிலாளர் துயரத்தில் வீழ்ந்தால், அந்த நாட்டில் வளர்ச்சி இருக்காது.

நாட்டின் வளர்ச்சியில் ஊன்றுகோலாக, உறுதுணையாக, அடிப்படையாக, ஆணிவேராக நிற்பவன் தொழிலாளி.

ஆல விழுதுகள் போல் பிரஜைகள் லட்சம் இருந்தாலும் வேரென நின்று நாடு விழாது காப்பவன் தொழிலாளி.

இந்த வேலை நிறுத்தங்கள் சில வெற்றி பெற்றதும் உண்டு - இவர்களை வேதனையில் வீழ்த்தியதும் உண்டு.

திட்டமிட்ட வேலை நிறுத்தங்கள் வெற்றியைத் தந்தன.

திட்டமிடாத வேலை நிறுத்தங்கள் தோல்வியைத் தந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையின் வழி நடத்தல் சரியில்லாத காரணத்தால்; தோல்வி அடைந்த வேலை நிறுத்தங்கள் தொழிலாளியைப் பாதித்தாலும் தலைமை பாதித்ததில்லை.

பொதுவாகவே தொழிலாளி ஏமாறக் கூடியவன்.

ஏமாறக் கூடியவன் என்பதால் ஏமாற்றும் தன்மையும் உண்டு.

முதலாளியையும் தொழிலாளியையும் ஏக காலத்தில் ஏமாற்றும் திறமை தலைவனுக்கு உண்டு.

அதனால் தலைவன் எல்லாம் வசதியோடு வாழ அவனை நம்பியவன் எல்லாம் வறண்டு கிடக்கிறான்.

தொழிலாளி நலம் பெற வேண்டும்; அவனது வாழ்வு மலர வழி பிறக்க வேண்டும். அதற்காக ஆண்டிற்கு ஒரு போனஸ்; ஆளுக்கு ஒரு சைக்கிள்; ஆண்டிற்கு ரெண்டு உடை; வேளைக்கு உணவு; வேதனைக்கு மருந்து; இருக்க இடம்; படுக்கப் பாய் மற்றும் சலுகைகள் உரிமைகள்; சம்பள உயர்வுகள் என்றெல்லாம் குரல் எழுப்ப வைப்பவன் தலைவன்.

அந்தக் குரலை அமுக்கி, குரல்வளையை நெரிக்கவும், இந்தத் தலைவனுக்குத் தெரியும்.

ஜனநாயகத்தில் உள்ள அடிப்படை தத்துவப்படி கருத்துரிமை, பேச்சுரிமை, வாக்குரிமை, வாழும் உரிமை இவற்றோடு வேலை நிறுத்த உரிமையும் உண்டு.

இந்த வேலை நிறுத்தம் என்பது தொழிலாளியிடம் உள்ள ஒரே ஆயுதம். ஆனால் அது இரண்டு பக்கங்களும் கூர்மை உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பிடிக்கத் தெரியாமல் பிடித்து கழுத்தை அறுத்துக் கொண்டவர்களும் உண்டு.

பலநாள் பொறுத்துப் பார்த்து, பல தொல்லைகளைத் தாங்கி, கெஞ்சிப் பயன் இல்லை; கேட்டுப் பலன் இல்லை; இனி அஞ்சிப் பயன் இல்லை என்று அறிந்த பின்புதான் தொழிலாளி வேலை நிறுத்தத்தில் இறங்கி இருக்கிறான் என்பதை பொதுமக்கள் உணர வேண்டும்; உணர வைக்க வேண்டும்.

பொதுமக்கள் ஆதரவு இல்லாத வேலை நிறுத்தம் வேரறுந்து போகும்.

வேலை நிறுத்தம் என்பது தொழிலாளியின் வேதனையை நிறுத்தும் மருந்து.

பொதுமக்களின் கழுத்தை அறுக்கும் ஆயுதமாக மாறக்கூடாது.

வேலை நிறுத்தம் என்பது தொழிலாளியின் வீம்புப் போராட்டமாக இருக்கக்கூடாது.

நாட்டை விழிப்புறச் செய்யும் போராட்டமாக அமைய வேண்டும்.

வேலை நிறுத்தத்தில் இறங்கும் முன்பு சிந்திக்க வேண்டும்.

வேலை நிறுத்தம் இப்போதைக்கு அவசியமா? அவசியம் என்றால், வேலை நிறுத்தம் முடிவுற எவ்வளவு காலம் எடுக்கும்?

நாலு மாதம் எடுக்கும் என்றால் நாலு மாதத்திற்கு, எவ்வளவு நட்டம் நாட்டிற்கு ஏற்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாலு மாத வேலை நிறுத்தத்தால் குடும்பம் பாதிக்குமா? கொண்டு நடத்த முடியுமா?

கொண்டு நடத்தும் வசதி நம்மிடம் உண்டா?

நாலு மாதம் பட்டினி இல்லாமல் வாழ தொழிற்சங்கம் உதவுமா?

தூண்டிவிட்ட தொழிற்சங்கத் தலைவன் நம் குடும்பத்திற்குச் சோறு போடுவானா?

வேறு கோணத்தில் அணுகினால் கோரிக்கை நிறைவேறாதா?

நாட்டிற்கும் நிறுவனத்தினருக்கும் நாலு மாதத்தில் ஏற்பட்ட நட்டத்தை, வேலை நிறுத்தம் முடிந்த முப்பது நாட்களில் ஈடு செய்ய முடியுமா?

இந்த வேலை நிறுத்தத்தால் ஆத்திரம் அடையும் நிர்வாகம்; அடிக்க வரும் அதிகாரம், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், கலகங்கள், தடியடிகள், சிறை செல்லல் போன்றவை ஏற்படுமா? அதனால் அணைந்த அடுப்பு அழுகின்ற மனைவி அலைகின்ற குழந்தைகள் என ஆகிவிடுமா? இந்தக் கேள்விகட்கு எல்லாம் விடை காண தொழிலாளி விரும்புவதில்லை; விரும்ப சங்கத் தலைமை விடுவதில்லை.

வேலை நிறுத்தத்தின் போது சங்கத் தலைமைக்கும் ஆலைத் தலைமைக்கும் இடையே ஒரு பேச்சுவார்த்தை நடக்கும்.

அந்தப் பேச்சு வார்த்தை பேட்டியாகும். பேட்டி பெட்டியாகும். வேலை நிறுத்தம் வேரறுந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955ம் ஆண்டு என எண்ணுகிறேன்.

காலையில் தேநீர்,

பகல் உணவு,

மாலை டிபன்,

மறக்காமல் போனஸ்,

அணிய சீருடை; அழைத்து வர வாகனம் என்ற பல வசதிகளை சிகரட் நிறுவனம் செய்து கொடுத்தது.

இவற்றை எல்லாம் அனுபவித்து வந்த தொழிலாளி ஒருவனின் பகல் உணவில், ஒரே ஒரு கல் இருந்தது.

அதனால் தொழிலாளி சமையல்காரனைத் தாக்கினான்.

சமையல்காரன் நிர்வாகத்திடம் முறையிட்டான்.

அடித்தவனை விசாரணை முடியும்வரை வெளியே நிறுத்தியது நிர்வாகம்.

அவனை உள்ளே எடு என்று உடனே வேலை நிறுத்தம் தொடங்கியது.

தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டது. நிர்வாகம் பணிய மறுத்தது. பேச்சுவார்த்தை பலன் தரவில்லை.

"தொழிற்சாலையைத் திறக்க வேண்டும் என்ற அவசியம் எனக்கும் இல்லை.

நாட்டிற்குத் தேவையான பொருளை அடுத்த நாட்டில் உள்ள என் நிறுவனத்தில் இன்றும் எடுத்து வினியோகிக்க எமக்கு முடியும்."

என இறுதிப் பேச்சு வார்த்தையின் போது அழுத்திச் சொல்லியது நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சி மன்றாடிப் பின்பு சற்று இறங்கி வந்த நிர்வாகம்.

தாக்கியவனை நீக்கியது. சலுகைகள் பலவற்றை பாதியாகக் குறைத்தது. முடிவு! தேன் குடத்தைத் தூக்கிப் போய் தேள் கொட்டிய கதை.

இஞ்சி தின்ற குரங்கு, ஆப்பு பிடுங்கிய குரங்கு என்றெல்லாம் சொல்வார்களே, அந்த நிலைக்கு ஆளானான், தொழிலாளி. இல்லை! தலைமையால் ஆளாக்கப்பட்டான்.

தொழிற்சாலை வேலை நிறுத்தம் என்றால், இயந்திரத்தில் சில பாகங்கள் காணாமல் போகும்.

போக்குவரத்து வேலை நிறுத்தம் என்றால், டீசல் டேங்கில் உப்புத் துகளைக் கொட்டி விடுவார்கள்.

ரெயில்வே ஊழியர் வேலை நிறுத்தம் என்றால் தண்டவாளத்தோடு வைத்து புகைவண்டியை "வேல்டின்" பண்ணி விடுகிறார்கள்.

கிளார்க் வேலை நிறுத்தம் என்றால், முக்கிய பைல்கள் இருக்காது.

வெளிநாடுகளில் வேலை நிறுத்தம் புதுமையாக இருக்கும்.

சப்பாத்து தொழிற்சாலையில் வலக்கால் சப்பாத்தை மட்டும் உற்பத்தி பண்ணி, தம் கோரிக்கையில் வெற்றி கண்டனர்.

ஜப்பானில் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. காலை 7 மணிக்கு தொழிலாளர்கள் "பெக்டரி" வாசலில் கூடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் கோரிக்கைகளை ஏனையோருக்கு விளக்கினான் தலைவன்.

8 மணிக்கு ஆலை சங்கு ஊதியது என்பதைக் காட்ட தலையில் ஒரு சிவப்பு "றிபன்" கட்டிக் கொண்டார்கள்.

வேலை தொடங்கியது.

அறுபது வீதம் உற்பத்தி பண்ணும் அந்தத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தக் காலங்களில் 80 வீதம் உற்பத்தி செய்வார்.

இப்படியானவர்களை நிர்வாகம் ஏமாற்றுவதில்லை.

நமது தொழிலாளி

நாட்டுப் பற்று இல்லாதவன்.

நாணயம் அற்றவன்;

நன்றி கெட்டவன்;

செய்யும் தொழிலை மதிக்காதவன்;

சேர்ந்து வாழத் தெரியாதவன்;

வஞ்சகன், வாய் ஜாலக்காரன்

என்ற பட்டத்திற்குச் சொந்தக்காரனாக இருக்கிறான்.

அதனால் இவனது வேலை நிறுத்தங்கள் மக்களால் மதிக்கப்படுவதில்லை.

சரியான வேலை நிறுத்தங்கள் கூட அரசால் அமுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் திசை காட்டும் கருவியை தப்பானவனின் கையில் கொடுத்து விட்டான்! அதனால் கப்பல் தரையில் மோதிவிட்டது.

நாடி தளர்ந்தவன் கையில் மண் சாடியைக் கொடுத்தால் உருப்படியாக வந்து சேராது.

சம்பள உயர்வு கிடைத்தால் பொருள் விலை உயரும்.

பொருள் விலை உயர்ந்தால் சம்பள உயர்வு தேவைப்படும்.

பொருள் விலை குறைய உற்பத்தி அதிகரிக்க வேண்டும். பொருள் விலை குறைக்கும் வேலை நிறுத்தம் நடந்ததில்லை. உற்பத்தியை அதிகரிக்க, வேண்டியவன் வேலை நிறுத்தத்தில் குதித்தால், வேதனை கூடும். வெற்றி நெருங்காது.

படைக்கு உதவாத கத்தி,

பயிர் விளையாத நிலம்,

பசிக்கு உதவாத உணவு,

ஆபத்திற்கு உதவாத பிள்ளை,

தாகத்தை தீர்க்காத தண்ணீர்,

பாவத்தைப் போக்காத தீர்த்தம்,

வெற்றியைத் தராத வேலை நிறுத்தம்

எல்லாம் ஒரே ரகம்.

இலவசமாகக் கிடைத்தால் வயிற்று வலியைக் கூட வாரி எடுத்துக் கொள்வான் நம் நாட்டுத் தொழிலாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வேதனையை விலை கொடுத்து வாங்கிப் பழகி விட்டான்.

சாதனை படைக்க வேண்டிய தொழிலாளி சோதனையின் சொந்தக்காரன் ஆகி விட்டான்.

வெளுத்தது எல்லாம் பால்; கறுத்தது எல்லாம் தார் என்று தலைவன் சொன்னால் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவு கொடுப்பான்.

அதனால் தொழிற்சங்கவாதி இவனை வைத்துப் பிழைப்பு நடத்துகிறான்.

ஆழம் தெரியாமல் காலை விடுவான்; நீந்தத் தெரியாமல் தவிப்பான்.

அளவு கடந்த நம்பிக்கையின் காரணமாக சிந்திக்கும் திறனற்றுப் போனவன்.

அதனால் முன்னேற்றம் என்பது இவன் காணாத ஒன்று; பாவம் தொழிலாளி!

✷

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாளி

தொழிலாளியின் எதிரி!

துரோகத்தின் கிளை நிலம்!

உழைக்காமல் உண்பவன்!

ஊரறிந்த துரோகி!

பாட்டாளியின் பகைவன்!

பணப்பேய் பதுக்கல் பேர்வழி!

அரசை ஏய்ப்பவன்!

அற்பன்!

அயோக்கியன்!

கஞ்சன்!

கல் நெஞ்சன்!

வஞ்சிப்பவன்!

ஏழையை வாட்டி எடுப்பவன்!

ஏற்றி விட்ட ஏணியை உதைப்பவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை சேர்த்த தோணியை எரிப்பவன்

என முதலாளி வர்க்கத்திற்கு மார்க்ஸிய தத்துவம் முன்னுரை எழுதுகிறது.

பசி படைத்தவனுக்கும் பணம் படைத்தவனுக்கும் மத்தியில் ஓர் இரும்புத்திரை விழுந்துள்ளது.

இந்தத் திரை இருக்கின்ற காரணத்தால் தொழிலாளி மனிதன், முதலாளி மனிதனை பயங்கரவாதியாகப் பார்க்கிறான்.

வாயைத் திறக்கும்போதே 'தனபதிப் பந்திய' தனவந்தவர்க்கம் என்றே திறக்கிறான்.

அதனால் பணக்காரனைப் பாட்டாளி பகைவனாகவே பார்க்கிறான்.

பணம் வைத்திருப்பவன் பணக்காரன்; முதலுக்குச் சொந்தக்காரன் முதலாளி!

இவனெல்லாம் ஒழிய வேண்டும். இல்லாமல் ஆக்க வேண்டும் என்கிறது மாக்ஸிய முழக்கம்!

தனம் வைத்திருப்பவன் தனவந்தன் என்றால் இவனின் தலைமையிடம் தனம் இருக்கிறதே மார்ஸியம் கண்டு கொள்வதில்லையே ஏன்?

காரணம் தலைமை தோழனாகி விடுவதாலா?

மார்க்ஸிய தலைமைகளில் எவன் ஏழையாக இருக்கிறான்?

இவன் முதலாளியாகி ஆட்சி பண்ணுவானாம், வெளியே எவனும் முதலாளியாக இருக்கக் கூடாதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி தொழிலாளியின் துரோகி என்று சொல்லிச் சொல்லியே முதலாளியானவன் மார்க்ஸியவாதி!

பாவம்! வால், தலையை நம்பி ததிகிணத்தோம் போடுகிறது.

ஆலைத் தொழில் முதல் சாலைத் தொழில் வரை அரசின் கையில் இருக்கவேண்டும். மற்றவன் எல்லாம் இவனிடம் கையேந்த வேண்டும்.

ஏன் சொல்கிறார்கள் இப்படி? உற்று நோக்கினால் உண்மை புரியும்.

இவன் ஆட்சியில் அமர்ந்து ஆனந்தம் காணவேண்டும். இவனை உட்கார வைத்தவன் ஒப்பாரி வைக்கவேண்டும்.

அதாவது ஆளும் வர்க்கம் முதலாளி; ஆளப்படுவோன் தொழிலாளி.

ஜனநாயகத்தில் பணக்காரன் ஆட்சிக்கு வருகிறான்.

மார்க்ஸியத்தில் ஆட்சிக்கு வருபவன் பணக்காரன் ஆகிறான். இது ரஷ்யப் பழமொழி!

இவர்களின் உறவுமுறை கூட உருக்குலைந்து உள்ளது.

அப்பன் பிள்ளையைப் பார்த்து தோழா என்பான், பிள்ளை அப்பனைப் பார்த்து தோழா என்பான்.

மகள் அன்னைக்குத் தோழி; அன்னை மகளுக்குத் தோழி.

கணவனுக்கு மனைவி தோழி. மனைவிக்குக் கணவன் தோழன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னடா இது உறவு என்று கேட்டால் அதுதான் சமதர்மமாம்.

எதையோ சொல்ல வந்து எதையோ குழப்புகிறேன்போல் தெரிகிறதா?

நான் சொல்ல வந்தது இதுதான்.

பெரியோர்கள் எல்லாம் பெரியோர்கள் அல்ல! பெரியோரில் சிறியோரும் உண்டு. சிறியோர்கள் எல்லாம் சிறியோர்கள் அல்ல; சிறியோரில் பெரியோரும் உண்டு. கத்திரிக்காயிலும் நல்லது கெட்டது இருக்கிறது.

மாம்பழத்தில் கூட இனிப்பும் புளிப்பும் உண்டு.

நன்மை - தீமை என்று வாழ்க்கையில் உண்டு. சூடு குளிர் என்று இயற்கை எமக்குத் தந்திருக்கிறது.

நிழலும் இருளும் ஒரு நிறம்தான். ஆனால் அதன் தன்மைகள் வெவ்வேறு.

நாள் ஒன்றுதான். ஆனால் இரவு - பகல் என்று இரண்டை இறைவன் படைத்துள்ளான்.

காற்று ஒன்றுதான். ஆனால் தென்றல் - புயல் - சூறாவளி என்று வேறுபடுகிறதே.

முதலாளி வர்க்கம் ஒன்றுதான். அதில் வேறுபட்ட குணமும் மாறுபட்ட எண்ணமும், ஒன்றுபட்ட உள்ளமும் கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

தான் மட்டும் வாழ்ந்து, தன் குடும்பத்தைக் கவனிக்காத முதலாளிகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் முதலாளியும் இருக்கிறான்.

சின்ன வீட்டிற்கு சிரம் தாழ்த்துவோனும் இருக்கிறான்.

வியர்வை உலரும் முன்பு தொழிலாளியின் கூலியைக் கொடுத்தவனும் இருக்கிறான்.

வியர்வை உலர்ந்த பின்பு வேறு பக்கம் பார்ப்பவனும் இருக்கிறான்.

ஆர்ப்பாட்ட முதலாளி!

அடக்கமான முதலாளி!

ஆடம்பர முதலாளி!

ஆரவாரமற்ற முதலாளி

என்று இருக்கத்தான் செய்கிறார்கள்.

வள்ளலும் இருக்கிறான். வாரிச் சுருட்டுவோனும் இருக்கிறான்.

நல்லவனும், நாணயம் கெட்டவனும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர் புத்தளத்தில் இருந்தார்.

முன்னாள் நிதி அமைச்சர், மர்ஹூம் எம்.எச்.எம். நெயினார் மரைக்காரின் சின்ன மாமன்!

இல்லை என்று வந்த ஏழைக்கு இல்லை என்று சொல்லாது கொடுத்த வள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் உண்பது போலவே தம் வேலைக்காரர்களும் உண்ணவேண்டும் என நினைத்தவர். உண்ணக் கொடுத்தவர்.

புத்தளத்திலேயே, 'ரோல்ஸ்ரோய்' கார் வைத்திருந்த ஒரே நபர்!

பெருங்கடலில் யானை தாழும் தண்ணீர், சிறு கடலில் கொக்கு நிற்கும் புட்டி என இவரது குடும்ப காணிக்கு சட்டபூர்வமான எல்லை வகுத்து இருந்தது.

காலையில் தோட்டத்திற்குப் போவார். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வர்.

அத்தனை பேருக்கும் சமைக்கும்படி ஆணையிடுவார்.

பதினோரு மணிக்கு வேலை செய்யும் அனைவரையும் அழைப்பார்.

உணவு பரிமாறப்படும். அவர்களோடு இவரும் அமர்ந்து சாப்பிடுவார்.

குமர் கட்டிக் கொடுக்க வழி இல்லை என்று சொன்ன பக்கீருக்கு அந்தக் காலத்திலேயே 1000/- ரூபாய் கொடுத்தவர்.

எங்கள் ஊரில் ஒருவர் இருந்தார். தனக்கும் தன்னைச் சேர்ந்தோருக்கும் சீரகச்சம்பா; வேலைக்காரர்கட்குப் பச்சை அரிசி; நாய்கட்கு 'மில்சாட்' என்று தரம் பிரித்துச் சோறு போட்டவர்.

தன்னைப் போல் ஒருவன் மீசை வைத்திருந்தான் என்பதற்காக அவனைப் பிடித்து மரத்திலே கட்டி பாதி மீசையை மழித்துவிட்டார்.

தோளில் உள்ள துண்டை எடுத்து பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் எவனும் இவர் வீட்டைத் தாண்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டும். மீறினால், கட்டி வைத்து சவுக்கால் அடிப்பார்.

அதாவது மரியாதையை அடித்துப் பறித்தவர்.

தன் வீட்டுக் கிணற்றில் உள்ள தண்ணீரைக் கூட கொடுக்க விரும்பாதவர்.

தான் மட்டும் வாழவேண்டும் என நினைத்த முதலாளி! இறுதியில் இவர் குடும்பத்திற்கு இன்பம் இல்லை.

ஒரு தொழிலைத் தொடங்க வேண்டுமானால், பல லட்சங்களையும் கோடிகளையும் செலவு பண்ணுகிறான் முதலாளி.

பலருக்குத் தொழில் கொடுக்கிறான். தொழிலுக்கு வருகிறவன், வரும்போது வளைந்து நெளிந்து கூனிக் கும்பிடு போட்டுத்தான் வருகிறான்.

பத்து நூறு பேர் ஓர் இடத்தில் வேலை செய்வது தெரிந்தால், இந்த யூனியன் தலைவர்கட்கு தூக்கமே வராது.

முதல் மாதச் சம்பளம் எடுத்த உடனே யூனியன் படிவத்தை ஒருவன் கொடுப்பான்.

அன்று ஆரம்பிக்கும் அசைவு!

சோறு போடுவதை மறந்துவிடுவான்.

தூசாக மதிப்பான் முதலாளியை.

நான் உழைத்துப் போடுகிறேன்,

இவன் உட்கார்ந்து சாப்பிடுகிறான் என்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி படும் அவஸ்தை இவனுக்குப் புரியும்! ஆனாலும் காட்டிக் கொள்ளமாட்டான்.

விளம்பரச் செயலில் தொடங்கி ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, பி.டி.டி, வீட்டு வரி, வருமான வரி, மின்சாரக் கட்டணம் அதற்கும் 12/50 சதவிகித வரி தொழிலாளிக்கு சேமலாப நிதி இத்தனையும் கட்டிய முதலாளி தன் குடும்பத்தைக் கவனிக்கும் செலவு?

முதலாளி கட்டித்தான் நிற்கிறான். இது அல்லாது பாதுகாப்பு நிதி என்று வேறு கொடுக்கவேண்டும்.

தேர்தல் நிதி கொடுக்க வேண்டும். எவனாவது ஓர் அரசியல்வாதி அந்த ஊருக்கு வருகிறான் என்றால் அவனை வரவேற்பதற்கும் இவன்தான் அழவேண்டும்.

வணக்கத்தலங்களின் வளர்ச்சிக்காக வேறு கொடுக்கவேண்டும்.

ஆட்சியை ஏமாற்றி, அதிகாரிகளை ஏமாற்றி, தொழிலாளியை ஏமாற்றி வாழும் முதலாளிகள் இல்லாமல் இல்லை.

யாரோ சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக, ஒட்டுமொத்தமாக அனைவரும் துரோகிகள் அல்லர்.

கடலில் சுறாவும் உண்டு நெத்தலியும் உண்டு.

கடலில் சுறா இருக்கிறது என்பதற்காக கடல் மொத்தமும் சுறா என்று முன்மொழிய முடியுமா?

நூறு தென்னைகட்கு மத்தியில் நாலு வேப்பமரம் நின்றால் அது வேப்பந்தோப்பு ஆகிவிடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்புக் கல்லுக்கு மத்தியில் ஒரு வைரம் கிடந்தால் அத்தனையும் வைரம் என்று அடித்துச் சொல்ல முடியுமா?

குதிரைகட்கு மத்தியில் சில கழுதைகளும் நிற்கலாம்! எல்லாமே கழுதை என்று எடுத்தோத முடியாது.

பணத்தைப்போட்ட ஒவ்வொரு முதலாளியும் பதறிக்கொண்டு நிற்கிறான்.

போட்ட பணம் தேறுமா? முதல் வந்து சேருமா? மொத்தமும் போகுமா? ஆனந்தம் கொஞ்சுமா? அழுகைதான் மிஞ்சுமா என ஒவ்வொரு முதலாளியும் தலையிலே கை வைத்து உட்கார்ந்துவிட்டான்.

ஒரு பொருளை ஏற்றவோ, இறக்கவோ எத்தனைபேருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது.

பஞ்சத்தை மஞ்சத்திற்கு அழைப்பவர்கள் கூடிவிட்டார்கள்.

லஞ்சக் கொமிஷன் கூட பஞ்சக் கொமிஷன் ஆகிவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

ஒரு கடைக்குப் பொருள் வாங்க என்று போனேன்.

முக்கியமான கடைகள் மூடி இருந்தன.

கடைக்காரரின் வீட்டிற்குப் போனேன், "என்னங்க கடை மூடி இருக்கு?" என்று கேட்டேன்.

"பி.டி.டி.காரன் வந்திருக்கான். அவன் போகும் வரையிலே மூடிட்டோம்" என்றார்.

"நீங்க எல்லா டெக்ஸு ம் சரியாத்தானே கட்டுறீங்க. எதுக்குப் பயப்படணும்?" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கட்டுறதுதான் சார் தப்பு. அதனாலேதான் போதாது இன்னும் தாங்கிறான்” என்றார்.

சரியாக வரி கட்டும் முதலாளியிடம் போதாது இன்னும் தா! என்று கேட்டு அதிகாரிகள் கடைகடையாக வருகிறார்கள், படிபடியாக ஏறுகிறார்கள்.

முதலாளி தலை தூக்குவது எப்படி? இதெல்லாம் இந்தத் தலைவர்கட்குத் தெரியாது! கண்டு கொள்வது இல்லை!

முதலாளியைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி அவனிடம் நோட்டு வாங்கவும். தொழிலாளியைக் காப்பேன் என்று சொல்லி இவனிடம் ஓட்டு வாங்கவும் தெரியும்.

அந்த அளவுக்குத்தான் மார்க்ஸியத் தத்துவம் கற்றுக் கொடுத்திருக்கிறது போலும்.

மார்க்ஸியத் தத்துவத்தின் அடிப்படையில் தானே இருந்தது என்.எம் பெரேரா போட்ட வரவு செலவுத் திட்டம். என்ன ஆனது?

முதலாளியை ஒழிக்க முற்பட்டு தொழிலாளி மரவள்ளி சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

மொத்தத்தில் முதலாளி இருக்கிறானே இவனோடு ஒட்டி வாழும்போது ஒத்து வருவான், உறவாடுவான்!

அவனை வீழ்த்த நினைத்தால் முந்திக் கொள்வான்.

✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம்

காட்டிலே திரிந்தான் மனிதன்!

தேவைக்கு வேட்டையாடினான்!

பசித்தது; சாப்பிட்டான்!

தாகம் எடுத்தது; தண்ணீர் குடித்தான்!

தூக்கம் வந்தது; தூங்கினான்!

துக்கம் வந்தது; அழுதான்!

மகிழ்ச்சி வந்தது; சிரித்தான்!

குடும்பம் நடத்தினான்!

குழந்தைகளைப் பெற்றான்!

குலத் தொழிலை போதித்தான்!

அவனிடம் அதிகாரம் இருக்கவில்லை.

காரணம் ஆள்வோர் இருக்கவில்லை.

ஆனாலும் ஒரு வரைமுறை இருந்தது.

அந்த வரைமுறையை யாரும் வகுக்கவில்லை. தானாக வந்தது.

இவன் குடும்பத்தின் மூத்த மனிதன்! சொன்னதை அவன் கேட்டான்.

மூத்தவன் பேச்சுக்கு அவன் கட்டுப்பட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன் சொன்னதை அவன் கேட்டான். கேட்கும் அளவுக்கு அவன் வார்த்தை இருந்தது.

இத்தனைக்கும் அவன் ஆட்சித் தலைவன் அல்லன்! அமைச்சனும் அல்லன்! அதிகாரம் பெற்றவனும் அல்லன்! அதிகாரத்தை யாரும் அவனுக்குக் கொடுக்கவில்லை. ஆனாலும் அந்த மூத்தவனிடம் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

அந்தக் கட்டுப்பாடுதான் அதிகாரமா? அல்லது நிர்வாகமா?

இரண்டையும் அவனிடம் யாரும் கொடுக்கவில்லை. ஆனாலும் அவனிடம் ஏதோ ஒன்று இருந்தது!

தனக்கு என்று ஒரு பாணியை இவன் வைத்து இருந்தான்.

பொய் சொன்னது இல்லை!

புறம் பேசத் தெரியாது!

ஏமாற்றிப் பழக்கம் இல்லை!

யாரையும் வஞ்சிக்க மாட்டான்!

கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனப் போனதில்லை!

தன்னை மதித்தோரை இவன் மதித்தான்!

பிரச்சினைகளைத் தீர்த்தான்.

சிக்கல்களைப் பிரித்தான்.

முடிச்சுகளை அவிழ்த்தான்.

மற்றவர்களால் முடியாதவற்றை

இவன் செய்தான் - செய்ய வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இவன் கூலி கேட்கவில்லை.

இதனால் இவனை மற்றவர் விரும்பினர்.

சொல்வதைக் கேட்டனர்!

ஆக, பிறர் தன்னை மதிக்கும் அளவுக்கு நடந்து கொண்டான்.

நம்மை விட வித்தியாசமானவனாக இவன் இருக்கிறானே என மற்றவன் நினைத்தான்.

இவனால் நமக்குப் பலன் உண்டு என எண்ணினான்.

அதனால் காதல் பிரச்சினை முதல் கருமாரிப் பிரச்சினை வரை இவன் சொற்படியே நடந்தது.

காட்டில் வாழ்ந்த இவனுக்கு கல்விக்கூடம் தெரியாது!

கட்சித் தலைவர்களை இவன் பார்த்தது இல்லை!

மந்திரிகளைச் சந்தித்ததில்லை. அரசியல்வாதிகளை இவன் அறியவில்லை!

காட்டுக்குள் பிறந்து வளர்ந்து பல பிள்ளைகளின் தந்தையானவன்.

நாடாள்வோர் யார் என்று இவனுக்குத் தெரியாது.

தான் வாழும் காடு அரசுக்குச் சொந்தம் என்று இவனுக்குத் தெரியாது.

நாடாள்வோர் இந்தக் காட்டை கூறு போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இவன் அறிய மாட்டான்!

வேட்பாளன் எவனும் வந்ததில்லை.

வாக்காளனாக இவன் மாறவில்லை.

அதனால் அரசியல்வாதிகளைத் தெரியாது! அப்படித் தெரியாமல் வாழ்ந்ததால்தான் மக்கள் இவனை மதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மதிப்பு, இவன் அறியாமலே ஓர் அதிகாரம் இவனிடம் வந்தது!

இவன் அறியாமலே நிர்வாகத் திறமை இவனிடம் சேர்ந்து கொண்டது.

அதனால், இவன் சொல்வது சரி - செய்வது சரி என காட்டு மனிதன் நம்பினான்.

போனான், நீண்ட தூரம் சென்றும் வேட்டை கிடைக்கவில்லை.

ஒரு நகருக்குள் போய் விட்டான். அங்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.

இவனை விட வித்தியாசமாகத் தெரிந்தனர்.

நடை வேறாக இருந்தது!

உடை வேறாக இருந்தது!

உணவு வேறாக இருந்தது!

உணர்வு வேறாக இருந்தது!

எதையோ கொடுத்துப் பொருள் வாங்கும் மனிதனை இவன் வேடிக்கையாகப் பார்த்தான்!

இவனை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டமே கூடி விட்டது.

இவன் வாழ்க்கைக்கும் அவன் வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு இருந்தது.

வண்ண விளக்குகள்,

வாளிப்பான உடை,

பல நிற மனிதர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் வாகனங்கள்,

பாதையோர கடைகள்,

பார்க்கப் பலவகைப் பொருட்கள்,

உணவுகளில் கூட ஓராயிரம் ரகம்,

வேடிக்கை,

வினோதம்,

விளையாட்டு இவனுக்குப் பிடித்து இருந்தது. தன்னை அடிமைப்படுத்த ஒரு கூட்டம் இருப்பதை இவன் அறியவில்லை.

அரசியல்வாதிகளின் ஆசை வார்த்தைகள் இவனை ஏமாற்றும் என்பது இவனுக்குத் தெரியாது.

சுதந்திரமாகக் காட்டிலே வாழ்ந்த இவனுக்கு இங்கு அடிமைப்பட போகிறோம் என்பது தெரிந்திருக்க நியாயம் இல்லை.

அதனால் அடிக்கடி வந்தான். ஆசை அலைக்கழித்தது; மொத்தமாகவே வந்து விட்டான்.

வந்த பின்புதான் தெரிந்தது நாட்டு வாழ்க்கையின் நலிவு!

நாட்டு வாழ்க்கைக்கும் காட்டு வாழ்க்கைக்கும் வித்தியாசம் விரிவாகவே இருந்தது.

இங்கே அதிகாரம் பண்ணுகிறவன் அதிகாரி. நிர்வாகம் பண்ணுகிறவன் நிர்வாகி.

அதிகாரி என்பதற்கு அத்தாட்சி வேண்டும்!

அதையும் அரசு அவனுக்குக் கொடுக்க வேண்டும்! அப்போதுதான் அவன் அதிகாரம் பண்ண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகிக்கும் ஒரு நிரந்தர அத்தாட்சி தேவை. அதையும் அரசு கொடுக்க வேண்டும்! அப்போதுதான் நிர்வாகம் பண்ண முடியும்.

இங்கேதான் காட்டுக்கும் நாட்டிற்கும் வித்தியாசம் தெரிந்தது!

அங்கே அரசு இல்லை, ஆட்சி இல்லை, அத்தாட்சிப் பத்திரம் இல்லை. ஆனாலும் தன் நிர்வாகம் நன்றாக இருந்தது.

அதிகாரம் சரியாகப் பண்ணினான். அதனால், மரியாதை இருந்தது. மற்றவர் அன்பு இருந்தது.

இங்கே அதிகாரம் பண்ணுகிறவன் அதிகாரி என்ற அந்தஸ்துக்கு உரியவன் அல்லன்!

நிர்வாகம் பண்ணுகிறவனின் நிர்வாகம் தப்பாக இருக்கிறது!

எந்த வேலையைச் செய்ய வேண்டும் என அதிகாரி நியமனம் பெறுகிறானோ, அந்த வேலையைச் செய்வதில்லை. செய்யக் கூலி கேட்கிறான்!

அதாவது சம்பளம் போதாது. கிம்பளம் தா என்கிறான்!

இந்த அதிகாரியின் கீழ் வேலை செய்த ஒருவன் இறந்து விட்டான்.

இறந்து போனவனுக்குச் சேர வேண்டியதை எடுத்துப் போக அவனின் விதவை மனைவி வருகிறாள்.

அந்த விதவையிடமும் கிம்பளம் கேட்கிறான். நான் இறந்த பின்பு தன் மனைவிக்கும் இந்த நிலை வரும் என்பதை மறந்து விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55 வயது முடிந்து பென்ஷன் பணத்தை எடுத்துக் கொண்டுதான் போவேன். அதற்கிடையில் சாவு வராது என எண்ணுகிறானா?

எத்தனையோ பேரை ஏமாற்றி இருக்கிறோம். எமனையும் ஏமாற்றி விடலாம் என்ற நினைப்பா?

அந்த இலாகா வேலைக்கு நாலு பேர் தேவைப்படுகிறார்கள்.

விளம்பரப்படுத்துகிறது இலாகா.

விண்ணப்பங்கள் குவிகின்றன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு.

நூறு பேர் வந்திருக்கிறார்கள்.

மூன்று பேர் பரீட்சை நடத்துகிறார்கள்.

சென்று வாருங்கள் அறிவிக்கிறோம் என அந்த நூறுக்கும் இந்த மூன்று சொன்னது.

அடுத்த நாள் 4 பேர் வேலை செய்கிறார்கள். அந்த நாலும் முந்திய நூறுக்குள் அடங்கவில்லை.

பரீட்சை என்ற பாவலாக காட்டி அதிகாரத் துஷ்பிரயோகம் நடந்துள்ளது.

திறமை திருப்பி அனுப்பப்பட்டு "சிட்" பதவி கொடுத்துள்ளது.

அந்த நூறில் ஒன்றாவது விகிதாசாரத்திற்குள்ளும் வரவில்லை.

அரசியல்வாதி நினைத்தால் அண்டங் காக்காயும் அதிகாரி ஆகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் தேறியவன் பட்டினி கிடக்கிறான். பசைவாளி தூக்கியவன் பதவி பெறுகிறான்.

இப்படியான அதிகாரிகள் அரியாசனம் ஏறுவதால் ஆபீஸ் பியோன் ஆட்டிப் படைக்கிறான்.

அதனால் அதிகாரி பண்ண வேண்டிய வேலையை ஆபீஸ் பியோன் 50 ரூபாவில் செய்து கொடுக்கிறான்.

போலிக் கடவுச்சீட்டு,

போலி அடையாள அட்டை,

போலி பிறப்புச் சான்றிதழ்,

போலி இறப்புச் சான்றிதழ்,

போலி கல்விச் சான்றிதழ்,

போலி நற் சான்றிதழ்,

அதிகாரியின் கையெழுத்தோடு அத்தாட்சிப் பத்திரத்தை ஆர்ப்பாட்டத்தோடு எடுத்து வருகிறான். ஊன்றிப் பார்த்தால் போலி!

கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு கச்சிதமாக இருக்கிறது.

போலி விசா தர ஒரு கூட்டமே தயாராக இருக்கிறது.

வாங்கும் பொருள் கூட போலி. வியாபாரி என்பவன் எப்படியாவது விற்றுப் பணம் பண்ண விரும்புகிறான்.

காட்டுக் கிழங்கு கூட நாட்டிற்குள் நல்ல விலை போகிறது.

பளபளப்பாகத் தெரியும் ஒவ்வொரு மனிதனும் வங்கிக் கடனிலும், வட்டியிலும் மூழ்கிக் கிடக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம் - விளையாட்டு - வேடிக்கை என்று பழகிவிட்ட மனிதன், அந்த மகிழ்ச்சியை மலிவு விலைக்கு விற்க விரும்பவில்லை.

எங்கோ ஓடுகின்ற குதிரைக்கு இங்கே பந்தயம் கட்டுகிறான்.

அலுவலகத்தில் பணிபுரியும் அத்தனைபேர் கையிலும் ரேஸ் பேப்பர்.

நிர்வாகம் நிற்க முடியாமல் தள்ளாடுகிறது. காரணம், சீர் கேடு சிரம் குனிய வைத்து விட்டது.

அதிகாரத் துஷ்பிரயோகத்தால் பொருளாதாரம் நலிந்து விடுகிறது.

மாதச் சம்பளத்திற்கு கை நீட்டி நின்ற அதிகாரிகள் லட்சாதிபதி ஆகிவிட்டதாகச் செய்தித்தாள்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பள்ளி ஆசிரியர்கள் டியுசன் மேல் கவனம் இருப்பதால் பள்ளியில் படிப்பிப்பது குறைவு.

கொண்ட வேலையைக் குறிப்பறிந்து செய்யாமல் நெளிந்து வளைகிறது நிர்வாகம்.

அதிகாரங்கள் அலட்சியப்படுத்தப்பட்ட காரணத்தால் அதிகாரங்கள் அலங்கோலங்கள் ஆகிவிட்டன.

தப்புகள் தாராளமாக்கப்படுத்தப்பட்ட காரணத்தால் ஒப்பாரிகள் உயர்ந்து ஒலிக்கின்றன.

நுழையக் கூடாதது நுழைந்து விட்ட காரணத்தால் நடக்கக் கூடாதது நடந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை எண்ணிப் பார்க்கப் பதவிகள் முற்படும் போது, மக்கள் நலத்தை எண்ணிப் பார்க்க நாதி இல்லாமல் போய்விட்டது.

இதை எல்லாம் பார்த்த காட்டு மனிதனுக்கு கவலை ஏற்பட்டது.

காட்டுக்குள் இருந்தபோது களிப்போடு வாழ்ந்தேன். நாட்டுக்குள் வந்து நலிந்து விட்டேன்.

என் காட்டுக்கு எல்லை இருக்கவில்லை. இங்கு இருக்கிறது.

என் வீட்டிற்கு வேலி இருக்கவில்லை. இங்கு இருக்கிறது.

இப்படி எல்லை வகுத்துக் கொண்டவனை தொல்லை தொடர்கதை ஆக்கிவிட்டது.

இதற்குக் காரணம் அதிகார துஷ்பிரயோகம், நிர்வாகச் சீர்கேடு, இதைத் தட்டிக் கேட்காமல் தட்டிக் கொடுக்கின்ற தலைமை!

காட்டு மனிதனின் கண்கள் கலங்கின.

தான் வாழ்ந்த காட்டை நோக்கி நடந்தான்.

இவன் வாழ்ந்த காட்டைக் காணவில்லை.

அங்கே மேடை போட்டு ஒருவன் பேசிக் கொண்டிருந்தான்.

கை தட்டக் கூட்டம் காத்திருந்தது. காட்டைக் கூறுபோட்டு அதிகாரம் விற்று விட்டது. அதைக் கொண்டாடுகிறது அதிகாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப் பற்றி...



இந்நூலாசிரியர்
எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார்

மண்ணுக்குள்ளே தங்கம், கடலின் ஆழத்தில் கிடக்கும் சிப்பிக்குள்ளே முத்து, கரியே உருமாறி பூமிக்குள்ளே மறைந்திருக்கும் வைரம். இவற்றையெல்லாம் தேடி, தோண்டி எடுக்க வேண்டிய பொக்கிஷங்கள்.

இதே போன்று எமது படைப்பாளி - நம் மண்ணின் மைந்தன் 'கலைச்சுடர்' எஸ்.ஐ.எம். அப்துல் ஜப்பார் அவர்களின் வெளிக்கொணராமல் மறைந்து கிடக்கும் எத்தனையோ படைப்புகளில் ஒன்றுதான் இப்போது நம் கரங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கும் 'மனிதன்' எனும் ஆக்கம்.

சுற்றும் வரை பூமி
சுடும்வரை நெருப்பு
போராடும்வரை மனிதன்
நீ மனிதன்!!

என்றார் கவிப்பேரரசு வைரமுத்து.

அந்தப் போராட்டம் நிறைந்த மனிதனுக்குள்ளே கலந்து கிடக்கும் எத்தனையோ நிறங்களை வெளிக்கொணர்ந்து, வியக்க வைக்கும் அற்புதமான படைப்பு இந்த 'மனிதன்.'

கலைநேர்த்தி, நகைச்சுவை, வரலாறு, அரசியல், இதிகாச நிகழ்வுகள் கலந்து ஒரே கிண்ணத்தில் தரப்பட்டுள்ள இதமான குளிர்பானம் இந்த 'மனிதன்.'

கவிதைகள், நாடகங்கள், மேடைப்பேச்சுகள், கட்டுரைகள் போன்ற ஜப்பார் அவர்களின் மறைந்து கிடக்கும் அற்புதமான அத்தனை படைப்புகளும் எதிர்காலத்தில் நூலாக்கப் பெறுவது மனிதத்துவத்துக்கு செலுத்தப்படும் மரியாதையாகும்.

கற்பிட்டி வஹாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org